# தமிழ்ப் பூம்பொழில்

(முதற் பகுதி)

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
(Tamil Pandit, E. L. M. F. High School, Madras)
மங்கலம். குப்புசாமி முதலியார்
(Tamil Pandit, C. C. C. High School, Perambur)
தொகுத்தது

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 JAN 1928

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
சென்னை
1927

IPH LTD 1920

# மிழ்ப் பூம்பொழில்

## முதற் பகுதி

OFFICE OF THE REGIS
10 JAN 1928
MADRAS

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
(Tamil Pandit, E. L. M. F. High School, Madras.)

மங்கலம் குப்புசாமி முதலியார்
(Tamil Pandit, C. C. C. High School, Perambore.)

தொகுத்தது

சென்னை
இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
1927

[பதிப்புரிமை]

[விலை அணா ௬

PRINTED BY
PENROSE & Co., G. T., MADRAS.
1927

84979

# பொருளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1928
MADRAS

## செய்யுட் பாடம்

பக்கம்

| | | |
|---|---|---|
| I. | துதி கவிகள் : .... .... .... | 1 |
| II. | தமிழ்ச் சிறப்பு .... .... .... | 6 |
| III. | கதைகள் : | |
| | க. இராமர் திருமணம் (கம்பராமாயணம்) | ,, |
| | உ. பழி யஞ்சின படலம் (திருவிளையாடற் புராணம்) .... .... .... | 9 |
| | ௩. காரைக்காலம்மையார் புராணம் (பெரிய புராணம்) .... .... | 18 |
| | ச. நச்சுப் பொய்கைச் சருக்கம் (மகாபாரதம்) | 29 |
| | ரு. தமயந்தி புலம்பல் (நைடதம்) .... | 40 |
| IV. | பட்டினத்தார் தம் அன்னையார்க்கு ஈமக்கட னாற்றல் .... .... | 41 |
| V. | நீதிச் செய்யுள் : | |
| | க. நன்னெறி .... .... .... | 42 |
| | உ. நீதிநெறி விளக்கம் .... .... | 43 |
| | ௩. அறநெறிச் சாரம் .... .... | 45 |
| | ச. திருக்குறள் .... | 46 |
| | ரு. ஆசாரக் கோவை .... .... | 49 |
| VI. | தனிப்பாடல் .... .... .... | 50 |

## வசன பாடம்


க. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் 55
(வித்துவான்-கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்)

உ. கடவுள் தோன்றுதல் .... 58
(இந்நூலைத் தொகுத்தோர்)

ந. இயற்கை விநோதம் .... .... 65
(திருவாளர் T. பக்தவத்சலம் பிள்ளை அவர்கள், B.A.,)

ச. சந்தோஷம் .... .... .... 69
(தமிழ்ப்புலவர். ச. கந்தசாமி முதலியார் அவர்கள்)

ரு. மகம்மது கான் மரணம் .... .... 74
(பிரம்மஸ்ரீ. வாழ்குடை. வேங்கடராம சாஸ்திரியார் அவர்கள்)

சா. குந்தி தேவியும் கர்ணனும் .... 82
(ஸ்ரீமான். ம. வீ. ராமானுஜாசாரியார் அவர்கள்)

எ. பயமின்மை .... .... .... 90
(தமிழ்ப்புலவர். ச. கந்தசாமி முதலியார் அவர்கள்)

அ. முச்சங்கம் .... .... .... 95
(திருவாளர். நாகை. பெ. ச. இரத்தினவேலு முதலியார் அவர்கள்)

கூ. நன்றி மறவாமை .... .... 100
(வித்துவான்-அஷ்டாவதானம்-வீராசாமி செட்டியார் அவர்கள்)

ம. பஞ்ச தந்திரம்: .... .... 115
(வித்துவான். தாண்டவராய முதலியார் அவர்கள்)

# தமிழ்ப் பூம்பொழில்

(முதற் பகுதி)

## செய்யுட் பாடம்

OFFICE OF THE REGISTRAR
10 JAN 1928
MADRAS

## I. துதி கவிகள்

### தாயுமானவர் பாடல்

### பரசிவ வணக்கம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1. அங்கிங்கெ னாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடுநி றைந்ததெது? தன்னருள்வெ ளிக்குளே
அகிலாண்ட கோடிஎல்லாம்
தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகள்எலாம்
'தம்தெய்வம்' 'எம்தெய்வம்'என்(று)
எங்குந்தொ டர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது?மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது?அது
கருத்திற் கிசைந்ததுவே;
கண்டனவெ லாம்மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம். 1

—தாயுமானவர்

# திருப்புகழ்

## விநாயக வணக்கம்

குழிப்புச் சந்தம்

2. கைத்தலம் நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவன்
கற்பகம் எனவினை கடிதேகும்;
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மல்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே;
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே,
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரத
மச்சது பொடிசெய்த அதிதீரா,
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபம்ஆகி,
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே! 2

—அருணகிரி நாதர்

---

## சகல கலாவல்லி மாலை

### கலைமகள் வணக்கம்

கட்டளைக் கலித்துறை

3. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய்;பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொன் கொடியே, கனகக் குழையும்ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே, சகல கலாவல்லியே! 3

—குமரகுருபரர்

---

# நாலாயிரப் பிரபந்தம்

## திருமால் வணக்கம்

*எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்*

4. நம்ப னே,நவின் றேத்தவல் லார்கள்
நாத னே,நர சிங்கம தானாய்,
உம்பர் கோன்உல கேழும்அ ளந்தாய்,
ஊழி ஆயினாய், ஆழிமுன் ஏந்திக்
கம்ப மாகரி கோள்விடுத் தானே,
கார ணா,கட லைக்கடைந் தானே,
எம்பி ரான்,என்னை ஆளுடைத் தேனே,
ஏழை யேன்இட ரைக்களை யாயே. 4

—பெரியாழ்வார்

---

# திருமகள் கட்டளைக் கலித்துறைப் பத்து

## திருமகள் வணக்கம்

*கட்டளைக் கலித்துறை*

5. திருஎன்னும் சொல்லின் பொருள்யாவும் ஆகிச்
சிறந்தஅன்னாய்,
பொருவெண்ணற் கில்லா இழிதகை யேனைப்
புரந்திடுவாள்
மருவெண்ணம் உன்றன் மனம்உள தாயிடின்
மற்றுடன்சீர்
பொருவெண்ணற் கில்லான் எனும்வண்ணம் மேவிப்
பொலிகுவனே. 5

—கா. ர. கோவிந்தராஜ முதலியார்

---

## பெரிய புராணம்

### சிவபிரான் வணக்கம்

கலி விருத்தம்

6. உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 6

—சேக்கிழார்

---

## திருவிளையாடற் புராணம்

### தடாதகைப் பிராட்டி வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

7. செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று,
முடிபுனைந்து, செங்கோல் ஓச்சி,
முழுதுலகும் செயங்கொண்டு, திறைகொண்டு,
நந்திகண முனைப்போர் சாய்த்து,
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடம் சூட்டிச் செல்வம்
தழைவுறுதன் அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் கொள்வாம். 7

—பரஞ்சோதி முனிவர்

---

## கந்த புராணம்

### முருகக் கடவுள் வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

8. மூவிரு முகங்கள் போற்றி;
முகம்பொழி கருணை போற்றி;
எவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி; காஞ்சி

மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி ; அன்னான்
சேவலும் மயிலும் போற்றி ;
திருக்கைவேல் போற்றி; போற்றி. 8

—கச்சியப்ப சிவாசாரியார்

---

## திருவரங்கக் கலம்பகம்

### ஆழ்வார்கள் வணக்கம்

*கட்டளைக் கலித்துறை*

9. வேதம் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்த
விமலன், பொய்கை,
பூதன், மயிலையர் கோன், புகழ்ச் சேரன், புத்
தூரன், தொண்டர்
பாதம் தருந்துகள், மாமழி சைக்குமன்,
பாணன், மங்கை
நாதன், மதுர கவி, கோதை பாதங்கள்
நண்ணுதுமே. 9

—திவ்வியகவி-பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

---

## திருத்தொண்டர் புராண வரலாறு

### நால்வர் வணக்கம்

*கொச்சகக் கலிப்பா*

10. பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி ;
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி ;
வாழி திரு நாவலூர்
வன்தொண்டர் பதம்போற்றி ;
ஊழிமலி திருவாத
வூரர்திருத் தாள்போற்றி. 10

—உமாபதி சிவாசாரியார்

---

# II. தமிழ்ச் சிறப்பு

---

## திருவிளையாடற் புராணம்

*கலிநிலைத் துறை*

1. கண்ணு தல்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ், ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்,
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ? 11

2. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண் உருவாக்
கண்ட தும்,மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

—பரஞ்சோதி முனிவர்.

---

# III. கதைகள்

## க. கம்ப ராமாயணம்

### பால காண்டம்

---

### இராமர் திருமணம்

*கலி விருத்தம்*

1. மன்றலின் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்
தின்றுணை அன்னமும் எய்தி இருந்தார்;
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார். 13

2. கோமகன் முன்சனகன் குளிர் நன்னீர்,
'பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமகள் தன்னொடு மன்னுதி' என்னாத்
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான். 14

3. அந்தணர் ஆசி அருங்கலம் அன்னார்
தந்தபல் லாண்டிசை தார்முடி மன்னர்
வந்தனை வானவர் வாழ்த்தொலி போல
முந்திய சங்க முழங்கின மாதோ. 15

4. வானவர் பூமழை, மன்னவர் பொற்பூ,
ஏனையர் தூவும் இலங்கொளி முத்தம்,
தானகு நாள்மலர் என்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய திப்பார். 16

5. வெய்ய கனற்றலை வீரனும் அந்நாள்
மையறு மந்திர மும்மை வழங்கா,
நெய்யமை ஆவுதி யாவையு நேர்ந்தே,
தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான். 17

6. வலங்கொடு தீயை வணங்கினர் வந்து,
பொலம்புரி நூலவர் செய்பொருள் முற்றி,
இலங்கொளி அம்மி மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டார். 18

7. மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் தாள்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி யைக்கொடு நன்மனை புக்கான். 19

8. ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை; ஆர்த்தன பல்லாண்(டு);
ஆர்த்தன வண்டினம்; ஆர்த்தன வேலை. 20

9. கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி,
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள்தொழ லோடும்: 21

10. அன்னமும் அன்னவர் அம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள்; சிந்தை மகிழ்ந்தார்;
'கன்னி அருந்ததி காரிகை காணம்
நன்மக னுக்கிவள் நல்லணி' என்றார். 22

11. எண்ணில கோடிபொன், எல்லையில் கோடி
வண்ண அருங்கலன், மங்கையர் வெள்ளம்,
கண்ணகல் நாடுயர் காசொடு தூசும்
பெண்ணின் அணங்கனை யாள்பெறு'கென்றார்.

12. பங்குனி உத்தரம் ஆன பகற்போ (து)
அங்கண் இருக்கினில் ஆயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தால்
மங்கல அங்கி வசிட்டன் வகுத்தான். 24

## இளையவர் திருமணம்

13. வள்ளல் தனக்கிளை யோர்கள் தமக்கும்
எள்ளலில் கொற்றவன், 'எம்பி அளித்த
அள்ளல் மலர்த்திரு அன்னவர் தம்மைக்
கொள்ளும்' எனத்தம ரோடு குறித்தான்.

14. கோய்நிறை தார்க்குவ சத்துவ சப்போர்
நெய்ந்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்;
மைந்நிறை கண்ணினர் வானுறை நீரார்
மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார். 26

—கம்ப நாடர்

## உ. திருவிளையாடற் புராணம்

### பழி யஞ்சின படலம்

கொச்சகக் கலிப்பா

1. செய்யேந்து திருப்புத்தூர் நின்றுமொரு
செழுமறையோன்
பையேந்து முகத்தினளா மனைவியொடும்
பானல்வாய்க்
கையேந்து குழவியொடுங் கடம்புகுந்து
மாதுலன்பால்
மையேந்து பொழில்மதுரை நகர்நோக்கி
வருகின்றான். 27

2. வருவான்உண் ணீர்வேட்டு
வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவுமொரு
பேராலின் நீழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி
யுடன்இருத்தி, நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை
இருக்குமிடந் தலைப்படுமுன்: 28

3. இலைத்தலைய பழுமரத்தின்
மிசைமுன்னாள் எய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி
கோப்புண்டு கிடந்ததுகால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை
வினையுலப்ப ஆங்கிருந்த
வலைத்தலைய மான்நோக்கி
வயிறுருவத் தைத்தன்றால்! 29

உடனே அவள் உயிரிழந்தனள். அவ்வேளை வேடனொருவன் கையிற் சிலை தாங்கி, இளைப்பாற அவ்வால மரத்தின் நீழலில் வந்து

தங்கினன். நீர் கொணரச் சென்ற அந்தணன், நீரொடு மீண்டு, குழவியுடன் இரத்த வெள்ளத்திற் கிடந்த தன் மனைவியைக் கண்டு, மனஞ் சாம்பி, ‘இப் பெண்பழி யேற்றோர் யாவர்?’ எனச் சுற்றி நோக்கி, ஆண்டு வில்லுங் கையுமாய் நின்ற வேடனைக் கண்ணுற்று,

கலிநிலைத் துறை

4. ‘காப்பணி தாளன் வாளொடு
வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோல் எறிடு
வில்லன் கொலைசெய்வான்
எற்பன கைக்கொண் டிவ்விடை
நின்றான் இவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி
ருண்டு பழிபூண்டான்.’ 30

5. என்ன மதித்தே, ‘எடா!
வேடா! என்னேழை
தன்னை வதைத்தாய் நீயே!’
என்னாத் தழல்கால்கண்
மின்னல் எயிற்றுக் கூற்றென
வல்வாய் விட்டார்த்து,
மன்னவன் ஆணைப் பாசம்
எறிந்து வலித்தேகும். 31

6. மாண்டவ னைத்தன் வெந்நிடை
இட்டான்; மகவொக்கல்
தாண்ட அணைத்தான்; தாய்பால்
வேட்டழு தன்சேயைக்
காண்டொறும் விம்மாக் கண்புனல்
சோரக் கடிதேகா,
ஆண்டகை மாறன் கூடல்
அணைந்தான் அளியன்றான். 32

7. மட்டவிழ் தாரான் வாயில்
மருங்கே வந்தெய்தா,
உட்டுகள் இல்லா வேடனை
முன்விட் டுயிரன்னாள்
சட்டக நேரே விட்டெதிர்
மாறன் தமர்கேட்பக்
கட்டழல் சிந்தா முறையிடு
கின்றான் கையோச்சா: 33

8. ‘கோமுறை கோடாக் கொற்றவர்
ஏறே, முறையேயோ!
தாமரை யாள்வாழ் தண்கடி
மார்பா, முறையேயோ!
மாமதி வானோன் வழிவரு
மைந்தா, முறையேயோ!
தீமைசெய் தாய்போல் செங்கை
குறைத்தாய், முறையேயோ! 34

‘பிறங்கும் கோலால் மாறடு
கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னருள்
ஆணை உலகெங்கும்
அறங்குன் றாவாக் காப்பதை
யென்ப அஃதியாதிம்
மறங்குன் றாதான் செய்கொலை
காவா வழி?’ என்றான். 35

10. வாயில்உ ளார்தம் மன்னவன்
முன்போய், ‘மன்னா, நம்
கோயிலின் மாடோர் வேதியன்,
‘மாதைக் கொலைசெய்தான்

ஆயினன்' என்றோர் வேடனை
முன்விட் டவிந்தானைத்
தாயினன் வந்திங் கிட்டயர்
கின்றான் தமி'என்றார். 36

11. இறைமகன் அஞ்சா, 'என்குடை
நன்றால்! என்காவல்
அறமலி செங்கோல் அஞ்சுப
யந்தீர்த் தரசாளும்
முறைமையும் நன்றால்! மண்கலி
மூழ்க முயன்றேந்தும்
பொறைமையு நன்றால்!' என்று
புலந்து, புறம்போந்தான். 37

12. வேதியன் நிற்குந் தன்மை
தெரிந்தான், மெலிவுற்றான்;
'சாதியின் மிக்காய், வந்த
துனக்கென்? தளர்கின்றாய்
ஓதுதி' என்னக் காவல
னைப்பார்த் துரைசான்ற
நீதியு ளாய்,கேள்:' என்றுரை
செய்வான் நிகழ்செய்தி: 38

13. 'இன்றிவ ளைக்கொண் டோர்வட
நீழல் இடையிட்டுச்
சென்றுத ணீர்கொண் டியான்வரு
முன்னிச் சிலைவேடன்
கொன்றயல் நின்றான்' என்றுலை
யூட்டுங் கொலைவேல்போல்
வன்றிறல் மாறன் செவிநுழை
வித்தான் மறையோனால். 39

14. அந்தணன் மாற்றந் தன்னையும்
உட்கொண் டறநோக்கும்
சந்தன வெற்பன் மறவனை
நோக்கத் தாழ்ந்தன்னான்,
'எந்தை, பிரானே, நாயடி
யேன்இன் றெய்ப்பாற
வந்து புகுந்தேன் அந்த
மரத்தின் மருங்கோர்சார். 40

15. 'ஐயே, நானுங் கொன்றவன்
அல்லேன் ; கொன்றாரைக்
கையேன் வேறுங் கண்டிலேன்'
என்றான். 'இவள் ஆகத்(து)
எய்யே றுண்ட வாறெவன் ?'
என்றார் எதிர்நின்றார்.
'மெய்யே ஐயா, யானறி
யேன்இவ் விளைவெ'ன்றான். 41

16. 'இக்கொலை செய்தான் யான்அலன்
என்னா துளனென்னத்
தக்கவ னேயோ? தறுகண்
மறவன் உரைமெய்யோ ?
சிக்கவொ றுத்தால் அல்லதை
உண்மை செப்பான்' என்(று)
ஒக்கவு ரைத்தார் மந்திரர்
உள்ளார் பிறரெல்லாம். 42

17. மன்னன் தானும் 'மற்றது
செய்ம்மின்' எனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர்
கேட்கப் பிழையில்லான்

முன்னஞ் சொன்ன சொற்பெய
ரானைப் மொழியாநின்(று)
'இன்னந் தீரத் தேருமின்'
என்றான். என்செய்வான்! 43

18. 'ஆற்றவொ றுக்குந் தண்டமும்
அஞ்சான்; அறைகின்ற
கூற்றமும் ஒன்றே; கொன்ற
குறிப்பு முகந்தோற்றான்.
மாற்றவ ரேயோ? மாவோ?
புள்ளோ? வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற
வல்லான் கொலைசெய்வான்! 44

19. 'கைதவ னும்இக் கானவ
னேயோ? பிறரேயோ?
செய்தவர் யாரே இக்கொலை?
வேட்டஞ் செய்தோர்மா
எய்தவி லக்கில் தப்பிய
கோல்தான் ஏறுண்டிம்
மைதவழ் கண்ணாள் மாய்ந்தன
ளேயோ! அறியேனால்!' 45

என்றெண்ணிய மன்னன், இதன் உண்மையை யறிவான் தன்னமைச்சரை வேண்டலும், அவர்கள், 'மன்னரே, இஃதெமது நூலாராய்ச்சிக்கு எட்டுவதன்று; ஆதலின், நம் குல தெய்வமாய சோமசுந்தரக்கடவுளை வணங்கி இதன் உண்மையை உணர்க,' என்று கூறினார்கள்.

20. வேந்தர்கள் சிங்கம் வேதிய
னைப்பார்த் 'திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலை
ஒழிப்பேன். அஞ்சேல்!நின்

ஏந்திழை ஈமக் கடனிறு
விப்போ ஒ'தன்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற
வோனைச் சிறைசெய்தான். 46

21. மின்னனை யாள்தன் செய்கடன்
முற்றா மீண்டோனைத்
தன்னமர் கோயில் கடைவயின்
வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் தங்கள்
குடிக்கோர் குலதெய்வம்
என்னவிருந்தார் அடிகள்
பணிந்தான், இதுகூறும் : 47

கொச்சகக் கலிப்பா

22. 'மன்றாடு மணியே,இம் மறவன்றன்
பார்ப்பனியைக்
கொன்றானோ? பிறர்பிறிதால் கொன்றதோ?
இதுஅறநூல்
ஒன்றாலும் அளப்பரிதாக் கிடந்ததால்,
உன்னருளால்
என்றாழ்வு கெடத்தேற்றாய் !' என்றிரந்தான்.
அவ்வேலை : 48

23. 'திருநகரின் புறம்பொருசார் குலவணிகத்
தெருவின்கண்
ஒருமனையில் மணமுளதங் கந்தணனோ
டொருங்குநீ
வருதி;உன துளந்தேறா மாற்றமெலாந்
தேற்றுதும்'என்
றிருவிசும்பின் அகடுகிழித் தெழுந்ததால்
ஒருவாக்கு. 49

மன்னவன் அங்ஙனமே அற்றைக் கங்குற் போந்து மாறு வேடம் புனைந்து, மறையவனுடன் மணவீடடைந்து, ஒருபுறம் அமர்ந்திருந் தனன்.

24. அன்றிறைவன் அருளாலங் கவர்கேட்க
அம்மனையின்
மன்றல்மகன் தனக்களந்த நாள்உலப்ப
மறலியிருள்
குன்றம்இரண் டெனவிடுத்த கொடும்பாசக்
கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரில் ஒருவன்இது
வினவுமால் : 50

25. 'இன்றேயிங் கிவனுயிரைத் தருதிரென
இரும்பகட்டுக்
குன்றேறுங் கோனுரையால் கொள்வதேவன் ?
பிணியுடம்பில்
ஒன்றேனும் இலனொருகா ரணமின்றி
உயிர்கொள்வ(து)
அன்றே? என் செய்தும்?' என, மற்றவன்ஈ
தறைகிற்பான் : 51

26. 'ஆற்றால்ஏ றுண்டகணை அருகோதுங்கும்
பார்ப்பனியைக்
காற்றால்வீழ்த் தேவ்வாறு கவர்ந்தேம்? அப்
படியிந்தச்
சாற்றார வாரத்தில் தாம்பறுத்துப்
புறநின்ற
ஈற்றாவை வெருளவிடுத் திவனுயி
கவர்'கென்றான். 52

27. அந்தமொழி கேட்டரசன்,
 ' அருமறையோய், கேட்டனையோ
இந்தமொழி ?' எனப்பனவன்,
 ' இவன்இவ்வா றிறந்தால்என்
பைந்தொடியாள் இறந்ததுமப்
 படியே;என் மனக்கவலை
சிந்தவிது காண்பேன் 'என்
 றொருங்கிருந்தான் தென்னனொடும். 53

28. ஒட்டியபல் கிளைதுவன்றி
 ஒல்லொலிமங் கலந்தொடங்கக்
கொட்டியபல் லியமுழங்கக்
 குழுமியஒ சையின்வெகுண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக்
 கற்றாவொன் றெதிர்ந்தோடி
முட்டியதால் மணமகனை;
 முடிந்ததால் அவனாவி. 54

29. மணமகனே பிணமகனாய்,
 மணப்பறையே பிணப்பறையாய்,
அணியிழையார் வாழ்த்தொலிபோய்
 அழுகைஒலி யாய்க்கழியக்
கணமதனில் பிறந்திறுமிக்
 காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவர்உணர்
 வொன்றுமிலார்க் கொன்றுமிலை. 55

30. கண்டான்அந் தணன்;'என்ன
 காரியஞ்செய் தேன் !'எனத்தன்
வண்டார்பூங் குழல்மனைவி
 மாட்சியினுங் கழிதுன்பங்

கொண்டான்.மற் றவனெடுந்தன்
கோயில்புகுந் தலர்வேப்பந்
தண்டாரான் அமைச்சர்க்கும்
பிறர்க்குமிது சாற்றினன். 56

பின்னர், மறு மண முடித்துக்கொள்ளப் பொருளீந்து மறையவனை விடுத்து, சிறை புகுந்த மறவனையும் சிறை விடுத்து, தான் ஆராயாது செய்த தண்டத்தைப் பொறுத்துக்கொள்ள அவனை வேண்டி, அவனுக்கு வேண்டுவன அளித்து அவனைப் போக்கிப் பின் ஆலவாய் அழல் நிறக் கடவுளாகிய சொக்கலிங்கப் பெருமானார் ஆலய மடைந்து,

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

31. 'ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம்
அடிகள்நீர் அரும்பழி அஞ்சு
நாதராய் இருந்தீர்! எந்தையார்க் குண்டே
நான்செயத் தக்கதொன்(று)?' என்னக்
காதலிற் புகழ்ந்து, பன்முறை பழிச்சிக்
கரையில்மா பூசனை சிறப்பித்(து),
ஏதம தகற்றி, உலகினுக் குயிராய்
இருந்தனன் இறைகுலோத் துங்கன். 57

—பரஞ்சோதி முனிவர்

---

## ந. பெரிய புராணம்

### காரைக்கா லம்மையார் புராணம்

கொச்சகக் கலிப்பா

1. மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி, ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் **காரைக்கால்.**

2. வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்தனார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.

அவ்வம்மையார் தளர் நடைப் பருவந் தொடங்கியே அரனாரிடத்து அன்புடையாராய் ஒழுகி வந்தனர். பின்னர் அவ்வம்மையார் மணப்பருவ முற்றுத் திகழ்தலும், தொல்குடி வணிகர் தனதத்தரை யடைந்து மகட் பேசத் தொடங்குவா ராயினர்.

3. நீடியசீர்க் கடல்நாகை நிதிபதியென் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபில் சேயிழையை மகட்பேசி
மாடமலி காரைக்கால் வளநகரின் வரவிட்டான். 60

மணம் பேச வந்த அறிஞர்கள், புனிதவதியாரை நிதிபதி மைந்தன் **பரமதத்தன்** என்பானுக்கு மணம் பேசி முடித்துப் பின்னர் மரபினர் பலர்க்கும் மணவோலை போக்கித் திருமணத்திற்குரிய நன்னாளில் மண மகனைக் காரைக்காலுக்கழைத்து வந்தார்கள்.

4. அளிமிடைதார்த் தனதத்தன்
அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே
செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத்
தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
கலியாணம் செய்தார்கள். 61

5. ஆங்கவன்தன் இல்வாழ்க்கை
அருந்துணையா யமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும்
பொருவிடையார் திருவடிக்கீழ்

ஓங்கியஅன் புறுகாதல்
ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின்
பண்புவழா மையிற்பயில்வார். 62

6. நம்பரடி யாரணைந்தால்
நல்லதிரு அமுதளித்தும்,
செம்பொன்னும் நவமணியும்
செழுந்துகிலும் முதலான
தம்பரவி னல்அவர்க்குத்
தகுதியின்வேண் டுவகொடுத்தும்,
உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகுநாள். 63

சிலர் பரமதத்தனைக் காண வந்து, அவற்குத் தீங்கனியாம் மாங்கனி இரண்டு ஈந்தேகினர். அவன் அவற்றை மனைவியாரிடம் சேர்ப்பித்தனன்.

7. கணவன்தான் வரவிடுத்த
கனியிரண்டும் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தல்
மாதரார் வைத்ததன்பின்,
பணஅரவம் புனைந்தருளும்
பரமனர் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினல்
ஒருவர்மனை உட்புகுந்தார். 64

8. வேதங்கள் மொழிந்தபிரான்
மெய்த்தொண்டர் நிலைகண்டு,
'நாதன்தன் அடியாரைப்
பசிதீர்ப்பேன்' எனநண்ணிப்

பாதங்கள் விளக்கநீர்
முன்னளித்துப், பரிகலம்வைத்(து),
ஏதந்தீர் நல்விருந்தா
இன்னடிசில் ஊட்டுவார் : 65

9. இல்லாளன் 'வைக்க'எனத்
தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள்
இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து
படைத்து,மன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார்
தமைஅமுது செய்வித்தார். 66

அமுது செய்தருளிய திருத்தொண்டர், அயர்வு நீங்கி, அம்மையார் செயலுவந்து செல்லலும், பரமதத்தன் இல்லம் போந்தனன். அம்மையார் அவன் நீராடிய பின்னர் அவனுக்கு உணவு படைத்து, மற்றொரு மாங்கனியைக் கொணர்ந்து, அவன் கலத்திட்டனர்.

10. மனைவியார் தாம்படைத்த
மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை
ஆராமைத் தார்வணிகன்,
'இனையதொரு பழமின்னம்
உளததனை இடுக'என,
அனையதுதாம் கொண்டுவர
அணைவார்போல் அங்ககன்றார். 6

11. அம்மருங்கு நின்றயர்வார்
அருங்கனிக்கங் கென்செய்வார் !
மெய்ம்மறந்து நினைந்துற்ற
இடத்துதவும் விடையவர்தாள்

தம்மனங்கொண் டுணர்தலுமே
அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த
ததிமதுரக் கனியொன்று. 68

12. மற்றதனைக் கொடுவந்து
மகிழ்ந்திடலும், அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேல்
படவுளதா யிட, 'இதுதான்
முற்றருமாங் கனியன்று;
மூவுலகில் பெறற்கரிதால்;
பெற்றதுவே றெங்'கென்று
பெய்வளையார் தமைக்கேட்டான். 69

அது கேட்ட அம்மையார், இருதலைக் கொள்ளி எறும்பென விதிர்ப்புற்று, செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தால், அரனார்தம் அடி வணங்கி, உண்மையை உரைத்தனர்.

13. 'ஈசனருள்' எனக்கேட்ட,
இல்லிறைவன் அதுதெளியான்,
வாசமலர்த் திருவனையார்
தமைநோக்கி, 'மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான்
திருவருளேல், இன்னமுமோர்
ஆசில்கனி அவனருளால்
அழைத்தளிப்பாய்' எனமொழிந்தான். 70

14. பாங்ககன்று மனைவியார்
பணியணிவார் தமைப்பரவி,
'ஈங்கிதளித் தருளீரேல்,
என்னுரைபொய் யாம்'என்ன,

மாங்கனியொன் றருளால்வந்
தெய்துதலும், மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே
அதிசயித்து வாங்கினன். 71

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

15. வணிகனுந் தன்கைப் புக்க
மாங்கனி பின்னைக் காணான்,
தணிவரும் பயமேற் கொள்ள
உள்ளமும் தடுமா றெய்தி,
அணிகுழ லவரை வேறோர்
அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்கும் சொல்லான்,
தொடர்வின்றி ஒழுகு நாளில்: 72

அவன், அம்மையாரை விட்டுநீங்க எண்ணி, அயல்நாடு சென்று அருநிதியந்தேட விழைவான்போல் நடித்து, ஒரு கப்பலில் பொருளேற்றிக் கடல்மேற் போயினன். போனவன் வாணிபஞ் செய்து பெரும்பொருள் திரட்டி, பாண்டிநாடடைந்து, ஆங்கொரு வணிகன் மகளை மணந்து, ஒரு புதல்வியைப் பெற்று, அம்மையாரைத் தன் நினைவினி விருத்தி, அப்பெண்ணுக்கு அம்மையார் திருப்பெயரிட்டு, இனிது வாழ்ந்துவர லாயினன். புனிதவதியாரும் காரைக்காலில் மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்து வந்தனர்.

16. 'விளைவளம் பெருக்க வங்க
மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ் பாண்டி நாட்டோர்
மாநகர் தன்னில் மன்னி,
அளவில்மா நிதியம் ஆக்கி,
அமர்ந்தினி திருந்தான்' என்று
கிளரொளி மணிக்கோம் பன்னார்
கிளைஞர்தாம் கேட்டா ரன்றே. 73

17. அம்மொழி கேட்ட போதே
அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி,
அவன்நிலை தாமுங் கேட்டு,
மம்மர்கொள் மனத்தர் ஆகி,
'மற்றவன் இருந்த பாங்கர்ச்
செம்மைகொள் ஒழுக்கி னாளைச்
சேர்த்திடல் கருமம்,' என்றார். 74

பின்னர் அவர்கள் அம்மையாரைச் சிவிகையி லேற்றிச் சென்று, பரமதத்தனை யடைந்து, அம்மையாரை அழைத்து வந் திருப்பதை அவனுக்குத் தெரிவித்தார்கள்.

18. வந்தவர் அணைந்த மாற்றம்
கேட்டலும், வணிகன் தானும்
சிந்தையில் அச்சம் எய்திச்
செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு,
பயந்தபெண் மகவி னோடும்
'முந்துறச் செய்வேன்' என்று
மொய்குழ லவர்பால் வந்தான். 75

19. தானுமம் மனைவி யோடும்
தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற
மனைவியார் அடியில் தாழ்ந்தே
'யானும தருளால் வாழ்வேன்;
இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்'
என்றுமுன் பணிந்து நின்றான். 76

20. கணவன்தான் வணங்கக் கண்ட
காமர்பூங் கொடிய னாரும்
அணைவுறும் சுற்றத் தார்பால்
அச்சமொ டொதுங்கி நிற்ப,
உணர்வுறு கிளைஞர் வெள்கி,
'உன் திரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்,நீ
வணங்குவ தென்கொல்?' என்றார். 77

21. மற்றவர் தம்மை நோக்கி,
'மானுடம் இவர்தாம் அல்லர்.
நற்பெருந் தெய்வம் ஆதல்
நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்ம்மின்,' என்றான். 78

22. என்றபின் சுற்றத் தாரும்,
'இதுவென்கொல்!' என்று நின்றார்.
மன்றலங் குழலி னாரும்
வணிகன்வாய் மாற்றம் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தம்
குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கின் மிக்க
உணர்வுகொண் டுரைசெய் கின்றார். 79

23. 'ஈங்கிவன் குறித்த கொள்கை
இது; இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங் குன்பால்

ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும்' என்று
பரமனைப் பரவி நின்றார். 80

24. ஆனவப் பொழுது மன்றுள்
ஆடுவார் அருளி னாலே
மேனெறி உணர்வு கூர,
வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம்
உதறி,எற் புடம்பே யாகி,
வானமும் மண்ணும் எல்லாம்
வணங்குபேய் வடிவம் ஆனார். 81

25. மலர்மழை பொழிந்த தெங்கும்;
வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம,
உம்பரும் முனிவர் தாமும்
குலவினர் ; கணங்கள் எல்லாம்
குணலையிட் டன;முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாரும்
தொழுதஞ்சி அகன்று போனார். 82

26. உற்பவித் தெழுந்த ஞானத்
தொருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி
அப்பொழு தருளிச் செய்வார்,
'பொற்புடைச் செய்ய பாதப்
புண்டரி கங்கள் போற்றும்
நற்கணத் தினிலொன் றானேன்
நான்,' என்று நயந்து பாடி: 83

27. வடதிசைத் தேசம் எல்லாம்
மனத்தினும் கடிதிற் சென்று,
தொடையவிழ் இதழி மாலைச்
சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பின்
பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து, பார்மேல்
தலையினால் நடந்து சென்றார். 84

28. தலையினால் நடந்து சென்று,
சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது
மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிமந் திங்கள் கண்ணிக்
கண்ணுதல் ஒருபா கத்துச்
நிலைநுதல் இமய வல்லி
திருக்கண்ணோக் குற்ற தன்றே. 85

29. அம்பிகை திருவுள் ளத்தின்
அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித்,
'தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மான்,ஓர் எற்பின்
யாக்கைஅன் பென்னே ?' என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு
நாயகர் அருளிச் செய்வார் : 86

30. 'வருமிவள் நம்மைப் பேணும்
அம்மைகாண் ; உமையே, மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப்
பெற்றனள்,' என்று பின்றை

அருகுவந் தணைய நோக்கி,
‘அம்மையே,’ என்னும் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார். 87

31. அங்கணர், ‘அம்மை யே,’ என்
றருள்செய, ‘அப்பா,’ என்று
பங்கயச் செம்பொன் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாரும்
தாமெதிர் நோக்கி, ‘நம்பால்
இங்குவேண் டுவதென்?’ என்ன,
இறைஞ்சிநின் றியம்பு கின்றார்: 88

32. இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்:
‘பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அரவா,நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க,’ என்றார். 89

33. கூடுமா றருள்கொ டுத்துக்,
‘குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்
நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண்
டானந்தம் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை,’ என்றார்,
பரவுவார் பற்றாய் நின்றார். 90

—சேக்கிழார்

# ஆரணிய பருவம்

## நச்சுப் பொய்கைச் சருக்கம்

*அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்*

1. சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில்
திரட்டிய நறுவெண்ணெய்
ஆயர் மங்கையர் இடவிட அமுதுசெய்
தாடிய திருக்கூத்தும்
நேய முங்குறு முறுவலும் புரிந்துபார்த்
தருளிய நெடுங்கண்ணும்
மாய வன்திரு வடிவமும் அழகுமென்
மனத்தைவிட் டகலாவே. 91

2. வண்டு சிந்திய மதுத்துளி முகில்பொழி
மழைத்துளி யொடுஞ்சேர்ந்து
கண்டு சிந்தையும் நயனமும் உருகுபைங்
கானிடைக் கழிகேள்வி
விண்டு சிந்தன்என் றெருமுனி அருந்தவ
விபினம்மே வினராகிக்
கொண்டு சிந்தனை அறஇருந் தனர்குலக்
குந்திமுன் பயந்தோரே. 92

3. ஆண்டு மற்றவர் உறைதரு காலையில்
அரவவெங் கொடியோனும்
மூண்ட முற்பொறி கன்றிய மனத்தினர்
மூவரும் உடன்முன்னி,
'மீண்டும் இப்புவி வேண்டுவர் இருக்கின்நாம்
விரகுடன் முற்கோலிப்
பாண்டு புத்திரர்க் கோறும்'என் றருளிலாப்
பாவியர் துணிந்தாரே. 93

அங்ஙனந் துணிந்த பின்னர், துரியோதனன் தவத்தி லுயர்ந்த **காளமா முனி**வரை யழைப்பித்துத் தன் உள்ளக் கருத்தை யவர்க் குரைத்து, ஒரு வேள்வி யியற்றி அதனால் பாண்டவரைக் கொல்லு மாறு அவரை வணங்கி வேண்டினன். முனிவர், அவனை நோக்கி,

4. ‘எண்வ கைப்பெருந் திசையினும் நினதுபேர்
இசையிலாத் திசையில்லை;
மண்ணா னத்தும்நின் தனிக்குடை நிழலிலே
மனுமுறை மையின்வாழும்;
கண்ணால் உற்றதிக் கருமம்நீ எக்குறை
கண்டு? வெங் கழற்காலாய்,
விண்ண கத்துநான் ஏற்றுதல் புரியினும்
வீவரோ வீவில்லார்? 94

5. ‘தொடங்கி யான்புரி தீவினை என்னையே
சுடுவதல் லதுகொற்ற
மடங்கல் போல்பவர் தங்கள்மேல் செல்லுமோ?
மாயவன் இருக்கின்றான்!
இடங்கொள் பாரகம் பெறுவதற் கெண்ணும்நின்
இச்சையின் படியேகி,
விடங்க ளாலுயிர் ஒழிப்பவர்க் கொத்துநான்
வீவதே மெய்’என்றார். 95

பின்னர், துரியோதனன் முதலானோர் அவரைத் தங்கருத்திற் கியையச் செய்து வேள்விக்கு வேண்டும் பொரு ளளித்துப் போக்கி னர். முனிவர் கான் சென்று வேள்வி யியற்றலும், அதிலிருந்து அவர் திடுக்கிடும்படி பூதமொன் றெழுந்தது.

வேறு

6. இப்பால் இவ்வா றேமஞ்செய்
திவரிப் பூதம் இனிதெழுப்ப,
அப்பால் இருந்த வனசரிதர்
ஐவர்க் கமைந்த வாறுரைப்பாம்:

முப்பா லினுக்கும் முதற்பாலாய்
        மும்மைப் புவனங் களுங்காக்கும்
தப்பா வாய்மை அறக்கடவுள்
        அறிந்தான். எண்ணம் தப்புவிப்பான் : 96

7. தன்மைந் தனுமத் தம்பியரும்
        சரியா நின்ற தபோவனத்து
நன்மைந் தரிலோர் முனிமைந்தன்
        நன்னா லுடன்பூண் அசினத்தை
வின்மைந் தரையும் மதியாமல்
        விரைந்துட் புகுந்து விசைத்தகல்வான்
தொன்மைந் தனைப்போல் ஒருமைகொண்
        டோடிற் றென்னல் சொலவுண்டோ? 97

8. மறைவாய்ச் சிறுவன், 'கலைத்தோலை
        மான்கொண் டோடி வானிடையில்
பொறைவாய்ப் புகுந்த தபயம்'எனப்
        புகுந்தாங் கழுது புலம்புதலும்
நறைவாய்த் தொடையல் அறன்மகனும்
        இளைய வீரர் நால்வருந்தம்
துறைவாய்ச் சிலையோ டம்பேந்தித்
        தொடர்ந்தார் அதனைச் சூழ்புலிபோல். 98

9. அகப்பட் டதுபோல் முன்னிற்கும் ;
        அருகெய் தலுங்கூர் ஆசுகம்போல்
மிகப்பட் டோடும் ; தோன்றாமல்
        வெளிக்கே ஒளிக்கும் ; விழியிணைக்கும்
முகப்பட் டிடுமீண் டைவருந்தம்
        முரண்தோள் வன்மை தளர்வளவும்
தகைப்பட் டொழிந்தார் ; அதிலாசை
        ஒழிந்தார் இந்திர சாலமென. 99

10. 'கானீ திவர்க்குத் தலைதெரியாக்
கானம் ; கருத்து மிகக்கலங்கிப்
பானீ யத்துக் கைவருமெய்
பதையா நிற்பர்' எனவறிந்து,
தூநீர் நச்சுச் சுனையாய்,அச்
சுனைசூழ் வரவோர் தொன்மரமாய்,
யானீ அவனென் றெண்ணாமல்
எல்லாம் ஆனேன் இருந்தானே. 100

அப்போது தருமரும் அவர் தம்பியரும் நீர் வேட்கை யுடைய ராயினர். தருமர் நீர் தேடிக் கொணருமாறு நகுலனை யேவினர். நகுலன் நீர் தேடிச்சென்று, நச்சுப் பொய்கையை நண்ணி, நீரருந்தி மாண்டனன். அதனை யுணராத தருமர் தமது மற்றத் தம்பியர் மூவரையும் தனித்தனி யனுப்ப, அவர்களும் அங்ஙனமே சென்று நீரருந்தி மாண்டார்கள். அவர்களுள் வீமன் தான் நச்சுநீர் அருந்துவதற்குமுன், தருமர் அங்கு வந்தால் தெரிந்துகொள்ளும்படி, தனக்குந் தன் தம்பியர்க்கும் நேர்ந்த இறப்பின் காரணத்தை யவ்விடத்தில் மணலில் எழுதிவைத்துவிட் டிறந்தனன்.

வேறு

11. ஈங்கிவர் உயங்கி வீழ்ந்த
எல்லையில் எரிசெய் ஓமத்(து)
ஆங்கவண் எழுந்த பூதம்
அம்முனி தன்னை நோக்கிப்,
'பாங்குடன் புரியும் ஏவல்
பணித்தருள்' என்ன, நெஞ்சில்
தீங்கிலா முனியும் பூத
அரசுடன் செப்பு வானே : 101

12. 'நின்றிடா திமைப்பில் குந்தி
மைந்தராய் நெடிய கானில்
துன்றிடா வைகும் வேந்தும்
துணைவரும் இருந்த சூழல்

சென்றிடா ஒன்றாய் ஐந்து
செயற்கையாம் உடலைச் சேரக்
கொன்றிடா வருதி' என்று
கூறிய வுறுதி கேளா: 102

அப்பூதம் முனிவரை நோக்கி, 'ஐவர் என் கண்ணுக் ககப்படா ராயின், உன்னையே கொல்வேன்,' என்று கூறிச் சென்றது. அப்பொழுது தருமர், நீர் கொணரச் சென்ற தம்பியர் மீளாமைக்கு வருந்தி, ஆங்கொரு சந்தனத் தருவின்கீழ் உயிரற்ற பிணம்போல் சோர்ந்து கிடந்தனர். அது கண்ட பூதம்,

13. 'சிறந்தமெய்ந் நிழல்போல் சூழுந்
துணைவரும் சேர விட்டுத்
துறந்தனர் போலும்! யாண்டுந்
துப்பிலா வெப்பந் தன்னால்
இறந்தனன் இவனும்; மற்றிங்
கென்செய்வேன்?' என்றென் றெண்ணி,
நிறைந்தநீர்ச் சுனையின் மற்றை
நிருபர்நால் வரையும் காணா: 103

14. 'பச்செனும் புனலால் மிக்க
பங்கயச் சுனையும் கொல்லும்
நச்சுவெஞ் சுனையே போலும்;
நால்வரும் சேர மாண்டார்
இச்சுனை அருந்திப் போலும்!
என்னினைந் தென்ன செய்தார்?
நிச்சயம் கொடிது! கெட்டேன்!
இந்தநிட் டூரம் என்னே! 104

15. 'காவலன் வார்த்தை கேட்டுக்
காளமா முனிவன் என்னும்
நாவலன் ஓமத் தீயில்
நம்மையுற் பவித்து விட்டான்;

மேவலர் கொல்லு முன்னே
வீந்தனர் ; இந்தப் பாவம்
கேவலம் அல்ல' என்று
கிளர்சினம் மூண்டு, மீண்டே : 105

16. 'காலங்கள் மூன்றும் எண்ணும்
கடவுள்நீ கலக்கம் எய்தி
ஞாலங்கொள் நசையின் இல்லா
நயனிதன் மகன்சொல் கேட்டுச்
சீலங்கொள் வாய்மை யாய்,செந்
தீயெழு கானில் சின்னீர்
ஆலங்கொல் பான்மை யாரை
ஆர்கொல்வான் அருளிச் செய்தாய் ? 106

17. 'பூண்டவெள் ளரவத் தோடு
புனைமதி வேணி யார்க்குத்
தாண்டவ நடனம் செய்யத்
தக்கதோர் தழல்வெங் கானில்
பாண்டவர் தம்மைக் கொல்லப்
பணித்தனை ; ஒருகால் ஆவி
மாண்டவர் பின்னும் பின்னும்
மாள்வரோ? மதியி லாதாய் ! 107

18. 'நீயிதற் கிலக்க மாகி
நின்றனை !' என்று கோபத்
தீயெழப் பொடிக்கும் கண்ணும்
சிரிப்பெழும் எயிறு மாகி,
மூவிலைச் சூலம் தன்னால்
முனிதலை துணிந்து வீழ
ஏவலில் பழுதில் பூதம்
இவனையே எறிந்த தன்றே. 108

அங்ஙனம் எறிந்த பூதம் தான் எழுந்த ஓமத் தீயில் இறங்கி மறைந்தது.

கலிநிலைத் துறை

19. முச்ச றப்புலர்ந் துயங்கிய முரசவெங் கொடியோன்
மாச்சி னைத்தடம் சந்தன மகிருக நிழலில்
வீச்சு றப்பயில் தென்றலால் மெய்யுயிர் எய்தி
நாச்சு வைப்படு ஞானநல் மந்திரம் நவிலா: 109

20. துனைப்ப யந்தநல் தருமதே வதைதிரு வருளால்
வினைப்ப யன்களால் உறுதுயர் யாவையும் வீட்டிச்
சுனைப்பெ ரும்புனல் தாகமும் அடிக்கடி தோன்ற,
நினைப்பும் எய்தியத் தம்பியர் தம்மையும் நினைந்தான்.

21. ஆன தன்மன வலியுடன் ஆண்டுநின் றெழுந்து
கான கத்திடை நீங்கிய அறன்தரு காளை
போன தம்பியர் சேவடிச் சுவட்டினில் போய்,அத்
தூநி றப்புனல் உண்டுவீழ் துணைவரைக் கண்டான்.

22. ஊறி லாமைகண் 'டுடற்றினர் இல்'என உணர்ந்து,
'மாறி லாதவர் எங்ஙனம் ஆருயிர் மாய்ந்தார்?
சேறி லாதவெஞ் சுரத்திடைச் செழும்புனல் நுகரும்
பேறி லாமையி னிறந்தனர் போலுமிப் பெரியோர்!'

என்றெண்ணிய தருமர் ஆங்கு மணலில் வீமன் எழுதிவைத்த தைக்கண்டு, அப்பொய்கைநீர் நஞ்சுடைத் தென்பதை யுணர்ந்தனர். பின்பு,

23. 'வெஞ்ச மஞ்செய வருவர்கொல்
மீண்டும்என் றருளில்
வஞ்ச கன்செய்த வஞ்சனை
இது'என மதித்து,

நஞ்சு நீர்கொடு தானுந்தன்
நாவினை நனைக்கும்
நெஞ்சனாகியங் நிறைபுனல்
கயத்திடை நேர்ந்தான். 113

24. திருந்தும் நல்வரைச் செங்கையால்
அள்ளிய நீரை
அருந்தும் அவ்வயின் அகல்விசும்
பிடையசரீரி,
'கருந்த டம்புனல் நஞ்சிது
நுகர்வது கருதேல்;
விருந்தர் நால்வரும் என்மொழி
கேட்டிலர் வெய்யோர். 114

25. 'உன்னை யான்வின வுரைதனக்
குத்தரம் உரைத்துப்
பின்னை நீநுகர் பெறுதுபெற்
றனையவிப் புனலை;
அன்னை போலுயிர் அனைத்தையும்
புரந்திடும் அரசே,
என்னை யோபெருந் தாகம்விஞ்
சிடினும்இன் றெ'னவே. 115

26. பெருந லம்பெறு மகனையப்
பேரறக் கடவுள்
இருவி சும்பினில் அருவமாய்
இயம்பிய மாற்றம்
திருவு ளந்தனில் கொண்டுதன்
செங்கைநீர் வீழ்த்திப்
பொருவி லாமகன், 'புகலுவ
புகறிநீ' என்றான். 116

27. ‘சொல்லும் நூல்களில் பெரியதே(து)?’—
‘அரியமெய்ச் சுருதி.’
‘இல்ல றத்தினுக் குரியதே(து)?’—
‘எண்ணுடை இல்லாள்.’
‘மல்லல் மாலையில் மணமுள
தேது?’—‘வண் சாதி.’
‘நல்ல மாதவம் ஏது?’—‘தங்
குலம்புரி நடையே.’ 117

28. ‘முனிகு லந்தொழு கடவுள்யார்?’—
‘மொய்துழாய் முகுந்தன்.’
நனைம ணங்கமழ் குழலினர்க்
கியற்கையா(து)?’—‘உயர்நாண்.’
‘தனமி குந்தவர்க் கேதரண்?’—
‘தகைபெறு தானம்.’
‘இனிய தேதிரு செவிக்(கு)?’—‘இளங்
குதலையர் இன்சொல்.’ 118

29. ‘நிற்ப தேதுகொல்?’—‘நீடிசை
ஒன்றுமே நிற்கும்.’
‘கற்ப தேதுகொல்?’—‘கசடறக்
கற்பதே கல்வி.’
‘அற்பம் ஆவதே தனத்தினும்?’—
‘அயல்கரத் தேற்றல்.’
‘சிற்ப மாமிவை செப்பெ’னச்
செப்பினன் சிறுவன். 119

30. இவ்வ கைப்பல வினவலும்
இயம்பிய மகனை
அவ்வ யின்பெரி துவந்துகண்
ணினுக்கிலக் காகிச்

செவ்வை யின்பொலம் சிலம்பெனச்
சேர்ந்துமெய் தழுவி,
வெவ்வ யின்புரி விரகெலாம்
விளம்பினன் மாதோ. 120

கலி விருத்தம்

31. அறப்பெருங் கடவுளென் றறிந்து தாதையைச்
சிறப்புடன் சேவடி சென்னி சேர்த்திய
மறப்பெரும் புதல்வனை மகிழ்ந்து, 'நும்பியர்
இறப்பினை ஒழிப்பதற் கேது உண்(டு)' எனா: 121

32. 'நச்சுநீர் குடித்துயிர் நீத்த நால்வரின்
உச்சமாம் அன்புடை ஒருவன் தன்னைநீ
இச்சையான் இம்மறை இயம்பி, எண்ணிலோர்
அச்சமற் றழை'என அருள்செய் தானரோ. 122

33. தாதைகூ றியமறை தனைக்கொண் டேசுதன்
ஏதமுற் றிடாவகை இளைய தம்பியை
ஊதைவந் துள்புக உணர்ச்சி நல்கினான்,
வேதமும் நிகரிலா விரத வாய்மையான். 123

34. கண்டுநின் றறப்பெருங் கடவுள், 'வாயுவின்
திண்டிறல் மாமகன், தேவர் கோமகன்
மண்டழல் விடத்தினால் மடிய, மாமருத்(து)
அண்டர்நல் கிளவலை அழைத்த தென்?' என்றான்.

35. 'குத்திர மிலாமொழிக் குந்திக் கியானொரு
புத்திரன் உளன்எனப் புரிந்து நல்கினாய்;
மத்திரைக் கொருமக வில்லை; வல்லவர்
சித்திரம் வகுத்தெனத் திகழும் மேனியாய்!' 125

36. என்றுதன் தந்தையோ டியம்பத் தந்தையும்
மன்றலம் தொடைமுடி மைந்த னுக்கமர்
வென்றிடும் மறைகளும் வில்லொ டேவுவேல்
என்றபல் படைகளும் யாவும் நல்கினான். 126

37. கருதலன் அழைத்ததும், காள மாமுனி
புரிதழல் வளர்த்ததும், பூதம் வந்ததும்,
அருகிவர் நச்சுநீர் அருந்தி மாய்ந்ததும்,
விரிசினத் துடனது மீண்டு போனதும், 127

38. முனிவனைக் கொன்றதும், முனிவன் வாய்மையில்
துனிவனத் துழையினைத் தொடர்ந்து போயதும்,
தனிவனத் திடைவிடத் தடாகம் செய்ததும்,
இனிமையின் புத்திரற் கியாவுங் கூறினான். 128

39. ‘நன்பெரு வனஞ்செறி நாள்அ கன்றன;
பின்பிறர் அறிவுறாப் பெற்றி பெற்றுநீர்
துன்புறா திரும்’எனச் சொல்லி ஏகினான்,
அன்பினால் அருள்புரிந் தரிய தாதையே. 129

40. தம்பியர் அனைவரும் தத்தம் ஆவிபெற்(று),
உம்பரில் தலைவனும் உரிய தந்தையை
வம்பவிழ் மலரடி வணங்கி, நெஞ்சுடன்
அம்பகம் மலர்ந்துதம் அடவி எய்தினார். 130

41. தீதறக் கானிடைச் செறிந்த ஐவரும்
பேதுறத் தொடர்ந்தொரு பிணைபின் போனதும்,
ஏதமுற் றிறந்ததும், எழுந்து மீண்டதும்,
ஆழ்துயர் திரௌபதிக் கறியக் கூறினார். 131

—வில்லிபுத்தூரார்

## ௫. நைடதம்

### தமயந்தி புலம்பல்

கொச்சகக் கலிப்பா

1. 'கான்றா ருயிரொழுகக் கண்ணீர் கவுள்அலைப்ப,
ஊன்தோய் கணைபட் டுழலும் பிணைஒத்தேன்;
மான்தேர் அரசர் முடிஉழுத வார்கழற்கால்
தோன்றால்,என் கண்களிப்ப இன்னமும்என்
[தோன்றிலையே? 132

2. 'நேரலார் போர்ஏறே, நிடதத்தார் கோமானே,
ஆரவரை மார்பா, அளியேன் உயிர்க்குயிரே,
காரிருள்வாய் யான்புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலையால் இன்னும்; இதுவோநின் தண்ணளியே?

3. 'நெஞ்சம் மெலிவேன் நினது தடந்தோளும்
கஞ்ச மலர்முகமும் காணாது கண்பனிப்ப
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று, விளையாட் டயருதியோ? 134

4. 'ஞாலத் திருள்நடப்ப, நாள்கமலம் வாய்நெகிழ,
வேலைத் திரைமுகட்டில் வெய்யோன் எழுந்தனனால்;
மாலைக் கதிர்வடிவேல் மன்னர் பெருமானே,
காலைக் கடவ கடன்கழிக்க வாராயோ? 135

5. 'மன்னவனே, இப்பிறப்பில் கண்டு மணந்திலனேல்
இன்னம் ஒருபிறப்பில் ஆனாலும் ஏழையேன்
தன்னந் தனியே இருந்துதவம் ஆற்றியும்உன்
பொன்அகலம் உள்உருகப் புல்லா தொழிவேனோ?'

6. வாவும் இளமான்காள், மயில்காள், மடப்பிடிகாள்,
கூவும் கரிய குயில்காள்,மென் புள்இனங்காள்,

ஆவிஎன மேவி, அகலேம் எனஅகன்ற
காவலன்முன் போன வழிஎனக்குக் காட்டீரே!' 137

7. என்னு உருகி இருகணீர் ஆலிஉகத்
தன்னுத் தழும்பப் புலம்பித் தமியளாய்,
மின்னுர் இடைநுடங்கச் செல்வாள், விறல்வேந்தன்
பொன்னு ரடிநோக்கிப் பூங்கொடிபோல் வீழ்ந்தழுதாள்.
—அதிவீர ராம பாண்டியனுர்

---

# IV. பட்டினத்தார் தம் அன்னையார்க்கு

## ஈமக்கட னுற்றல்

---

நேரிசை வெண்பா

1. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
'பையல்'என்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனிந்துபால் தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி! 139

2. முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாய்ச்சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்! 140

3. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்! 141

4. நோந்து சுமந்துபெற்று நோவாமே எற்கமுதம்
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும்
மெய்யிலே தீமூட்டு வேன்! [தாய் தனக்கோ

5. அள்ளி இடுவ தரிசியோ! தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமல்!—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி, 'என்றன்
மகனே,' எனஅழைத்த வாய்க்கு. 143

கலி விருத்தம்

6. முன்னை இட்டதீ முப்பு ரத்திலே;
பின்னை இட்டதீ தென்னி லங்கையில்;
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே;
யானும் இட்டதீ மூள்க மூள்கவே! 144

—பட்டினத்துப் பிள்ளையார்

# V. நீதிச் செய்யுள்

## க. நன்னெறி

கீழ்மை

1. அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும்;—பிறைநுதால்,
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு? 145

மேன்மக்கள்

2. ஆக்கும் அறிவான் அலது பிறப்பினல்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க;—நீக்கு
பவர்ஆர் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 146

இன்சொல்

3. இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்(து)
அதிர்வளையாய், பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். 147

புறங் கூறாமை

4. உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்,கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே ;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி ? 148

நல்லோர் நட்பு

5. நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ,
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர் ;
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. 149

பிறர்க்குதவி

6. பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய்,
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 150

—சிவப்பிரகாச சுவாமிகள்

---

## உ. நீதி நெறி விளக்கம்

முறையில் அரசு

1. இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருன்,
நின்று குறையிரப்ப நேர்படான்,—சென்றொருவர்
ஆவன கூறின் எயிறலைப்பான், ஆறலைக்கும் 151
வேடலன் வேந்தும் அலன்.

தாளாண்மை

2. உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்க ;—இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. 152

கல்வி

3. கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்(கு)
ஒற்கமின் றாத்தைவாய் அங்காத்தல்,—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல். 153

காவு

4. வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் ! ‘யாவரையும்
வஞ்சித்தோம் !’ என்று மகிழன்மின் !—‘வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் ?’ என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு. 154

அடக்கம்

5. முற்றும் உணர்ந்தவர் இல்லை ; ‘முழுவதூஉம்
கற்றனம்’ என்று களியற்க :—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா, கனங்குழாய்,
கொல்லுலைக் கூடத்தி னால். 155

தெய்வச் செயல்

6. பரபரப்பி னேடு பலபல செய்தாங்(கு)
இரவுபகல் பாழுக் கிறைப்ப ;—ஒருவாற்றால்
நல்லாற்றின் ஊக்கின் பதறிக் குலைகுலைப :
எவ்வாற்றான் உய்வார் இவர் ? 156

—குமரகுருபர சுவாமிகள்

## ௩. அறநெறிச் சாரம்

### விருந்தோம்பல்

1. விருந்து புறந்தரான், வேளாண்மை செய்யான்,
பெருந்தக் கவரையும் பேணான்,—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்,
இல்வாழ்க்கை என்ப திருள். 157

### பொறை

2. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;-காய்வதன்முன்
உற்ற குணந்தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். 158

### நற்பெண்டு

3. வழிபா டுடையளாய், வாழ்க்கை நடாஅய்,
முனியாது சொல்லிற்றுச்செய்தாங்கெதிருரையா(து)
எத்திப் பணியுமேல் இல்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் புரிந்து. 159

### மேலுலகம் எய்துபவர்

4. இருளே உலகத் தியற்கை; இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை; கைவிளக்கின்
நெய்யேதன் நெஞ்சத் தருளுடைமை; நெய்பயந்த
பால்போல் ஒழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலகம் எய்து பவர். 160

### இளமையில் அறஞ் செய்தல்

5. இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டு, வாய்மை எருஅட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 16

ஒழுக்கம்

6. மக்கள் உடம்பு பெறற்கரிது ; பெற்றபின்
மக்கள் அறிவும் அறிவரிது.—மக்கள்
அறிவ தறிந்தார் அறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார். 162

—முனைப்பாடியார்

---

## ச. திருக்குறள்

மனக்கவலை நீங்கும் வகை

1. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 163

கல்லாமை

2. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர். 164

நட்பு

3. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 165

நட்பாராய்தல்

4. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும். 166

செய்ந்நன்றி யறிதல்

5. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 167

பெருமை

6. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால். 168

நிலையாமை

7. நெருநல் உளன்ஒருவன், இன்றில்லை, என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 169

வெஃகாமை

8. நடுவின்றி நன்பொருள் வெஃகின், குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 170

கேள்வி

9. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை. 171

முயற்சி

10. முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 172

அறம்

11. ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 173

நாவடக்கம்

12. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 174

சினம்

13. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம்என்
ஏமப் புணையைச் சுடும். [னும் 175

ஒழுக்கம்

14. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 176

வாய்மை

15. தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 177

மெய்யுணர்வு

16. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொரு
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [ள் 178

அறிவு

17. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 179

தெரிந்து செயல்

18. எண்ணித் துணிக கருமம்; 'துணிந்தபின்
எண்ணுவம்' என்ப திழுக்கு. 180

பயனில்சொல்

19. பயனில்சொல் பாராட்டுவானை மகன்எனல்;
மக்கட் பதடி எனல். 181

அழுக்காறு

20. அழுக்கா றெனவொரு பாவி, திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 182

தீவினை

21. தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும். 183

இன்னா செய்யாமை

22. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்? 184

சிற்றினஞ் சேராமை

23. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 185

பெரியோர்—சிறியோர்

24. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 186

அன்பு

24. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 187

—திருவள்ளுவர்

---

## ரு. ஆசாரக் கோவை

ஐங்குரவரும் அவரைத் தொழுதலும்

1. அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர் ; இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி. 188

ஆசிரியரிடம் ஒழுகு முறை

2. நின்றக்கால் நிற்க, அடக்கத்தால் : என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் : பெருந்தக்கார்,
சொல்விற் செவிகொடுத்துக் கேட்டீக : மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால். 189

புகலாகாத இடங்கள்

3. சூதர் கழகம் அரவ மருக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர். புகுபவேல்
ஏதம் பலவும் தரும். 190

—பெருவாயின் முள்ளியார்

---

# IV. தனிப் பாடல்

---

## நாரை விடு தூது

இணைக்குறள் ஆசிரியப்பா

1. நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும்
தென்திசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட எகுவி ராயின்,
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே. 191

—சத்தி முத்தப் புலவர்

## துன்பப் பெருக்கு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

2. ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்

சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தன் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ, ‘ தட்சணைகள் கொடு’என் றாரே.

—இராமச்சந்திரக் கவிராயர்

## சீதக்காதி எனும் வள்ளலின் வள்ளன்மை

*கட்டளைக் கலித்துறை*

3. ஈயாத புல்லர் இருந்தென்ன ?
போயென்ன ? எட்டிமரம்
காயா திருந்தென்ன ? காய்த்துப்
பலனென்ன ? கைவிரித்துப்
போயா சகமென் றிரப்போர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக்
காதி ஒருவனுமே. 193

—படிக்காசுத் தம்பிரான்

## சீட்டுக் கவி

*பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்*

4. ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டுகாண்க

பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ லாதகோணம்
பறவாத கொக்(கு)அனல் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம் [கும்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்
துதிக்கவர விடல்வேண்டுமே. 194

—அந்தகக் கவி-வீரராகவ முதலியார்

---

## ஆற்றுப்படை

பதினன்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

5\. 'தேரு ளைப்புரவி வார ணத்தொகுதி
திரைகொ ணர்ந்துவரு மன்ன,நின்
தேய மேதுனது நாம மேது?புகல்.'
'செங்கை யாழ்தடவு பாண,கேள் :
வாரும் ; ஒத்தகுடி நீரும் நாமும்மக
தேவன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்.
நீரும் இப்பரிசு பெற்று மீளவர
லாகும் ; ஏகும்:அவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகைநெ
ருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கும் ; உயர் வேம்பு நிற்கும் ; வளர்
பனையும் நிற்கும் ;அதன் அருகிலே
அரசு நிற்கும் ; அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை யாளமே.' 195

—கம்ப நாடர்

## நீர் கலந்த மோர்

கொச்சகக் கலிப்பா

6. கார்என்று பேர்படைத்தாய்
 ககனத் துறும்போது ;
நீர்என்று பேர்படைத்தாய்
 நெடுந்தரையில் வந்ததற்பின் ;
வார்ஒன்று பூங்குழலார்
 ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோர்என்று பேர்படைத்தாய் ;
 முப்பேரும் பெற்றாயே ! 196

---

## சிலேடை

### பாம்பும் எள்ளும்

நேரிசை வெண்பா

7. ஆடிக் குடத்தடையும் ; ஆடும்போ தேஇரையும் ;
மூடித் திறக்கின் முகங்காட்டும் ;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும்; பாரிற்பிண் ணாக்குமுண்டாம் ;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது. 197

வைக்கோலும் யானையும்

8. வாரிக் களத்தடிக்கும் ; வந்துபின்பு கோட்டைபுகும் ;
போரிற் சிறந்து பொலிவாகும் ;—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம். 198

### விநாயகர்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

9. கம்பமத கடகளிற்றான் தில்லை வாழும்
 கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தார் ; அயில்வேல் செங்கை
 யுடையஅறு முகவனும்கண் ணீரா றானன் ;

பம்புசுடர்க் கண்ணானுமோ, நஞ்சுண் டான்;மால்
பயமடைந்தான்; உமையும்கூடல் பாதி யானாள்;
'அம்புவியைப் படைத்திடுவ தவமே!' என்று
அயனும்அன்னம் இறங்காமல் அலைகின் றானே!

—காளமேகப் புலவர்

தமிழ் நாடுகள்

10 வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்
நன்னாடு சான்றோர் உடைத்து. [டை 200

—ஔவையார்

# வசன பாடம்

## க. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

உலகம் காரிய வடிவமாக இருத்தலின், இதற்கொரு கருத்தா இன்றியமையாதிருக்கவேண்டுமென்பது ஆஸ்திக ராவார் யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயமாம். பழி பாவங்கட்கு அஞ்சி அறநூல் கூறியவாறு மனம் வாக்குக் காயங்களால் கடவுளைத் தியானித்தும், துதித்தும், தொழுதும் வருகின்றவரே ஆஸ்திகராவாரென்பது மிகு பிரசித்தமாம். பழி பாவங்கட்கஞ்சாது ஒழுகுகின்றவர் ஆஸ்திகர் போன்று நடிப்பினும், அவர்கள் உண்மையில் ஆஸ்திகராகாரென்பதுபற்றிக் கூறுவது அநாவசியகமாம். நம்மனோருள் மிகவும் பெரும்பான்மையோர் பழி பாவங்கட்கு அஞ்சாதொழுகுகின்றமையை நோக்குமிடத்து, ஆஸ்திகப் போலிகள் மிகுதியாக விருந்து ஆஸ்திகர் போன்று நடிக்கின்றனரென்பது நன்கு விளங்குவதாம். ஆஸ்திகப் போலிகளா யிருப்பவருள் ஒவ்வொருவரும் கடவுள் கருணைக்குப் பாத்திரராகாது இம்மையில் பெருந்துன்பத்தையும், மறுமையில் நரக வேதனையையும் அடைவரென்பதற்குத் துரியோதனன் முதலியோர் தக்க சான்றுவர். துரியோதனன் வேள்வி முதலியவற்றைப் புரிந்தொழுகினனாயினும், அவன் மறுமையில் நரகத்தை

யடைந்து பொறுத்தற்கரிய பெருந்துன்பத்தையு மடைந் தானென்று பாரத முதலிய நூல்கள் கூறுவதை நோக்கு மிடத்து, ஆஸ்திகப் போலிகள் இம்மையில் பெருந்துன் பத்தையும் மறுமையில் நரக வேதனையையு மடைவார்க ளென்பது நன்கு விளங்குகின்றது. ஆதலின், ஆஸ்திகப் போலிகளாக வொழுகாது யதார்த்த ஆஸ்திகராக வொழு கினுற்ருன் நாம் கடவுள் திருவருளுக்குப் பாத்திர ராதல் கூடும்.

நாம் ஒவ்வொரு நாளும் தூர்த்தற் கரிய வயிற்றை நிரப்புதற்பொருட்டும், சிற்றின்பத்தை யனுபவித்தற் பொருட்டும் படாத பாடு பட்டுப் பொருளைத் தேட முயல் கின்ருேமே யன்றி, கடவுள் வழிபாட்டைப்பற்றி யொரு சிறிதுங் கருதுகின்ருே மில்லை. ஆனுல், கனு வுலகம் போன்றுள்ள உலகவாழ்வில் உவப்புற்றுக்காலத்தை வீணே யொழிக்கின்ருேம். கடவுள் வழிபாட்டினுல் கருதற் கரிய நலமெலா முண்டாம். கடவுள் தம்மை நம்பினவரை ஒரு போதும் கைவிடுவ தில்லை, என்பதை நன்கு உணர்ந்து காலத்தைப் பயனுடையதாகச் செய்ய முயன்ருலன்ருே நாம் இம்மையிற்ருனே செம்பொருளை (கடவுளை) இனி துணர்ந்து ஏக்க மற்ற வாழ் வடைந்திருத்தல் கூடும்? 'கடவு ளிருப்பது உண்மை யாயின், அவரேன் நமக்கு விளங்கவில்லை?' என்று கருதுதல் தவறுடைய கொள்கை யாம். கடவுள் திருக்கு (அறிவு) வடிவமாக இருப்பவர்; அவரைச் சான்ருேர்கள் அருளிய முறையாக அறிய முடியுமே யன்றி வேறெவ்வாற்ருனும் அறிதல் முடியா தென்று நிச்சயித்து, 'தெய்வ மிகழேல்,' என்பதை ஸ்திர மாகக்கொண்டு திரிகரண சுத்தியாகப் பழிபாவங்கட்கஞ்சி யொழுகுபவ ரன்ருே கடவுள் கருணைக்குப் பாத்திர ராதல் கூடும்? கடவுள் நமக்குக் கருணை செய்யா திருப்பதற்கு ஏது, நம்முடைய தவறே யன்றி, அவருடைய தவறன்

ளும். மாசு நீங்கிய கண்ணுடியில் நம்முடைய உடம்பு நன்ருகப் பிரதிபிம்பிப்பது போன்று, காமக் குரோத மென்ற தொடக்கத்துத் தீக்குணங்கள் நீங்கிய மனத்தில் கடவுளி னருள் பிரதிபிம்பிப்பதா மென்பதை அறிஞர் வாயிலாகச் செவ்விதாக வறிந்து, காமக் குரோத முதலிய தீக்குணங்களை யொழித்தவர்தாம், எல்லாமாயும், அல்லா மாயும் விளங்குங் கடவுளது கருணைக்குப் பாத்திரராய் வாழ்வர்.

தீயால் சூழப்பட்ட காடு போன்று காமாதி துர்க் குணங்களால் சூழப்பட்டு, உலக போக மொன்றையே யடையக் கருதிப் பழி பாவங்கட் கேது வாகிய வினைகளைப் பராமுக மின்றிச் செய்து வருகின்றவர் ஒரு வாற்ருனுங் கடவுள் கருணைக்குப் 'பாத்திரராய் உய்யும் நெறி கண்டு உய்வதில்லை, யென்பதை யுய்த்துணர்ந்தாலன்றே நாம் கடவுள் கருணைக்குப் பாத்திரராய் உய்தல் கூடும்? 'எல்லா முன்னுடைமை, எல்லா முன்னடிமை; உன்னையன்றி யுண் மையி லொரு சிறிது மில்லை. உன்னுடைய மாயா விலா சத்தால் மயங்கிச் செய்வன தவிர்வன உணராது, தீய வழியி லொழுகு மென்னைச் சிறிதருள் புரிந்து காத்தருளல் வேண்டும்,' என்று சிந்தை நைந்து, திருவரு ளொன்றே பிறவிக் கடலைக் கடப்பதற்குப் பெருந்தோணியா மென்று துணிந்து, மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பராமுக மின்றிப் பகவானைத் தியானித்துத் தோத் திரித்துத் தொழுது வரும் பாக்கியத்தைப் பெற்று, ஒவ்வொரு தினத்தையும் உயிர்க்குறுதி தரும் தின மாகச் செய்து வந்ததனு லன்றே பிரகலாத ஆழ்வார், அப்பர், சுந்தரர் முதலிய மகாத்துமாக்கள் கடவுள் கருணைக்குப் பாத்திரராய்க் கலக்கம் அற்ற நிலையினைப் பெற்று இனிப் பிறவா நிலையை யெய்துதற் குரிய ராயினர்?

மாயையின் சத்துவ, இராசத, தாமத குணங்களின் வாயிலாக அயன் அரி அரன் என்னும் வடிவங் கொண்டு, உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் செய்து, பாரபட்ச மென்பதொரு சிறிது மில்லாமல் உயிர்களைப் பாதுகாத்து வருகின்ற பகவானைத் தஞ்சமாக வடைந்து, வேறு துணையை வெறுத்துத் தீயவழியில் செல்லும் மனத்தைச் சிறிது சிறிதாக அடக்கி வந்தாற்ருன் நாம் கடவுளால் கைவிடப்படாது, சிந்தையும், மொழியும் செல்லா நிலைமையதாகிய அந்தமில் வீட்டை யடைதற்கு உரியவராவோம்.

"கண்ணிற் காண்பதுன் காட்சி ;கை யாற்ருெழில்
பண்ணல் பூசை ; பகர்வது மந்திரம் ;
மண்ணெ டைந்தும் வழங்குயிர் யாவுமே,
அண்ண லே,நின் னருள்வடி வாகுமே."

என்று தாயுமான சுவாமிகள், நாம் நன்னெறியி லொழுகி ஞாநாநந்த முறுமாறு அருளியதை நம்பி யொழுகுவோமாயின், நாம் கடவு ளருளுக்குப் பாத்திரராய், அவரால் கைவிடப்படாதவ ராவோம். துன்புற்ற காலத்தில் துரோபதைக்குத் துரியோதனன் சபையில் அரிபரந்தாமர் அருள் செய்ததை நாம் நன்கு சிந்திப்போமாயின், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது நமக்கு நன்கு விளங்குவதாகும்.

---

# உ. கடவுள் தோன்றுதல்

---

"காக மோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியை,
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேள்நடன சாலையை,
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியை,மும்
மலமி குந்தொழுகு கேணியை,

மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை,
முடங்க லார்கிடை சரக்கினை,
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனார்
வனைய வெய்யதடி கார ணனையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொய்யை மெய்யெ னக்கருதி
ஐய! வையமிசை வாடவோ?
தெரிவ தற்கரிய பிரம மே! அமல
சிற்சு கோதய விலாசமே!''

—தாயுமானவர்

நமது தேகம் ஒரு மண் பாண்டத்தை யொத்து விளங்குகின்றது. ஆகையினால், அஃது எப்போதாகிலும் ஒரு போது அழிந்துவிடக் கூடியது. அப்படிப்பட்ட உடலை நம்பி, மக்கள் இவ்வுலகில் உள்ளவரையில் தம் முடைய மனம் போன போக்கில் நடக்க ஆரம்பிக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது வெறுக்கத் தகுந்த காரியமே யாகும். உயிர்கள் எடுக்கும் பிறவிகள் எல்லாவற்றினும் மானிடப் பிறவியே சிறந்தது. அதைப் பெற்ற மாந்தர், உடனே தாம் தேடிக்கொள்ளவேண்டிய வழியைத் தீவிரமாகத் தேடிக்கொள்ளவேண்டும். விதைக்கும் நாட்களில் வீட்டில் உறங்கி விட்டு, அறுக்கும் நாட்களில் அரிவாள் கொண்டு போகிறவனுக்கு ஒன்றும் கிடைக்கா தல்லவா? அது போல, நாம் நம்முடைய வாழ் நாட்களை வீணிற் கழித்து விட்டு இறுதியில் வருந்துவதனாற் பய னில்லை. மானிட தேகத்தின் உதவியைக் கொண்டு, நாம் நல்வழியில் முயல்வோ மானால், பிறப்பு இறப்பு என்னும் இரு பெருங்கடல்களினின்றுங் கரை யேறலாம். பிறப்பு இறப்பாகிய கடல்களைக் கடப்பதற்குத் தேகமே தகுந்த புணை யாகும். மக்களுடைய முயற்சியே, அந்தப் புணையை வேகமாக மோதும் அலை

களை யெதிர்த்துச் செலுத்துவதற்குரிய துடுப்பாகும். தேகமாகிய புணையை முயற்சியாகிய துடுப்பினால் இடையூறுகளாகிய அலைகளை எதிர்த்துச் செலுத்தும்போது, நாம் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது ஒன்றுண்டு: அஃதாவது, கப்ப லோட்டிக்குத் துறைமுகத்தின்மீது நாட்டமிருப்பதைப்போல நம்முடைய அறிவை நாம் பிறவிக் கடலுக்குத் துறைமுகமாகிய கடவுளிடத்தில் நிலை பெறச் செய்ய வேண்டுவதே. அப்படிச் செய்வோ மானால், அடையவேண்டிய நற்பதவியை நாம் தடை யில்லாமல் அடையலாம்.

துருவன் வள மிகுந்த மது வனத்தை யடைந்தான். அதைப் பார்த்ததும் அவனுக்கு இணை யில்லாத இன்பம் உண்டாயிற்று. அவன் தனக்கு நாரதர் கூறிய பொழில் அஃதே யென்பதை யுணர்ந்தான். உடனே அவன், அந்தப் பொழிலுக்கு அருகில் பாயும் யமுனை யாற்றில் இறங்கி நீராடினான்; பிறகு, துன்பத்தைத் தொலைத்துக் கரை யேறுபவனைப்போலக் கரையின்மீது வந்து, தவம் இயற்றுவதற்குத் தகுந்த இடம் எது வென்று சுற்றிலும் பார்த்தான். அங்கு ஒரு புறத்தில் சில மலர் மரங்கள் தழைத்திருக்கக் கண்டு, அங்குச்சென்று உட்கார்ந்து, மகா விஷ்ணுவைத் தன் மனத்தால் சிந்திக்கத் தொடங்கினான்.

தவசிகள் தம்முடைய ஐம்பொறிகளையும் புலன்கள் மேற் செல்ல விடாமல், தம்மால் கூடிய அளவு அடக்கிக் கொள்ளல் வேண்டும். அதற்காக அவர்கள் சில நாட்கள் வரையில் காய், கனி, கிழங்கு, சருகு முதலியவைகளையே ஆகாரமாகக் கொள்ளுவார்கள்; பிறகு சில நாட்கள் வரையில் தண்ணீரையும் காற்றையுமே தமக்குரிய உணவுகளாகக் கொள்ளுவார்கள்; இப்படிப் பழகுவதனால், ஐம்பொறிகளினுடைய வல்லமை குறையும். அவ்விதம்

குறைவுபடுவதால் அவைகள் தம்முடைய எண்ணப்படி காரியங்களைச் செய்யாமல், அறிவின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கும். ஆகையினால், துருவனும் அப்படிச் செய்யக் கருதினான். அவன் முதலில் ஒரு மாதம் வரையில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை விளா, இலந்தை, கொய்யா முதலிய கனி வகைகளைப் புசித்தான்; ஒரு மாதம் வரையில் ஆறு நாட்களுக்கு ஒருதரம் உலர்ந்த இலைகளை உட்கொண்டான்; ஒரு மாத காலம் யமுனை யாற்றின் துறை நீரையே அருந்தினான்; நான்காம் மாதம் காற்றையே உட்கொண்டான்.

இவ்வாறு நான்கு மாதங்கள் கழிந்தன; ஐந்தா மாதமும் அணுகிற்று. பிறகு அவன் ஒன்றையும் உட்கொள்ளாமல், தன் மூச்சை யடக்கித் திருமாலைக் கருத்தில் இருத்தி, பாதத்தின் பெருவிரலைத் தரையில் ஊன்றி நின்றான். உலகம் முழுவதும் உண்டவராகிய மாயவர், அவனுடைய உள்ளத்தில் தங்கினார். அதனால் அவனைத் தாங்க முடியாமல் பூமி நிலை குலைந்தது. அஃது அலை கடலின் நடுவில் புயல் காற்றில் அகப்பட்ட மரக்கலத்தைப் போல அசையத் தொடங்கிற்று.

துருவனுடைய தவத்தினால் உண்டான தவக்கனலின் வெப்பம் உலகத்தைப் பற்றி வருத்தத் தொடங்கியது. விண்ணுலகத்தி லுள்ள தேவர்க ளெல்லாரும் மூச்சுவிட முடியாமல் தவித்தனர். அவர்களுக்குக் காரணம் இன்னதென்று புலப்படவில்லை. ஆகையினால், அவர்கள் ஒன்று கூடி, திருமாலுக்கு இருப்பிடமாகிய வைகுந்தத்திற்குச் சென்றார்கள். அங்குத் திருமால் சங்கு, சக்கரம், கதை, கோதண்டம், கட்கம் ஆகிய ஐம்படைகளும் புடை தயங்க வீற்றிருந்தார். தேவர்கள் அவரைக் கண்டு, வணங்கி நின்று, தமக்குண்டான துன்பத்தை அவருக்குத் தெரிவித்தார்கள். பிறகு, எம்பெருமானார் அவர்களை நோக்கி,

"தேவர்காள், நீங்கள் கொண்ட மனக் கவலையை யொழியுங்கள். மண்ணுலகத்தில் எம் அடியவர்களுள் ஒருவனான துருவன் என்பவன் எம்மைக் குறித்துத் தவஞ் செய்கின்றான். அவன் மூச்சடக்கி நின்றதனால் உங்களுக்கு இவ்வாறு கலக்கம் உண்டாயிற்று. நாம் இப்பொழுதே சென்று, அவன் கருதியதை அவனுக்கு அளித்து, உங்களைக் காப்போம். நீங்கள் செல்லுங்கள்," என்று கூறினார். தேவர்கள் மிகுந்த களிப்புடன் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

பின்பு கருணையங்கடவு ளாகிய மகா விஷ்ணு வைகுந்தத்தின் வாயிலுக்கு வந்தார். அவரைக் கருதிய இடத்திற்குத் தாங்கிச் செல்பவன் கருடன். அவன் பொன்னிறச் சிறகையும், பருத்த உடலையும், கூரிய நகங்களையும், வளைந்த அலகையும், ஒளி மிகுந்த கண்களையும் உடைய ஒரு பறவை அரசன்; வல்லமையில் மிகுந்தவன். அவன் பெருமானைக் கண்டவுடனே ஓடிவந்து, அவர் அருகில் நின்றான். அவர் அவன்மீது ஏறி யுட்கார்ந்தார். உடனே அவன் பூமியை நோக்கிக் காற்றும் வேகத்தில் பின்னிடப் பறந்து சென்றான்.

துருவன் தன்னுடைய விழிகளை மூடிக்கொண்டு தவம் செய்தவண்ணம் இருந்தான். கருடன் சிறிது நேரத்திற்குள் மது வனத்தை யடைந்தான். திருமால் கருடன் முதுகிலிருந்து இறங்கித் துருவன்முன் நின்றார். துருவன் துவாதசாக்கர மந்திரத்தை ஓதியவண்ணம் இருந்ததால், வெளியில் நடக்கும் காரியம் ஒன்றையும் அவன் உணரவில்லை. ஆகையினால், எம்பெருமான், அவன் மனத்திற் குடிகொண் டிருந்த தம்முடைய உருவத்தை அவ்விடத்திலிருந்து அகலச் செய்தார். உடனே துருவன் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தான். அப்படிப் பார்த்ததும் அவன்,

"மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும், கமலக் கண்ணும்,
குண்டலம் சுடரும் காதும், குறுநகைப் பவள வாயும்,
தண்டுழாய் அலங்கல் மார்பும், தடக்கையோர் நான்கு மாகக்
கண்டனன் மறையுங் காணக் கரியவன் உருவம் அம்மா!"

—ஆரியப்பப் புலவர்

அவருடைய திருவுருவத்தைக் கண்டதும் துருவன் அவ்வுருவம் முழுவதையும் உட்கொள்ளுபவனைப்போல் உற்றுப் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் நின்றான்; பிறகு அந்தத் திருமேனியைத் தன்னுடைய இரண்டு கரங்களாலும் தழுவுபவனைப்போல அவரருகில் ஓடினான். அவனுடைய மனம் அனலைக் கண்ட நெய்யைப்போல் உருகியது; கண்களிலிருந்து ஆநந்தக் கண்ணீர் முத்தைப்போல் துளித்தது. களிப்பினால் அவன் கூத்தாடினான்; அவரைத் துதிக்க வகை யறியாமல் தயங்கினான். அப்பொழுது கருணையங் கடவுள், தம்முடைய செந்தாமரையொத்த கரத்தில் தாங்கியிருந்த வெண்சங்கினால் துருவனுடைய அழகிய கன்னத்தைத் தடவி யருளினார். அடியார்களைக் காக்கும் அந்தப் பாஞ்சசன்னியம் என்னும் திருச் சங்கின் பெருமை யாரால் கூற முடியும்? அதனுடைய பரிசம் பட்டமாத்திரத்தில் துருவனுக்கு உண்மை ஞானம் பெருகி வழிந்தது. உடனே அவன் தன் மெய்ம் மறந்து, எம்பெருமானைப் புகழ்ந்து பாடத் தொடங்கினான்.

"பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர, யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்; அரங்கமா நகரு ளானே!"

"மனத்திலோர் தூய்மை இல்லை; வாயிலோர் இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன் வாளா;
புனத்துழாய் மாலை யானே! பொன்னிசூழ் திருவ ரங்கா!
எனக்கினிக் கதியென்? சொல்லாய்; என்னையா ளுடைய கோவே!"

—தொண்டரடிப்பொடி யாழ்வார்

இவ்வாறு மனங் கரைந்து தம்மைப் புகழும் உத்தம ஞகிய துருவனைக் கண்ட நீல மேக வண்ணர் இளஞ்சிரிப் புடன், "மணி முடி தரித்த மன்னவன் புதல்வ, யாம் உன் னுடைய அருமையான தவத்திற்கு மெச்சினேம். நீ பதங்கள் எல்லாவற்றிலும் மேலான பதத்தை யடையக் கருதினுய். அஃது எமக்குத் தெளிவாயிற்று. உலகத்தி லுள்ள உயிர்கள் எல்லாம் அன்ன மயத்தினுல் உயிர் பிழைத் திருக்கின்றன. அன்னத்திற்கு முதற் காரணம் மழை; அம்மழைக்குக் காரண கருத்தாவாயுள்ளது சூரியன்; அஃது ஆகாயத்தில் ஒளி செய்துகொண் டிருக்கின்றது. அதைச் சுற்றிலும் பல நட்சத்திரங்களும், கிரகங்களும் உலவிக்கொண் டிருக்கின்றன. அவைகளுள் மிகச் சிறந்த நட்சத்திரம் ஒன்றிருக்கிறது. அது பொன் மயமாகிய மேரு மலையின் உச்சியி லிருந்து ஒளி வீசுகின்றது. அஃது ஒரு நாளும் அழியாததாகும். அந்தப் பதவி தேவர்களுக்கும் கிடைத்தற்கு அரியதாகும். அப்படிப் பட்ட சிறப்புவாய்ந்த பதவியை நாம் உனக்குத் தருகிறேம். நீ நீடூழி வாழக்கடவாய். ஆன போதிலும், நீ இளஞ்சிறு வன் ; உலக இன்பங்களைச் சிறிதும் அறியாதவன். ஆகை யினுல், நீ உன் நகரத்திற்குச் சென்று, சிறிது காலத்திற் குப் பிறகு உன் தந்தையின் அரசை எற்றுக்கொண்டு, பல் லாண்டுகள் வரையில் ஆட்சி புரிந்து, பிறகு நாம் கூறிய பதவியைப் பெற்றுக்கொள்," என்று இயம்பிக் கருடன்மீ தமர்ந்தார். கருடன் கண்ணிமைப்பதற்குள் வைகுந் தத்தை நோக்கிப் பறந்து மறைந்தான்.

இலக்குமி மணுளர் மறைந்ததைக் கண்ட துருவன், "என்னே என் அறியாமை! முதல்வரைக் கண்டும் முத் தியைப் பெரும லிருந்துவிட்டேனே! நான் மறுபடியுமா நகரத்திற்குச் சென்று, அரசு செலுத்தவேண்டும்? இனி என் செய்வது? கடவுள் கட்டளைக்கு ஒரு தடையும்

இருக்கிறதோ? ஆகையினால், அவர் கூறியவாறே செய்வேன்,'' என்று தனக்குத்தானே எண்ணினான். பிறகு அவன், மன மகிழ்ச்சியுடன்,

" திருக்கண்டேன் ; பொன்மேனி கண்டேன் ; திகழும்
அருக்கன் அணிநிறமுங் கண்டேன் ;—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் ; புரிசங்கம் கைக்கண்டேன் ;
என்னாழி வண்ணன்பால் இன்று."

—பேயாழ்வார்

என்று பாடிக்கொண்டே வட மதுரையை நோக்கி நடந்தான்.

---

# ௩. இயற்கை விநோதம்

இரவுப்போதில் நாம் ஆகாயத்தை அண்ணாந்துபார்த்தால் புள்ளிக்குறி இட்டது போன்றும், இரத்தினங்கள் ஜொலிப்பன போன்றும் தகதக வென்று மின்னுகிற நக்ஷத்திரங்கள் யாவை? டெலஸ்கோப் (Telescope) என்கிற தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியாலும், அதிக சமத்கார கணித சாஸ்திர நிரூபணங்களாலும், இயற்கையாய்த் தமக்கு உண்டாயிருக்கும் புத்திக் கூர்மையாலும், அறிவு முதிர்ச்சியாலும், வானசாஸ்திரிகள் அவற்றைப் பல வேறு அண்டங்களென்றும், நாம் காணுகிற சூரிய சந்திரர்களைப்போலவே இன்னும் பல வேறு சூரிய மண்டலங்களும் இருக்கின்றனவென்றும் ஸ்தாபித்திருக்கிறார்கள். 'நாம் இருக்கும் பூலோகம் உருண்டை வடிவினதா? தட்டையான ரூப முடையதா?' என்னும் கேள்விக்கு, அது உருண்டை வடிவினதே என்றும், அதற்கு நியாயமாக, வெகு தூரத்திலிருந்து வருகிற ஒரு கப்பலின் கொடிச்சிகரம் கரையிலிருந்து நோக்குவோனுக்கு முதலில்

தோன்றி, அருகில் வரவர முழுமையும் தோன்றுவதையும், ஒரு திசையையே நோக்கி நேராகச் செல்லும் கப்பல் யாத்திரைக்காரன் மறுபடியும் தான் புறப்பட்ட இடத்திலேயே வந்து சேருகிறான் என்பதையும் காட்டுகிறார்கள்.

அநேக நாளாக, பூமி தட்டையானதென்று நினைத்து அது நின்ற நிலையி லிருப்பதால் அதற்கு 'நிலம்' எனப் பெயர் வைத்தது சரியென எண்ணி வந்தனர். இப்போது அது சுத்தப் பிசகான அபிப்பிராய மென்று ஏற்பட்டு விட்டது. கிரேக்கு (Greece) தேயத்தில், இந்தப் பூமியைத் தாங்கப் பெரிய தூண்கள் நிறுத்தி யுள்ளன வென்று ஒரு காலத்தில் நினைத்திருந்தார்களாம்; இவ் விதந் தாங்குவதாகக் கூறப்பட்ட வஸ்துக்களைத் தாங்குவன எவையோ புலப்பட வில்லை!

பூமியானது ஒரு பந்து வடிவினதாயிருக்கிற தென்றும், அது நின்ற நிலையி லிராமல் சுற்றிக்கொண்டே யிருக்கிறதென்றும் சாஸ்திர விற்பன்னர்கள் (Scientists) நிச்சயம் செய்திருக்கிறார்கள். இப் பூமி சுற்றி வருவதில் இரண்டு வகை யுண்டு: ஏக காலத்திலேயே பூமி இரண்டு விதமாய்ச் சுற்றி வருகின்றது. மாறிய வேகமாய்ச் சென்றுகொண்டே ஒரு வருஷத்தில் சூரியனை வலம் வருவ தொன்றும், தினம், பகல் இரவு என்னும் பிரிவினை யடையும் வண்ணம் தன் மையத்தினின்றே சுழல்வது மற்றொன்று மாகிய இரண்டு நடை பூமிக்கு ஏற்பட்டிருக்கின்றன. பின் சொன்ன காரணத்தால் பூமி சூரியனுக்கு எதிர்படும்போது பகலும், மறைந் திருக்கும்போது இரவும் நிகழ்கின்றன.

ஹா! ஹா! என்ன விநோதம்! ஒரு மலையானது அந்தரத்தில் ஆதரவற்று நின்றுகொண்டிருந்தால் அது நமக்கு எவ்வளவு ஆச்சரியத்தை விளைக்கும்! அதுவுமன்றி கயிறில்லாமல் கறங்கு சுழல்வதுபோல, அந்த மலையே

மேற்சொன்ன வெட்ட வெளியில் தாங்குவா ரில்லாமலும், சுழற்றுவா ரில்லாமலும் தன் இயற்கை வன்மையினாலேயே கரகரவெனச் சுழன்றுகொண் டிருப்பின், அது முன் சொன்னதினும் பதினாயிரமடங்கு ஆச்சரியத்தை யன்றோ உண்டு பண்ணும்? 'நம் கண்ணெதிரில் காரண மொன்றும் புலப்படா விடினும் இவ்வளவு அற்புதமான காரியத்தை யியற்றிய புத்திமானும் சக்திமானும் யாவனோ; கண்ணுடன் கருத்தும் எமக்குத் தந்து, கண்ணுக்கு வேடிக்கையும், கருத்துக்கு உணவுந் தந்த புண்ணிய புருடன் யாவனோ? திரையின் பின்னர் மறைந்து நம்மையெல்லாம் பொம்மைகளென ஆட்டுவிக்கும் சூத்திரதாரி யாவனோ? அவனது மாட்சியும் காட்சியும், வன்மையும் தன்மையும் எம்மால்செப்பரியனவே!' என்றன்றோபலவகை ஆச்சரியக் கடலுளழுந்தி, எண்ணமெல்லாம் ஒரு பக்கம் நண்ண, அடியற்ற மரம் போல் சாய்ந்து, அன்னவன் பெருமைகளையே நினைந்து நினைந்து, நெக்கு நெக்குருகி விழுந்து கிடப்போம்? இஃதே இவ்வகையாக, 'ஸயன்ஸ்கள்' (Sciences) கண்டு பிடித்த முடிவுரைகளைச் சிறிது சிந்திப்போமாயின், இப்போது நாம் நினைத்த அற்புதத் தோற்றத்தைவிடக் கோடானு கோடி அதிகமாய் நம் மனத்தில் ஆநந்தம் கிளர்ந்து அஃதே ஓர் பெரிய தாம்பாய் நம்மனத்தில் வலிவுறப் பிணித்து வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத வன்மையோன்பால் இழுத்து விடும் என்பதில் யாது தடை?

சூரியன் நெருப்புக் கடவுளென நடுவில் நிலைத்திருக்க, சுற்றிலும் கிரகங்கள் (planets) பிரதக்ஷிணம் வருவன போன்று சுழன்று செல்லும் உன்னதத் தோற்றம் யாவரால் வருணிக்கத் தக்கது! நாம் வசிக்கும் இப் பூமியானது மலைகளையும், கடல்களையும், வனங்களையுஞ் சுமந்து கொண்டு சூரிய பகவானைச் சுற்றி வரும் ஒரு கிரகம்

என்று துணியப்பட்டிருக்கிறது. இப்படியே செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கிரகங்களும் ஒரு நியதிப்படி சூரியனை வலம் வருவனவாம். ஒரு மலை அந்தரத்தில் சுழன்றால் நமக்கு உண்டாகும் ஆச்சரியம் அளவிறந்ததாக, அந்த மலையை யணுவில் அணுவாக ஒப்பு நோக்கிக் கூறவேண்டியதாய் விளங்கும் மகத்தான உலகங்கள், தத்தம் நிலை தவறாது, வாக்கால் சொல்ல முடியாமலும், மனத்தால் நினைக்க முடியாமலும் வரம்பற்ற மஹாகாசத்தில் (Infinite space) மிதந்து பறந்து செல்லும் விநோதக் காட்சியின் அருமையைச் சொல்ல நம்மால் முடியுமா!

ஒரு சிறிய வண்டியின் சக்கரத்தால் உண்டாகும் சப்தத்தி னளவுங்கூட நம் காதிற்குக் கேளாமலும், ஜட்கா வண்டியில் நம்முடம்பு ஆடி யசைந்து அடிபடுவதில் உண்டாகும் காயத்தில் எள்ளு மூக்கத்தனையுங் கூட நம் மீது படாமலும் வெகு உன்னதமாய், வெகு ரமணீயமாய், ஒரு மணி நேரத்திற்குச் சுமார் எழுபத்தையாயிரம் மைல்கள் செல்லத் தக்க வேகத்துடன் நாம் இருக்கும் பூமியாகிற கிரகம் சூரியனைச் சுற்றிவருவது என்ன அதிசயம்! இதனினும் வேகமாம் பரி பூட்டிய வேறு சில கிரகங்களும், ஒவ்வொரு கிரகத்தின் உபக்கிரகங்களும் (Satellites) தங்கள் தங்கள் தொழிலைச் சந்தடி செய்யாமலியற்றித் தமக்கு உருவைக் கொடுத்து எழிலைத் தந்து ஊக்கமும் வன்மையு மீந்த உத்தம தேவனை; உயர் வற உயர் நலமுடையவனை; எவ்விடத்திலும், எப்பொருளிலும் கரந்து நின்று பரந்துளானை; ஒளவிய மவித்தும் அன்பைப் பெருக்கியும் நைவரா தணுகும் நின்மலன் தன்னை; அற்புதப் பெரியனை, ஆதியஞ்சோதியை,—சூரிய மண்டலத்திற் குள்ளாகிய கிரகங்களும், வேறு கணக்கில்லாத அண்டாண்ட சரா சரங்களும், நாம் கண்டனவும், கேட்டனவும்,

அனுமானித்தனவும், உத்தேசித்தனவுமாகிய எல்லா வுலகங்களும், கிரகங்களும், சந்திராதித்தர்களும் வந்தித்து வழி பட்டு, சிந்தித்துச் சிரமம் விட்டு, மகத்துவமோங்கிய அமரிக்கை அரசிருப்ப, புகழ் பதம் பாடி, அருட்டிறங் கொண்டாடி, ஓயாக் கீதம் விளைத்து, ஆயாச மென்பதின்றி உலாவி வருகின்றனவே! இவ்வுண்மையைக் கண்ட யாவரே கடவுளில்லை யென்பர்! 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்!' என்பர்! கரதலாமலக மெனக் காண்பதைக் கனவென்பர்! அறிகிலேம்.

---

# ச. சந்தோஷம்

---

காரிய சித்தியால் ஒருவனுக்கு உண்டாகக் கூடியது சந்தோஷ மாயினும், அக்காரிய சித்தியும் சந்தோஷ முடையவனுக்குத்தான் உண்டாகிறது. மூலையில் முக்காடிட்டு அழுதுகொண் டிருக்கும் மூதேவிக்கு எக்காலத்திலும் காரிய சித்தியு முண்டாவ தில்லை; சந்தோஷமு முண்டாவ தில்லை. சுபாவமாக நாமெல்லோரும் சந்தோஷ முடையவர்களாக விருக்கின்றோம்—சந்தோஷ சொரூபமாக விருக்கின்றோம். நடுவில் துக்க முண்டாவானேன்? துக்கம் தூக்கத்தினு லுண்டாகின்றது—அஞ்ஞானத்தினுல், அறிவின்மையாகிய தூக்கத்தினுல், அஃதுண்டாகின்றது. இவ்வுடம்பை நானென நினைப்பதனுலேயே துக்க முண்டாகிறது.

இவ்வுலகம் ஒரு நாடக சாலை; நாமெல்லாம் அச்சாலையில் நடிப்பவர்கள்; இவ்வுடல் வேஷம். நாடக சாலையில் அரசனும் ஆண்டியும், சந்தோஷப்படுபவனுந் துக்கியும், பணக்காரனும் ஏழையு முண்டு. ஆனுல், எல்லாம் வேஷ

மாத்திரமே யாகலின், மற்றொருவன் அரசனா யிருப்பது கண்டு பொறாமை கொள்ளுவானேன்? தான் ஆண்டியா யிருப்பதால் துக்கிப்பதும் ஏனோ?

நீங்கள் உயர்ந்த அந்தஸ்துள்ள சரீரத்தை வேஷமாகக்கொண் டிருந்தாலும், தோட்டிக்குந் தாழ்வாய சரீரத்தை யடைந்திருந்தாலும் முறையே அவற்றால் பெருமையாவது சிறுமையாவது உங்கட்கில்லை. உங்களுடைய ஆட்டத்தைச் சரியாக ஆடுங்கள்; நீதிபதியாக நீங்க ளிருந்தால், அந்த வேலையைச் சரியாய்ச் செய்யுங்கள். தெருப் பெருக்கும் வேலை யுங்கள தானால், அதனையுஞ் சரியாய்ச் செய்யுங்கள். இதில் துக்கம் ஏன்?

நாடகத்தில் அழுதற் காட்சிகளும் வருகின்றன. அழுகின்றவர்கள் உண்மையாகவே அழுகின்றார்களா? சந்திரமதி அழுகின்றாள். ஆனால், சந்திரமதி வேஷத்தைத் தரித்துள்ளவன், தான் அழும்போதே மனத்தில் என்ன நினைக்கின்றான்? "நான் சந்திரமதி என்னும் பெண்ணல்லன்; என் வேஷம் அது. நான் ஆண் மகன். நான் எந்தக் குழந்தையையும் இழந்துவிட வில்லை. நான் துக்கிக்கவு மில்லை. நூறு ரூபாய் வருமானத்திற்காக நான் இப்போது இப்படி நடிக்கிறேன்," என்னும் ஞாபகம் அவன் மனத்தி லுண்டு. ஆனால், மாயா நாடக மாகிய இவ்வுலக வியவகாரத்தில் நீங்கள் யாது செய்கின்றீர்கள்? நாடகத்தை நடியுங்கள். மனத்தில் துக்கம் வேண்டா. சற்றே நிதானியுங்கள். நீங்கள் யார்? நீங்கள் இவ்வுடலங்களேயோ? இவ்வுடலங்களொழிந்தால் நீங்களும் ஒழிந்து போவீர்களோ? இல்லை இல்லை. இவ்வுடல், தரித்துக்கொண்ட ஒரு சட்டை. 'ஆன்மா அழியாதது,' என்னும் வசனத்தைக் கேட்டிருக்கின்றீர்களா? அழிவுடைய இவ்வுடல் ஆன்மா வாமோ? அல்ல வெனின், அழி வில்லாத ஆன்மா வன்றோ நீங்கள்?

உள்ளே பாருங்கள் ; உற்பத்தி நாசமில்லாததும், சுக துக்க மில்லாததும், அறிவாநந்த வடிவமுமான ஆன்மா வன்றோ நீங்கள்? அந்த ஆன்மாவுக்கு யாராவது துன்பஞ் செய்தல் முடியுமா? துன்பம் அதனை யணுகுமா? அணு காது. இதனை யறியுங்கள். கை கொட்டுங்கள். எப் போதும் சந்தோஷியுங்கள். 'சந்தோஷமாகவும், சாந்த மாகவும், புத்திப் பிரசன்னமாகவும் இருத்தல் வேண்டும்,' என்று சொல்வது எளிது ; அனுசரிப்பது அரிதன்றோ? இன்று இதனைப் படித்தீர்கள். நன்றாய்த்தா னிருக்கின் றது. இதனை யறிவதும் அதிக கஷ்ட மல்ல ; கொஞ்சம் அமைதியும் யோசனையுந்தான் வேண்டும்.

போனது பற்றி வருந்தியும், இனி வருவது பற்றி எங்கியும் வீண்காலம் போக்குவோ ரநேகர். போன காரி யத்தைப்பற்றி இப்போது நினைப்பானேன்? நிகழ்காலத் தைச் சரியாக உபயோகப் படுத்திக் கொள்பவனுக்கு எதிர்காலம் திருந்திய தாகவும் சந்தோஷங் கொடுக்கக் கூடிய தாகவுமே யிருக்கும். நள்ளிருளில் ஒருவன் வழி நடக்கவேண்டு மாயின், தான் செல்லவேண்டிய இருபது மைல் தூரமும் இருட்டாயிருப்பது பற்றி அவன் வருந்து வது இல்லை. பத்தடியளவு வெளிச்சங் கொடுக்கக் கூடிய ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு, வெளிச்சமா யிருக் கின்ற பத்தடி யளவைக் கடந்து செல்வா னாயின், இன்னும் பத்தடி யளவுள்ள வழி வெளிச்ச மாக்கப்படும். இவ்வித மாக அவன் நடக்கும் இருபது மைல் தூரமும் வெளிச்ச முள்ள தாகவே யாகின்றது. எவ்வளவு தூரம் வெளிச்ச மிருக்கின்றதோ, அவ்வளவு தூரம் நடந்து சென்றால், மேலும் மேலும் வழி வெளிச்சமாய்க்கொண்டே போகின் றது ; கொஞ்சங் கூட இருட்டுக் கிடையாது. ஆகையால், ஏன் நிற்கவேண்டும்? நிகழ் காலத்தை வீணாக்காது வேலை செய்துகொண்டே யிருங்கள் ; அதனைச் சந்தோஷத்து

டன் செய்யுங்கள். உண்மையான அக்கரையுடன் வேலை செய்பவனுக்குத் தடையே கிடையாது. ஆதலின், நாமேன் சந்தோஷத்தையும், அமைதியையுங் கை விடல் வேண்டும்?

நீந்தத் தெரியாதவர் தவறிக் குளத்தில் விழுந்து விட்டால் அமைதியா யிருப்பதனாலேயுங்கூடத் தம்மைக் காத்துக் கொள்ளல் கூடும். தண்ணீரிடத் திருப்பதைக் காட்டிலும் மனிதனிடத்துப் பூமிக்கு ஆகர்ஷண சக்தி குறைவா யிருப்பதால் அம்மனிதன் தண்ணீரில் மிதப்பான். ஆனால், சாதாரணமாய் மனிதர்கள் தண்ணீரில் விழுந்ததும் மன அமைதியை யிழந்து விடுவதால், மிதக்க வேண்டு மென்று தாம் செய்யும் பிரயத்தனங்களாலேயே அவர்கள் அமிழ்ந்து விடுகின்றார்கள். அது போலவே, எதிர் காலத்தில் காரிய சித்தியை யடைய வேண்டி நாம் கொள்ளும் பதட்டமும், அமைதி யின்மையுமே நமது காரியத்தைக் கை கூடி வாராதபடி செய்துவிடுகின்றன.

எதிர் காலத்தி லுண்டாகப் போகும் நன்மைகளையே கெட்டியாக நம்பிக்கொண்டு, காரிய சித்தியை யடைய விரும்பி யலைபவனது கதி, தன்னிழலைப் பிடிக்க எண்ணி ஓடி யலுத்தவனது கதையாம். ஆண்டாண்டு தோறும் ஓடி யலுத்தாலும் ஒருவன் தனது நிழலைப் பிடித்தல் இயலாது; நல்லது; அம்மனிதனே தனது நிழலின்பின்னேடுவ தொழிந்து, நிழலுக்கு முதுகு காட்டிச் சூரியனை நோக்கி யோடினல் அந்நிழல் அவன் பின்னே நாய்போலோடிவரும். ஒருவன் ஜயத்தை(காரிய சித்தியை) விரும்பி யலையும் வரை அவனுக்கு அது சித்திப்ப தில்லை. ஜயத்தை விரும்பி யலைவதும், சந்தர்ப்பங்களை நினைந்து சங்கடப்படுவதும் ஒழிந்து, தனது சக்தியையும், புத்தியையும் தற்காலத்தில் (நிகழ்காலத்தில்) தான் செய்ய வேண்டிய காரியங்களில் செலுத்துபவனுக்கு ஜய முண்டா

கும்; காரிய சித்தி யவன் காலைச் சுற்றும். ஜயத்தின் பின்னே நீங்க ளோட வேண்டா. உங்கள் வேலையை நீங்கள் சரியாகச் செய்தால் ஜயம் உங்களைப் பின் தொடரும்; நியாயாதிபதி நியாயவாதிகளையும், கட்சிக்காரரையும், சேவகரையும் எதிர்ப்பார்ப்பது மில்லை; கூப்பிடுவது மில்லை. நியாயாதிபதி வந்து தம தாசனத்து அமருவா ராஞல், எல்லோரும் தாங்களே அவ்விடம் வருகின்ருர்கள்.

சூரிய சன்னிதானத்தில் உயிர்களெல்லாம் தாமே தொழிற்படுகின்றன. நீங்கள் தேகாத்தும புத்தியொழிந்து, உமது ஆத்துமாவை யறிந்து, அதன் சச்சிதானந்தத்தன்மையினையுணர்ந்து, எந்நாளும் எந்நேரமும் இனிய புன்னகையுடன் விளங்குவீராயின், உமது சன்னிதானத்தில் எக்காரியமும் ஏதுங் குறைவின்றி நன்மையாகவே நடந்துவரும் என்பதற்கோர் ஐயப்பாடு மில்லையாம். அநேகர் பொற்பணிகளையும், இரத்தினங்களையும் காதுகளில் மாட்டிக்கொள்கின்றனர். அவற்றைவிட்டுக் கடவுள் நமக்குத் தந்திருக்கும் அணிகலன்களாகிய நல்லெண்ணம், புன்னகை முதலிய அன்பிஞலாம் பணிகளை அகத்திலும், முகத்திலும் மாட்டிக்கொண்டா லெவ்வளவு அழகா யிருக்கும்! அவற்றை மாட்டிக்கொள்வதற்கு நாம் பணஞ் செலவழிக்க வேண்டுவ தில்லையே! அவை நமக்குப் பணத்தைச் சம்பாதித்துத் தருமே! விருப்பு வெறுப்பின்றி விளங்குவோர்க்கு விண்ணுலகோரும் தொண்டு புரிவரன்றே?

அநேகர் கடமைக்கு அடிமைப்பட்டு, 'நான் இதனை முடிக்க வில்லையே! அதனை யாரம்பிக்க வில்லையே!' என வருந்துவர். அவர்கள் அடைவது அலைச்சலே; ஒய்வு கிடையாது. கடமை என்பது உம்முடைய நன்மைகளையும், மேன்மைகளையும் கெடுத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். நீங்களே உமது எஜமானர்கள். பெரிய

வர்களையும் சிறியவர்களையும் உண்டாக்கினவர்கள் நீங்களே. உங்களுக்குப் பணம் வேண்டுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாக உங்கள் வேலைகள் எஜமானர்களால் இன்றி யமையாதனவாகக் கருதப்படுகின்றன.

'உமது எஜமானர்களிடம் பணிவுடன் நடந்து கொள்ளவேண்டா,' என்று சொல்வதாகத் தப்பபிப்பிராயங் கொள்ளாதீர்கள். பணிவு என்பது உலகத்தார்க்கு இருக்கவேண்டிய உயர்ந்த நற்குணங்களி லொன்று. அக் காரணம் பற்றியே ஔவையார் கொன்றை வேந்தனில், 'கீழோ ராயினுந் தாழ வுரை.' எனக் கூறிப் போந்தனர். ஈண்டுச் சொல்லப்படுவதெல்லாம், "கடமை, பொறுப்பு, பயம் முதலியவற்றால் நீங்கள் உங்களைச் சஞ்சலப்படுத்திக் கொள்ளவேண்டா. சாந்தமாகச் சந்தோஷத்துடனிருந்து உங்களுடைய வேலையைச் செய்யுங்கள். நீங்கள் உங்களை வேலைக்காரர்களாகவும், கஷ்டமான வேலைகளை நீங்கள் செய்வதாகவும் நினைக்க வேண்டா. நீங்கள் உங்களை அரசர்களாகவும், பொழுது போக்கும் உற்சாகமும் வேண்டிச் சில விளையாட்டுகளை ஆடுவதாகவும் நினைத்துக் கொள்ளுங்கள். அரசர்களும், மந்திரிகளும், அக்கிராசனாதிபதிகளும் உங்களைச் சந்தோஷிப்பிக்கிறதற்காக ஏற்பட்ட உங்களுடைய வேலைக்காரர்களே," என்பதுதான்.

---

## ரு. மகம்மது கான் மரணம்

---

சேனாபதி மகம்மது கானுக்கு வழுதாவூர் என்பது பிறப்பிடம். அது செஞ்சிக்கு இருபது மைல் தெற்கிலிருக்கின்றது. அஃது ஒரு பெரிய வூர். அவனுக்கு அன்று மணம். உறவின் முறையார் பலரும் ஒன்றுகூ

வந்து திரண்டிருந்தார்கள். ஜய சிங்குக்கு அந்தரங்க நண்பனும், படைத் தலைவனுமான மகம்மது கான் மணம் விமரிசையாக நடந்ததென்பதில் ஆச்சரியமில்லை யல்லவா? அவன் இயற்கையிலேயே செல்வமும், செல்வாக்குமுள்ள குலத்தில் பிறந்தவன்.

அவ்வூர் முழுவதும் பச்சைப் பந்தல் இட்டிருந்தது. தெருக்களிற் புது மணல் பரப்பி ஒழுங்கு செய்திருந்தது. மகர தோரணங்களும் சித்திரத் தோரணங்களும் செம்மையாகத் துலங்கின. இளநீர்க் குலை, ஈச்சங்குலை, பாக்குக்குலை, பனங்குலை, கூந்தற் பனையின் சடைக்குலை, வாழைக்குலை முதலிய பல விதமான குலைகளைப் பந்தலில் கட்டித் தொங்கவிட் டிருந்தார்கள். பீங்கான் மண்ணி னாலும், படிகத்தினாலும் செய்த பல விதமான வர்ணச் சட்டிகளில் வளர்ந்த பல தேசத்துச் செடிகள் சிறிதும் பெரிதுமாகப் பந்தல் முழுவதும் பரப்பி இருந்தன. நறுமணங் கமழும் விதம் விதமான இன்னடிசில்களும், பலகார வகைகளும் மலைபோலக் குவிக்கப்பட் டிருந்தன. பல வேலைக்காரர்கள் அவற்றை எடுத்தெடுத்து ஏழை களுக்குக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள். மணப் பறை கட லொலியை மட்டுப் படுத்திற்று. முகூர்த்தம் இரவானபடியினால் மணவரை விசித்திர விரிப்புக்களாலும் விநோத விளக்குக்களாலும் காவதம் வரையில் கமழும் அத்தர் புனுகு முதலிய வாசனைத் திரவியங்களாலும் நன் றாகவிளங்கிற்று. ஏழைகளும், தனிகர்களுமாக எள்ளிடவும் இட மில்லாமல் வந்து எம்மருங்கும் நிறைந்திருந்தார்கள். ஆட்டக் கச்சேரி யொரு புறம்; வாத்தியக்கச்சேரி யொரு புறம்; நாடகக் கச்சேரி யொரு புறம்; ஜால வித்தை யொரு புறம். ஒவ்வொன்றும் உத்தம மானது; உயர்ந்த பட்ட தாரிகளைக் கொண்டு நடத்தப் பெறுவது. வந்தவர் பல ரும் விருந்துகளாலும், வேடிக்கைகளாலும், நண்பர்களா

லும் சந்தோஷித்துத் தங்கள் காலத்தை யலுப்பின்றிக் கழிக்கத் தொடங்கினர்கள்.

மகம்மது கான் மதாசாரத்தின் வண்ணம் மணக் கோலஞ் செய்யப்பட்டான்; மஞ்சட் பட்டாடையே இடையில் தரித்தான்; பச்சைக் கருப்பூரமும், குங்குமப் பூவுங் கலந்த கலவைச் சந்தனத்தை மார்பிற் பூசினன்; இரத்தின கண்டி இரத்தினப் பதக்கம் முத்து மாலை முதலிய திவ்வியாபரணங்களை யணிந்தான்; பூமாலையையும், பொற்சரிகை மாலையையும் வேய்ந்தான். பின்னர் அவன் ஷா ஆலம் தில்லியிற் கொடுத்த நீலவேணி யென்ற குதிரைமீ தமர்ந்தும், மணப்பெண் முத்துச் சிவிகையிலமர்ந்தும் இருவருமாக வாத்திய வொலியும், வாழ்த்தொலியும் அதிகரிக்கப் பவனி வந்து மணவறை யடைந்தனர். கற்றறிந்த குருக்கள் மண மகனையும், மண மகளையும் உட்காருவித்து, வைதிக வொழுங்கின் வண்ணம் செய்யவேண்டிய சடங்குகளைச் செம்மையாகச் செய்து வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் செஞ்சிப் பட்டணத்திலிருந்து குதிரை வீரர்கள், சிவ பூஜை வேளையில் கரடி நுழைந்தது போல, மணவறையை யடைந்து, திருமுகத்தை நீட்டினர்கள். மகம்மது கான் கையிற் கொண்டிருந்த மங்கலப் பொருள்களைக் கீழே வைத்துவிட்டு வணக்கத்துடன் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தான்; அப்புறம் அரை நிமிஷமும் ஆலோசனை பண்ணவில்லை; சிரித்துக்கொண்டு சபையி லுள்ளவர்களை நோக்கி, 'பெரியவர்களே, ஆறு காட்டு நவாப்புப் பெரும்படைகளைத் திரட்டிக்கொண்டு செஞ்சிப் பட்டணத்தின்மீது சண்டைக்கு வந்திருக்கின்றாராம். நான் அதிகாலையிற் செஞ்சியி லிருக்கவேண்டும். அரசர் கட்டளை அவசியமானது. உத்தரவு தாருங்கள். பகைவரை வெற்றி கொண்ட பிற்பாடு வந்து மற்றைய

மணத்தையும் முடித்துக்கொள்கிறேன். போர் மூண்டிருப்பதைத் தெரிந்தும் மணத்தில் மகிழ்வதை வீரர்கள் விரும்பமாட்டார்கள்; என் போன்றவர்களுக்கு மணச் சோற்றினும் இரணச் சோறு உருசி யுள்ளது; கட்டளை கொடுங்கள்,' என்றான்.

உறவின் முறையார் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் என்ன செய்யலாமென்று ஏக்கங் கொள்ளலானார்கள். அப்போது தாயும் தந்தையும் எதிரில் வந்து, 'அன்புள்ள மகனே, எங்கள் வார்த்தையைக் கேள்: உன் வார்த்தையைக் கேட்டுப் பெண் வீட்டுக்காரர் பெரிதும் வருந்துகிறார்கள். பிறர் நம்மால் வருத்த மடைய லாகாது. இப்பொழுது இரவு பாதிக்கு மேலும் கழிந்து போயிற்று; பன்னிரண்டு நாழிகைப் பொழுதுதா னிருக்கும். அந்தப் பன்னிரண்டு நாழிகையும் இங்கிருந்து மணத்தை முடித்துக்கொண்டு காலையில் புறப்பட்டுப் போ. பகல் பதினைந்து நாழிகைக்குள் செஞ்சிப் பட்டணம் சென்று விடலாம். விருந்து முதலிய மற்றைச் சடங்குகளை நாங்களிருந்து நடத்திக்கொள்ளுகிறோம். மணம் நின்று போயிற்றென் றுண்டாகும் பரிகாசத்துக்கும் இடமிராது; நன்றாக யோசனை செய்து பார். பொருட் செலவினும் அவமானம் பெரிது,' என்று சொன்னார்கள்.

மகம்மது கான், 'அம்ம! நான் என்ன செய்யட்டும்? என் வேலை அப்படிப்பட்டது; நம்முடைய சவுகரியங்களை யாவது நாள் முதலியவற்றை யாவது சண்டை எதிர் பார்ப்பதில்லை. நாளைப் பதினைந்து நாழிகை வரையில் பகைவன் பொறுத்திருந்து போர் தொடங்குவானா? சாதுரியமாகச் சண்டை செய்தால் அதற்குள் பாதியும் முடிந்து போய்விடுமே! கோட்டைக்கு வெளியில் பகைவன் வந்து வளைந்து படை வீரர்களோடு சிங்க நாதஞ் செய்து சிரித்துத் திரிகிறான். சேனைத் தலைவன் சிற்றின்

பத்தை நினைந்து திருமணக் கோலங் கொண்டு சிறந்து விளங்குகிறான். இஃது ஒழுங்காகுமா? அரசர் பொக்கிஷத்தைத் திறந்து பொருள்களைக் கணக்கின்றிச் செலவிட்டுப் படைகளைப் பெருக்கி வந்தது சமயத்திற் பயன்பட வேண்டாவா? 'சேனைத் தலைவன் சமயத்திற் சாக்குச் சொல்லித் தப்பித்துக்கொண்டு விட்டான்,' என்றுண்டாகும் வசையைக் காட்டிலும், வெற்றி கொண்ட பிற்பாடு விவாகத்தை நிறைவேற்றிக்கொள்வது வசையாகுமா? எனக்கு விடை தாருங்கள். பகைவன் திரட்டி வந்திருக்கும் படைத் திமிரை யடக்கித் திரும்பி வருகிறேன்,' என்று நிலந் தொட்டு வணங்கி வெளியில் வந்துவிட்டான். அவன் சொல்வது நியாயமாக விருந்தபடியினால், அங்குள்ளவர்களில் ஒருவராவது மறுத்துச் சொல்லவில்லை. அவன் தன்னுட னிருந்த படை வீரர்களைப் போர்க் கோலங்கொண்டு பயணப்படக் கட்டளை யிட்டுத் தான் முந்திக் குதிரையேறிக் காற்றினுங் கடுகிச் செஞ்சிப் பட்டணத்தைச் சேர்ந்தான்.

மகம்மது கான் மணக்கோலத்தையுங் களையாமல் மணத்தையு முடியாமல் சமயத்தில் விரைந்து வந்தது ஜயசிங்கு மன்னவனுக்குச் சந்தோஷந்தான். அவன் யுத்த சம்பந்தமாக ஆக வேண்டிய காரியங்களை அவனுடன் கலந்து ஆலோசனை செய்துவிட்டுப் போர்க்குப் புறப்படும்படி கட்டளை யிட்டு அரண்மனை சென்றான்.

* * * *

மகம்மதுகானும், அவன் வீரர்களுமாக வாளையுருவிக் கொண்டு (போர்க்களஞ் சென்று) வீச்சொன்றுக்குப் பத்துப் பன்னிரண்டு விழுக்காடு வீரர்களின் சிரங்களை வெட்டித் தள்ளி வந்தார்கள். மகம்மது கான் பராக்கிரமத்தை மெச்சாதவ ரில்லை. அவன் குதிரை கொள்ளி வட்டத்தைப்போலப் பகைவர் நடுவிற் புகுந்து சுழன்

றது. அது பகைவரது கத்தி வெட்டும், ஈட்டி யெறிவும், குந்தக் குத்தும் தன்மீதும் தலைவன்மீதும் விழாவண்ணம் குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும், சுழன்றும், பதுங்கியும் பல விதமாகத் திரிந்து, தேர்ப்பாகன் ரதிகனைக் காப்பது போலக் காத்து அவனுக்கு வெற்றியை யளிக்கத் தொடங்கிற்று.

எதிரிகளுக்கு மகம்மதுகானது கத்திவெட்டுத் தங்கள் புயத்திலும், சிரத்திலும் வந்து விழும்பொழுது மாத்திரம் தெரிகின்றதே யல்லாமல், முன்னர்த் தெரிகின்றதில்லை. சாரிகை திரிவதனால், 'அவன் எங்கிருக்கிறான்? எப்படி இருக்கிறான்?' என்பதையுங் கூட அவர்கள் தெரிந்து கொள்ளாமற் போனார்கள். சிற்றரசர்களிற் சிலர் உயிரிழந்தனர்; சிலர் கர மறுந்தனர்; சிலர் யமனென்றனர்; சிலர் பயமென்றனர்; சிலர், 'இதோ வந்தான்!' என்றனர். சிலர், 'அதோ போனான்!' என்றனர். சிலர், 'ஐயோ! ஐயோ!' என்றனர். சிலர், 'தண்ணீர்! தண்ணீர்!' என்றனர்.

தாவுத் கான் மகம்மது கானைக் கொல்லப் படைகளை மேலும் மேலும் அனுப்பினபடியே யிருந்தான். வெள்ளம் அதிகமாக வந்தாலும் அதனை மிஞ்சவிடாமல் அடக்கி, மேலே யெழும்புகின்ற பெருங்கடல் போல, எதிர்த்து வந்த வீரர்களில் எவரும் தப்பிச் செல்லாதபடி மகம்மது கானும் அவன் வீரர்களுமாக வளைந்து, ஒரு மணி சாவகாசத்துக்குள் கொன்று குவித்துவிட்டார்கள். தானனுப்பின அத்தனை வீரர்களும் ஹதமானதைக் காணும் பொழுது தாவுத் கானுக்குப் பய முண்டாயிற்று. அவன் பிரமை கொண்டவன்போலச் செய்வது தெரியாமல் திகைக்கத் தொடங்கினான். நவாப்புவின் படைவீரர்கள் புலிகளால் துரத்தப்பட்ட மான் கூட்டங்கள் போல, ஒருவர் போன வழி ஒருவர் போகாமல், தலைவிரி கோல

மாக உயிர் தப்பினுற் போதுமென்று ஓடத் தொடங்கி ஞர்கள்.

மகம்மது கான் அவர்கள் செய்கையை யறிந்து, 'தாவுத் கானும் நவாப்பும் தப்பித்துக்கொண்டார்கள்; அவர்களைக் கண்டுபிடித்துக் கொன்று வாருங்கள்,' என்று தன்னுடைய வீரர்களுக்குப் பகர்ந்தான். அவர்கள், 'தாவுத் கான் எங்கே? நவாப்பு எங்கே? பிடியுங்கள்! அடியுங்கள்! வெட்டுங்கள்! குத்துங்கள்!' என்று கூச்சலிட்டுக் கொண்டு குதிரைகளை நடத்தினுர்கள். * * *

தாவுத் கான் பிணங்களுடன் பிணமாக இரண களத்திற் படுத்து மறைந்தான். திருவண்ணுமலைக்குத் தலைவனுகிய **சுபாங்கன்** என்பவன் நவாப்புவுக்கு அந்தரங்க நண்பன். அவனது கோளுரைகளாற்ருன் **ஸைதுல்லாகான்** ஜயசிங்கு மன்னவனைப் பகைக்கத் தொடங்கினுன். சுபாங்கனைத் தற்செயலாகத் தூரத்திற் கண்டதும், மகம்மது கானுக்கு அளவு கடந்த கோப முண்டாயிற்று; அவ்வீரனை வென்று புகழ்பெற வேண்டுமென்று தனது குதிரையைத் தட்டி விட்டான்.

அது தலைவன் குறிப்பறிந்து சுபாங்கன் சமீபத்தை யடைந்தது. அம்மன்னவன் ஒரு பெரிய யானையின் பிடரியில் அமர்ந்திருந்தான். மகம்மது கான் வாளை யுருவிக்கொண்டு மிகவுஞ் சீக்கிரமாக அவன்மீது பாய்ந்தான். அவ்வளவுதான் தாமதம்! அந்த விநாடியிலேயே சுபாங்கன் வலக்கரம் அறுப்புண்டு நிலத்தில் விழுந்து துடித்தது. உடனே அவ்வரசன் இடக்கரத்தினுல் மகம்மதுகானுக்குச் சலாஞ் செய்து, 'என்னை விட்டுவிடுங்கள்! நான் ஊரை நோக்கி யோடிப் போகிறேன்! உங்களுக்குக் கோடி புண்ணிய முண்டு,' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சினுன். மகம்மது கான், 'சீ! வெட்கங் கெட்டவனே! நீ தேசத் துரோகி! உன்னை உயிருடன் விடலாகாது. பாரத யுத்தத்

தைச் சகுனி யுண்டு பண்ணினதுபோல, நீ இந்தச் சண்டையை யுண்டுபண்ணி யிருக்கிறாய்; நேற்றுக்கூட எங்கள் கிராமங்களில் புகுந்து பெண்களை வருத்திப் பொருளையும் பூஷணங்களையும் கொள்ளை கொள்ளச் செய்தனை; உன் குற்றத்துக்கு மரணமே தண்டனை,' என்று வாளை ஓங்கினான்.

சுபாங்கன், 'குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்; வலக்கரம் அறுப்புண்டதுவே எனக்குப் போதுமானது; என்னைக் காப்பாற்றுங்கள்! உங்கள் அடைக்கலம்,' என்று கெஞ்சினான். மகம்மது கான், 'சீ! மானத்தைப் போக்கிக்கொண்டாவது பிராணனைக் காக்க முயல்கின்றாய்; இப்படிப்பட்ட சூரனென்று தெரிந்திருந்தால் உனது வலக்கரத்தைக் கூட வெட்டியிருக்க மாட்டேன்; சீக்கிரம் பிழைத்தோடிப் போ,' என்று சொல்லி அப்பாற் றிரும்பினான். அப்புறம் இரண களத்தில் அவன் தன்னை எதிர்ப்பவரைக் கண்டிலன். இனிச் சென்று அரசனையாவது காணலாமென்று வெற்றிச் சங்கத்தை முழக்கி, நீலவேணியைத் திருப்பினான். அத்துரகம் கனைத்துக்கொண்டு தெற்கு முகமாகச் செல்லத் தொடங்கிற்று.

தாவுத் கான் மகம்மது கானுக்குப் பயந்து பிணங்களில் மறைந்துகொண்டானென்று படித்திருக்கிறீர்கள். அவன் தனக்கு நேர்ந்த அவமானத்துக்கு அறிவு கலங்கி விதியை நொந்துகொண்டிருந்தான். மகம்மது கான் அவன் படுத்திருக்கும் பக்கமாகவே தற்செயலாகத் திரும்பிச் செல்ல நேர்ந்தது. அவன் அதனைக் கண்டு மனம் புழுங்கிச் சமயத்தை நழுவ விடாமல், 'இப்பொழுதாவது கடவுளுக்கு நம்மீது இரக்கமுண்டாகிறதாவென்பதைப் பரீக்ஷிக்கலாம்; தவறினால் உடனே தற்கொலை புரிந்துகொண்டு உயிரைத் துறக்கலாம்,' என்று தீர்மானித்து, அவன் சென்றதும் எழுந்து, துப்பாக்கியை

யெடுத்துப் பகைவன் பிடரிக்குக் குறி பார்த்துச் சுட்டான். அது மிகவும் வேகமாக வந்து அவன் பிடரியிற் பாய்ந்தது. மகம்மது கான், 'இரண களத்தில் உயிருள்ளவர் ஒருவரு மில்லாதிருக்கும்போது என்னை யாவர் சுட்டிருக்கக் கூடும்?' என்று பின் புறமாகத் திரும்பினான். அப்போது மற்றொரு குண்டு பறந்து வந்து நெற்றியிலுருவிற்று. மகம்மது கான் அந்தக் கணத்திலேயே அநியாயமாக அவனியில் விழுந்திறந்தான். [மணமகன் பிண மகனானான்.]

---

## ௬. குந்தி தேவியும் கர்ணனும்

---

கிருஷ்ணன் சமாதானத்தைப்பற்றிக் கௌரவரைக் கெஞ்சிக்கேட்டும் அதில் சித்தி பெறாமல் திரும்பிப் போன பிறகு விதுரர் குந்தியினிடம் போய் மெதுவாய்த் துக்கத்துடன் இந்த வார்த்தையைச் சொன்னார்:

'ஜீவித்திருக்கிற புத்திரர்களையுடையவரே! நான் எப்போதும் சமாதானத்தையே விரும்புகிறேன் என்பது உமக்குத் தெரிந்த விஷயம். தொண்டை கம்மிப் போகும்படியாக நான் கதறியும் துரியோதனன் என்வார்த்தையை ஏற்றுக்கொள்ள வில்லை. அரசனாகிய யுதிஷ்டிரனோ, சேதி ராஜன், பாஞ்சாலர், கேகயர், பீமன், அர்ஜுனன், கிருஷ்ணன், யுயுதானன், நகுல சகதேவர்கள் இவர்களைத் துணை சேர்த்துக்கொண்டு தனது சுற்றத்தாரிடம் உண்டாயிருக்கிற பிரியத்தினாலே தர்மத்தையே மேலாகக் கொண்டு, ஒப்பற்ற பராக்கிரமசாலியா யிருந்தும், பல ஹீனனைப்போல் உபப்பிலாவியத்தில் காத்துக்கொண்டிருக்கிறான். இவ்விடத்தில் திருதராஷ்டிர ராஜரோ,

கிழவராயிருந்தும் சமாதானத்தை நினைக்க வில்லை; புத்தி ரர்களை அடைந்திருக்கிற கருவத்தால் மயங்கிப் பாவமார்க் கத்தில் நடக்கிறார். ஜயத்ரதன், துச்சாசனன், சௌபல குமாரன் இவர்களுடைய துஷ்டத்தனத்தினாலே உட் கலகமான சண்டை உண்டாகப் போகிறது. நீதியுள்ளவ னிடத்தில் அநீதியாய் நடக்கின்றவர்கள் சீக்கிரத்தில் அதன் பயனை அடைவார்கள். கௌரவர்கள் இப்படி நீதி நெறி கடந்து நடக்கிறதைப் பார்த்துத் துக்கப்படாதவர் கள் யார்? கேசவன் சமாதானம் செய்ய முடியாமல் திரும்பிப் போனபோது, பாண்டவர்கள் நிச்சயமாகவே யுத்தம் தொடங்குவார்கள். அதன்மேல் கௌரவர்க ளுடைய பாவம் வீரர்களுக்கு நாசத்தை யுண்டாக்கும். இவற்றை நினைத்துக்கொண்டு இரவும் பகலும் நித்திரை பிடியாம லிருக்கிறேன்,' என்றார்.

குந்தி தேவியானவள் தன் புத்திரர்களுடைய காரிய சித்தியையே எப்போதும் விரும்பி இருக்கிற விதுர ருடைய வார்த்தையைக் கேட்டுப் பெருமூச்சு விட்டாள்; துக்கத்தினால் வருந்தித் தனக்குள் இப்படி யோசித்தாள்: 'சீ! ஐசுவரியம் கெட்டது! இதன் நிமித்தம் சுற்றத்தார் களுக்குள் பெரிய சங்காரம் நடக்கப் போகிறது. நிச்சய மாகவே இந்தச் சண்டையில் நேசர்கள் கொல்லப்படுவார் கள். இதைவிட மேலான துக்க மென்ன இருக்கிறது? சேதியர், பாஞ்சாலர், யாதவர் இவர்களைச் சகாயமாகக் கொண்டிருக்கிற பாண்டவர்கள் பாரதர்களுடன் நிச்சய மாகவே யுத்தம் தொடங்குவார்கள். உண்மையாகவே இந்த யுத்தத்தில் தர்ம மில்லை. நாம் யுத்தம் செய்யாவிட்டாலோ, தரித்திரமும் அவமானமும் நமக்கு வந்து சேரும். தரித் திரனாக இருப்பதைவிட மரணமே மேலானது. சுற்றத் தாரைக் கொல்வது வெற்றி யாகாது. இதை நினைத்து என் இருதயம் பிளக்கிறது. பிதாமகரும் சந்தனு

குமாரருமான பீஷ்மர், யுத்த வீரர்களில் சிறந்தவரும் குருவுமான துரோணர், கர்ணன் இவர்கள் துரியோதனன் பக்கத்தி லிருக்கிறார்கள். இஃது என் பயத்தை விருத்தி யாக்குகிறது. துரோணர் தமது சிஷ்யர்களிடத்தில் மனமியைந்து சண்டை போடமாட்டார். அப்படி இருக்கப் பிதாமகரான பீஷ்மர் ஏன் பாண்டவர்களிடம் பிரியத்தைக் காட்டமாட்டார்? பாவியான இந்தக் கர்ணன் மாத்திரமே புத்தி மயங்கி, அறிவு கெட்ட துரியோதனன் சொல்லுகிற வழியில் நடக்கிறான். துரியோதனனோ, பாண்டவர்களைப் பகைக்கிறான். பாண்டவர்களுக்குத் துன்பம் செய்கிற துரி யோதனன் பட்சத்தில் கர்ணன் பிடிவாதமா யிருக்கிறான்; அவன் பராக்கிரமசாலி. இதுதான் இப்போது என் மனத்தை எரிக்கிறது. ஆகையால், இன்று தினம் நான் அவனிடம் போய் உண்மையைச் சொல்லி, அவனுக்குச் சந்தோஷம் உண்டாக்கிப் பாண்டவர்களிடத்தில் பிரியமா யிருக்கும்படி செய்கிறேன். என் பிதாவான குந்தி போஜர் அரண்மனை அந்தப்புரத்தில் நான் இருந்தபோது பரிசுத்த ரான துருவாச மகரிஷியானவர் எனக்குச் சில தெய்வ மந்திரங்களை அளித்து வரங்கொடுத்தார். நெடுநேரம் அந்த மந்திர பலத்தைப்பற்றி நடுங்கின மனத்தோடு யோசித் தேன்; பெண் குணத்தினாலும், வயது முதிராத இளம்பரு வத்தினாலும் அடிக்கடி யோசித்தேன். நம்பிக்கையுள்ள செவிலித்தாய் பாதுகாப்பதாலும், வேலைக்காரிகள் சூழ்ந் திருப்பதாலும் நிந்தனைவராத விதத்தையும், என் பிதாவின் மானத்தைப் பாதுகாக்கும் விதத்தையும், நான் குற்றம் அடையாமலிருக்கிற மார்க்கத்தையும் யோசித்துக் கடைசி யில் அந்தப் பிராமணரை வணங்கி மந்திரங்களைப் பெற்றுக்கொண்டேன். எனக்குண்டான ஆச்சரியத்தா லும் மூடத்தனத்தினாலும் கன்னிகையா யிருக்கும்போதே சூரியனை அழைத்தேன். கன்னிகையா யிருந்தபோது

என் கர்ப்பத்திலிருந்து பிறந்த அவன் (கர்ணன்) ஏன் என் வார்த்தைக்குக் கீழ்ப்படியமாட்டான்? அந்த வார்த்தை களோ, அவனுடைய சகோதரர்களுக்கு நன்மையாயும் ஒவ்வத்தக்கவைகளாயு மிருக்கின்றன,' என்று யோசித்துத் தன் மனத்துக்குள் நிச்சயித்துக்கொண்டாள்.

இப்படிக் குந்தி காரிய நிச்சயம் பண்ணிக்கொண்டு, பரிசுத்தமான பாகீரதி நதியை நோக்கிச் சென்றாள்; கங்கையின் கரையை யடைந்து, அன்புள்ளவனும், சத்திய சந்தனுமான தன் குமாரன் வேத மந்திரோச்சாரணம் செய்வதைக் கேட்டாள். அப்போது கர்ணன் கீழ்த் திசையை நோக்கிப் பார்த்துக்கொண்டும், இரு கரங்களும் உயர எடுத்துக்கொண்டும் நின்றான். குந்தி தன் காரியத் தின் நிமித்தம் அவன் ஜபம் முடிகிறவரையில் அவனுக்குப் பின்னால் நின்றுகொண் டிருந்தாள். விருஷ்ணி குலத்தில் பிறந்துகுரு வமிசத்தில் புகுந்தவளான குந்தி சூரியகிரணத் தில் வருந்தி வாடின தாமரை மலர் மாலைபோ லானாள்; பிறகு கர்ணனுடைய அங்க வஸ்திரத்தினால் உண்டான நிழலில் ஒதுங்கி நின்றாள். உறுதியான விரதமுள்ள கர்ணன் சூரிய கிரணங்களால் தன் முதுகு சுடுகிறவரையி லும் ஜபம் பண்ணிக்கொண் டிருந்தான். பிறகு பின்புறம் திரும்பிப் பார்த்துக் குந்தியைக் கண்டு ஆச்சரிய மடைந் தான். முறைப்படி அவளை வணங்கிக் கைகளை அஞ்சலி செய்து கொண்டு, தர்மாத்துமாவும் பராக்கிரம சாலியு மான கர்ணன் வணக்கத்துடன் சம்பாஷித்தான்.

இராதை அதிரன் இவர்களுடைய புத்திரனான கர்ணன் குந்தியை நோக்கி, 'அரசியரே, எதற்காக இங்கே வந்தீர்? நான் உமக்கு என்ன செய்யவேண்டும்? சொல்லும்,' என் றான். குந்தி, 'நீ குந்தியின் குமாரன்; இராதையின் குமா ரன் அல்லை. அதிரன் உனக்குப் பிதாவல்ல. கர்ணா, நீ சூதன் குலத்தில் பிறக்க வில்லை. நான் சொல்வதை நம்பு: நான்

கன்னிகையா யிருந்தபோது உன்னைப் பெற்றேன். நான் உன்னையே முதலில் என் கர்ப்பத்தில் தரித்தேன். நீ குந்தி ராஜர் அரண்மனையில் பிறந்தாய். கர்ண, சாஸ்திர தாரிகளுள் சிரேஷ்டமானவனே, பிரகாசத்தைக் கொடுத்துத் தினத்தை உண்டாக்குகிற தெய்வமான சூரியன் என்னிடத்தில் உன்னைப் பெற்றான். எதிர்க்க முடியாதவனே, புத்திரனே, என் பிதாவின் அரண்மனையில் குண்டல கவசங்களுடனும் அழகுடனும் நீ பிறந்தாய். நீ உன் சகோதரர்களை அறிந்துகொள்ளாமல், திருதராஷ்டிர குமாரர்களைச் சேவித்துக்கொண் டிருக்கிறது சரியல்ல. புத்திரனே, முக்கியமாய் நீ அப்படி இருப்பது நியாயமாகாது. தமது புத்திரர்களிடத்தில் உண்மையான அன்புடையவர்களா யிருக்கிற மாதா பிதாக்களைத் திருப்தி செய்து வைக்கிறது புத்திரர்களுடைய கடமையாம். இஃது எல்லாவற்றினும் மேலான கடமை. அர்ஜுனனால் சம்பாதிக்கப்பட்டு, யுதிஷ்டிரன் ஆண்டு வந்த ஐசுவரியத்தைத் துஷ்டசித்தமுள்ளவர்கள் பொருளாசையால் அபகரித்துக் கொண்டார்கள். ஆகையால், அர்ஜுனனும் கர்ணனும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பதைக் கௌரவர்கள் இன்று பார்க்கட்டும். நீயும் உன் சகோதரர்களும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறதைப் பார்த்துத் துஷ்டர்கள் எல்லாரும் உங்களுக்குத் தலை வணங்கட்டும். இராமனும் கிருஷ்ணனும் இருப்பதுபோல கர்ணனும் அர்ஜுனனும் கூடி வாழட்டும்; கர்ணார்ஜுனர்கள் என்கிற ஒரே பேரால் ஜீவிக்கட்டும். நீங்களிருவரும் ஒன்றாய்க் கூடியிருந்தால் உலகத்தில் நிறைவேறாத காரியம் என்ன உண்டு? கர்ண, பாகவேதிகையில் பிரமதேவன் தேவர்கள் சூழ வீற்றிருப்பதுபோல் நீ உன் சகோதரர்கள் சூழ விளங்கிக்கொண்டிரு. சகல தர்மங்களையும் செய்துகொண்டு என் சுற்றத்தாரில் நீ முதன்மையாயிரு. கர்ண, சூத புத்திரன் என்கிற இழிந்த

சொல்லை நீ யடையாதே. நீ மஹா சக்தி யுள்ள *பர்க்கன்,' என்றாள்.

குந்தி யிப்படிச் சொன்ன பிறகு, சூரிய மண்டலத்தி லிருந்து வந்த இனிய ஓசையைக் கர்ணன் கேட்டான். வெகு தூரத்திலிருந்து வந்த அந்தச் சப்தம் சூரியன் பிதாவுக்குரிய அன்பினால் சொன்னது. 'பிரதை சொன்ன வசனம் உண்மையானது. கர்ண, உன் மாதாவின் சொற்படி நட. புருஷ வியாக்கிரமே, இந்த வார்த்தையை யனுசரித்து நீ நடந்தால் உனக்கு நல்ல பலன் உண்டாகும்,' என்ற தொனி கேட்டது. தன் மாதாவும், பிதாவான சூரியனும் சொன்னதைக் கேட்டும் கர்ணனுடைய மனம் சலியாமல் சத்தியத்திலேயே நிலைபெற்றிருந்தது.

கர்ணன், 'க்ஷத்திரியோத்தமியே, நீர் சொன்னபடி உமது கட்டளைக்குக் கீழ்ப்படிகிறது மேலான கடமை யென்று நான் அங்கீகரிக்கமாட்டேன். மாதாவே, நான் பிறந்த அப்போதே நீர் என்னை விலக்கிவிட்டீர். இந்தத் துன்பமானது மரணபாயத்துக் கேதுவானது. நீர் எனக்குச் செய்தது என்னுடைய காரியங்களையும் புகழையும் அழிக்கத் தக்கது. நான் நிச்சயமாக க்ஷத்திரியனாகப் பிறந்திருந்தும், க்ஷத்திரியர்களுக்குரிய ஸம்ஸ்காரங்களைப் பெறவில்லை. இதைவிடச் சத்துருக்களால் செய்யப் படும் கெடுதி யாது? நீர் என்னிடத்தில் அன்பாயிருக்க வேண்டிய காலத்தில் இரக்கமில்லாமல் என்குலத்துக்குரிய ஸம்ஸ்காரங்களையும் தர்மத்தையும் அழித்துவிட்டு, இன்றைய தினம் வந்து எனக்குக் கட்டளை யிடுகிறீர். தாயார் செய்யவேண்டிய நன்மைகளை எனக்கு நீர் முன்பு செய்ய வில்லை; அப்படி யிருந்தும், உமது சொந்த நன்மையைக் கருதி இன்றைய தினம் இப்படிக் கட்டளை யிடுகிறீர்.

* பர்க்கன்—சூரியன்.

கிருஷ்ணனைச் சாரதியாகப் பெற்றிருக்கிற அர்ஜுனனுக்குப் பயப்படாதவன் எவன் இருக்கிறன்? ஆகையால், நான் இன்று பார்த்தனுடன் சேர்ந்துகொண்டால் எவன்தான் என்னைப் பயந்தவனென்று மதிக்கமாட்டான்? நான் அவர்களுடைய சகோதரனென்று இதுவரைக்கும் ஒருவரும் அறியவில்லை. நான் அவர்களுக்குச் சகோதரன் என்று சண்டையைவிட்டுப் பாண்டவர்களிடம் போய்ச் சேர்ந்தால் க்ஷத்திரியர்கள் எல்லாரும் என்ன சொல்லுவார்கள்? விரும்பின எல்லாவற்றையும் பெற்று அவர்களால் வணங்கப்பட்டுச் சுகமாய் வாழ்ந்த நான் அந்தத் திருதராஷ்டிர புத்திரர்களைச் சேவிப்பது முற்றும் இழிவானதென்று இப்போது எப்படிவிடக்கூடும்? மற்றவர்களுடன் பகை கொண்ட திருதராஷ்டிர குமாரர்கள் என்னை மரியாதையாய்ச் சேவித்து, வசுக்கள் இந்திரனை வணங்குகிறதுபோல என்னை வணங்கிக்கொண்டிருக்கிறர்கள்; என் உதவியைக்கொண்டு பகைவரை வெல்ல விரும்பி இருக்கிறர்கள். அவர்களுடைய அந்த எண்ணத்தை நான் எப்படித் தடுக்கக்கூடும்? அவர்களுடைய படகு என்வசத்திலிருக்கிறது. ஆகையால், கடக்கமுடியாத சமுத்திரத்தை என் மூலமாகத் தாண்டக் கருதி யிருக்கிறர்கள். வேறு ஓர் ஓடக்காரன் இல்லாமலிருக்கிற அந்தச் சமுத்திரத்தைத் தாண்ட விரும்பி யிருக்கிற அவர்களை நான் எப்படி விலக்கக்கூடும்? திருதராஷ்டிர குமாரர்களால் காப்பாற்றப்பட்டவர்கள் எல்லாரும் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்ட இதுவே சமயம். ஆகையால், நான் உயிரையும் கவனியாமல், அவர்களுக்காக உழைப்பேன். மனவுறுதி யில்லாதவர்களும் தங்கள் எஜமானனால் வேண்டியவற்றைக் கொடுத்து உபகரிக்கப்பட்டவர்களுமான பாவிகள் சமயம் வந்தபோது, தாங்கள் பெற்ற உபகாரத்துக்குப் பதில் செய்யமாட்டார்கள். அப்படிப்பட்ட பாவிகளும், தங்

கள் அரசரிடத்தில் நன்றி யறிவு இல்லாதவர்களும், எஜமானனுடைய அன்னத்தை அபகரித்த திருடர்களுமான அவர்களுக்கு உண்மையாகவே இகபர மிரண்டு மில்லை. நான் உம்மிடத்தில் வஞ்சனையாகப் பேச மாட்டேன். திருதராஷ்டிர குமாரனுக்காக உமது புத்திரர்களிடத்தில் என் பலத்துக்கும் சக்திக்கும் தக்கபடி சண்டை செய்வேன். நான் அன்பையும் நல்ல நடக்கையையும் விடக்கூடாது. ஆகையால், உமது வார்த்தை நன்மை யுள்ளதாயிருந்தாலும் நான் அதற்கு உடன்படமாட்டேன். உமது வேண்டுகோளும் பய'னில்லாமற் போகக் கூடாது. அர்ஜுனனைத் தவிர, யுதிஷ்டிரன், பீமன், நகுல சகதேவர்களாகிய உமது மற்றப் புத்திரர்கள் என்னால் எதிர்க்கத்தக்கவர்களா யிருந்தாலும், நான் அவர்களைக் கொல்வதில்லை. யுதிஷ்டிரனுடைய போர் வீரர்களுக்குள் அர்ஜுனன் ஒருவனோடு மாத்திரம் யுத்தம் செய்வேன். அர்ஜுனனை நான் யுத்தத்தில் கொன்று பெரும்புகழ் பெறுவேன்; அல்லது அர்ஜுனனால் நான் கொல்லப்பட்டுப் பெரிய புகழை யடைவேன். மகிமையுள்ளவரே, என்னால் அர்ஜுனன் பட்டாலும், அர்ஜுனனால் நான் மாண்டாலும், உம் புத்திரர்கள் ஐந்து பேருக்குக் குறையமாட்டார்கள்,' என்றான்.

கர்ணன் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்ட குந்தி தேவி, தன் உறுதியினின்றும் அவன் தவறாமலிருக்கிறதற்காக வருந்தி, அவனைத் தழுவிக்கொண்டு சொல்கிறாள்: 'கர்ண, நீ சொல்லுகிறது சரியானதே. கௌரவர்கள் நிச்சயமாகவே நாசத்தை அடைவார்கள். விதி வலியுடையது. சத்துருக்களை அழிக்கிறவனே நாலு புத்திரர்களைக் காப்பாற்றுகிறதாக வாக்குறுதி சொல்லி இருக்கிறாய். யுத்தத்தில் நீ ஆயுதங்களைப் பிரயோகம் செய்கிறபோது இந்த அபயச்சொல் உன் ஞாபகத்திலிருக்

கட்டும்,' என்றாள். பிறகு அவனை நோக்கி, 'நீ க்ஷேமமாயிரு; உனக்குச் சுகம் உண்டாகட்டும்,' என்றாள். கர்ணனும், 'அப்படியே ஆகக் கடவது,' என்று பதில் சொன்னான். உடனே இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெவ்வேறு திக்கை நோக்கிச் சென்றனர்.

---

## எ. பயமின்மை

---

பயத்தினால் பலனடைந்தோர் இப்பாரினி லொருவருமில்லை யாயினும், பல னிழந்தோர் பல ராவர். பயங்காளிகள் பலசாலிகளா யிருந்தும் பலவீன ராகின்றனர்; கல்விமான்களா யிருந்தும் திறமையுடன் வியவரிக்காமையால் மூடரே யாகின்றனர்; பல தொழில் செய்யும் திறம் பெற்றோராயினும் தமது வேலைகளையும் செய்துகொள்ள முடியாத முடவன் அல்லது மொண்டிக்குச் சமான ராகின்றனர். இங்ஙன மாயின், பயமுடையோர் காரிய சித்தி யடைவ தெங்ஙனம்? அவர்கள் உலகில் மேன்மை யடைவ தெங்ஙனம்? பயம் மனிதனுடைய முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதால், காரியசித்தியை—உலகில் மேன்மை யடைவதை—விரும்பும் ஒவ்வொருவரும் பயமின்மையைச் சம்பாதித்துக்கொள்ளல் அவசியமா மென்பது குன்றின் மேலிட்ட விளக்கென நன்கு விளங்குவதாம்.

மக்களுக்கு இயமனால் மரண வேதனை இறுதிக்கண் ஒருநா ளுண்டாவ துண்மையாயினும், பயங்காளிகளுக்குப் பயத்தினால் மரண வேதனை(க்குச் சமமான வேதனை)கள் பல தினந்தோறு முண்டாகின்றன. பயமுடையோன் அநாவசியமாகத் தானே கஷ்டங்களுக்குள்ளாகின்றான். சென்னையில் எம்டன் (Emden) கப்பல் வந்ததைக் கேட்ட

ஒரு கோமுட்டிச் செட்டியார், 'ஒச்சினடா, ஜெர்மனிவாடு! (ஜெர்மனியன் வந்துவிட்டான!)' என வலறி விழுந்து, விழுந்த வக்கணமே உயிர் துறந்தனரெனின், நோய் முதலிய காரணங்களுள் ஒன்றுமில்லாதிருந்தும், அவருடைய பயமே அவரைக் கொலை செய்ததன்றோ?

பயமின்றிய பார்வையினல் சிங்கங்களைப் பயமுறுத்தியோட்டிவிடலாம்; பகைவரையும், துஷ்டரையும் அடக்கிவிடலாம்; ஒரு பாதிரியார் (பிஷப்-ஹானிங்டன்) வேட்டையில் ஒரு சிங்கக் குட்டியைச் சுட்டு வீழ்த்திய போது ஆணும் பெண்ணுமாக இரண்டு பெரிய சிங்கங்கள் அவரை நோக்கி உக்கிரத்தோடு வந்தன; அவை வருவதைக் கண்ட அவருடைய வேலையாள் ஓடிவிட்டான். ஆனல், அவர் சற்றும் அசையாமல் அச்சிங்கங்களை உற்று நோக்கிக் கொண்டு நின்றார். அதனல் ஓடி வந்த சிங்கங்கள் சிறிது தூரத்திலேயே நின்றுவிட்டன. அவர் ஓடி யிருந்தால் உயிரிழந்திருப்பார். பின்பு அவர் கொஞ்சங் கொஞ்சமாகப் பின் வாங்கவும், அச்சிங்கங்களும் மெல்ல மெல்லத் தமது குட்டி யிருந்த விடம் வந்து உறுமி உறுமித் துக்கம் பாராட்டின. தாம் சுட்ட சிங்கக் குட்டியை விட்டுவிட்டு வர மனமில்லாத பாதிரியார் மீண்டும் சிங்கங்களை உற்று நோக்கிக்கொண்டே அக்குட்டி இருக்கு மிடஞ் செல்ல, பெரிய சிங்கங்கள், அவர் தைரியமான பார்வையுடன் தம்மை நோக்கி வருவதைக் கண்டு பயந்தோடிப் போயின. சிங்கக் குட்டியைப் பாதிரியார் வீடு கொணர்ந்தார்.

நமது சுவாமி இராம தீர்த்தரும், 'தேகம் நானல்ல; மனம் நானல்ல; மேன்மை பொருந்திய திவ்ய ஆன்மா நான். நெருப்பிற்கு என்னை யெரித்தல் முடியாது; ஆயுதங்களுக்கு என்னைக் காயப்படுத்தல் முடியாது,' என்பன போன்ற அனுசந்தானத்துடன் ஹிமாலய மலைகளில் உலாவிக்கொண் டிருந்தபோது ஐந்து கரடிகள் அவரைச்

சந்தித்தன. அவர் நேரே அவற்றின் கண்களை உற்றுப் பார்த்தார்; அவரை யாதொரு தொந்தரையும் செய்யாமல் அவை ஓடிவிட்டன. வேறு சமயங்களில் அம்மாதிரியே ஓர் ஓநாயும் ஒரு புலியும் அவரைவிட் டோடிவிட்டன வென்றுஞ் சொல்லப்படுகின்றது.

சுரைக்காய்ச் சுவாமிகள் நால்வருடன் ஒரு மலையடி வாரத்தி லுள்ள குளக் கரையில் படுத்துக்கொண் டிருந்த போது ஒரு கரடியும் ஒரு புலியும் எதிர்கரையில் ஒன்றன்பி னொன்றாக வந்து நீரருந்திச் சிறிது நேரம் படுத்திருந்து எழுந்து போய்விட்டன.

'அவர்கள் மகாத்துமாக்கள்; அவ்வழி நமக்கு வருமோ?' என்று சந்தேகிக்க வேண்டா. அச்சக்தி உங்களிடத்தும் உள்ளது. அதுதான் பயமின்மை; தைரியம். நீங்கள் பயப்படாதீர்கள். உங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. ஓடுகின்றவனைக் கண்டால் துரத்துகின்றவனுக்கு இலாபம். பயப்படுகின்றவனைக் காக்கைகூட ஏமாற்றும்; நாயும் துரத்தி யடிக்கும். நாய்கள் குலைக்கும்போது பயந்தோடுகின்றவர்களைத்தான் அவை கடிக்கும். தைரியத்தோடு நிற்பவர்களை எந்தத் துஷ்ட நாயும் ஒன்றுஞ் செய்ததில்லை; செய்வது மில்லை. நாம் பயப்படாம லிருந்தால், புலி சிங்கங்களையும் அடக்கலாம்; ஓடும்படியும் செய்யலாம். பூனையைக் கண்ட புறாக்கள் கண்களை மூடிக்கொண்டு அது தம்மைப் பார்க்க வில்லையென நினைத்துக்கொள்ளுகின்றன. பூனை யவற்றை விழுங்கி ஏப்ப மிடுகின்றது. நடுங்கிக்கொண்டே ஒருவன் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் திரவ பதார்த்தை ஊற்றினால் அது சிந்தி விடும்; சில சமயம் பாத்திரமும் தவறிக் கீழே விழுந்து உடைந்து விடும். சுலபமாய்ப் பயமின்றிப் பாத்திரத்தைக் கையிலெடுப்பவர் ஒரு துளி கூடச் சிதற விடுவ தில்லை.

இரண்டு மூன்று மணங்கு நிறையுள்ள மாமிசம் நிறைந்த இவ்வுடலை, சில சமயங்களில் ஒரு சிறு பட்டாசு, ஓரற்ப எலி, ஒரு சருகினுடைய சலசலப்பு, நிழல் என்னுமிவை குலுக்கி (பயத்தினால் நடுங்கும்படி செய்து) விடுவது மிக அதிசய மல்லவா? துன்பத்திற்கே இருப்பிடமான இவ்வுடலை நானெனக் கருதி யிருப்போர்க்குத் துன்பமல்லாது பின் யாது கிடைக்கும்? அவர்களுக்குப் பயம் எப்படி யொழியும்? பயமின்மை யென்பது என்ன? தேகாபிமானம் ('தேகம் நான்,' என்னும் புத்தி) ஒழிந்தவன்றே பயம் பறந்தோடிப் போம். தேகாபிமானம் ஒழிந்த பிறகு நீங்கள் புலி, சிங்கம், கரடி, பாம்பு, கத்தி என்னுமிவை மாத்திரமல்ல; இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கும், விஷ்ணுவின் சக்ராயுதத்திற்கும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளது திரி சூலத்திற்கும் பயப்படமாட்டீர்கள். தைரியத்தினால் எமன் வாயிலிருந்து தப்பினவர் அநேகர்.

ஒரு பஞ்சாபிச் சிப்பாய் ஒரு தரம் கப்பலில் பிரயாணம் செய்யும்போது அவனுக்கு ஏதோ ஒரு நோய்கண்டது. கப்பல் வயித்தியர்கள், 'தொத்து வியாதி கண்ட ஒருவன் பிழைக்கமாட்டான்,' என்று சொல்லிவிட்டால், கப்பலதிகாரிகள் அவனைக் கடலிலெறிந்து விடுவர். அவன் பிழைக்க மாட்டா னென்று பஞ்சாபிக்குச் சாவு தீர்ப்புச் சொல்லப்பட்டது. அவன் இதனை யறிந்ததும், அளவு கடந்த சக்தியுட னெழுந்து, சிறிதும் பய மின்றி, நேரே அவ்வைத்தியர் இருக்குமிடஞ் சென்று, வைத்தியருக்கு நேரே தன் துப்பாக்கியை நீட்டி நின்று, 'நான் அசௌக்கியமா யிருக்கின்றேனா? நீர் அப்படிச் சொல்லுகின்றீரா? நான் உம்மைச் சுட்டு விடுகின்றேன்,' என்றான். வைத்தியர் உடனே அவன் சுகமா யிருக்கின்றா னென்று பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டனர்.

பயம் பல ஹீனம். தைரியத்தினல் இல்லாத பலமும் வரும். துன்பத்திற்குப் பயப்படுவதைவிட உயர்ந்த துன்ப மொன்று மில்லை. சாவுக்காகப் பயப்படுவதைக் காட்டிலும் ஆயிர முறை சாவது சுலபமான காரியம். 'அகமே புறம்.' என்னும் ஒரு பழமொழி யுண்டு. உங்கள் மனத்தில் அன்பிருக்குமாயின், வெளியிலும் அன்பையே காணலாம். மனத்தில் பகையிருந்தால், வெளியிலும் பகைதான். உள்ளே பயமிருந்தால், வெளியிலும் பயந்தான். ஆபத்துக்களும், ஏமாற்றங்களும் வரும் என்று நீங்களெண்ணினல் கட்டாயமாக அவை உங்களுக்கு உண்டாகும். நீங்கள் பயப்படவேண்டா. உங்களிடத்தில் பரிசுத்தமிருக்குமாயின், உங்களை மலினத் தன்மை யணுகாது. காவ லில்லாத இருட்டு வீட்டிலேதான் திருடர் புகுவர்; விளக்கிருக்கும் வீட்டில் புகத் துணிவதில்லை. உங்கள் மனத்தில் உண்மை யென்னும் விளக்குப் பிரகாசித்துக்கொண் டிருந்தால், உங்களைப் பயமென்னும் பிசாசு தொடராது ; நீங்கள் மயங்க மாட்டீர்கள்.

'எங்களுக்கு இலௌகிக (உலக) ஞான மில்லையே!' என மன வருத்தப்படாதீர்கள். புண்ணியத்தின் முன் பாவமும், (சாத்வீக எதிர்ப்பினர் கைக்கொள்ளும்) ஆன்ம சக்தியின் முன் தேக சக்தி, ஆயுத சக்தி முதலியனவும் தமது பலங் குறைந்தொழியும். இங்ஙனமாயின், தெய்வீக ஞானம் (ஆன்ம ஞானம்) உள்ளவனுக்கு இலௌகிக ஞானம் இருந்தாலென் ? இல்லாமற் போனலென் ? தேகம் நானல்லவென் றுணர்வீர்க ளானல், தெய்வத் தன்மை பொருந்திய ஆன்மாவாகிய உங்களை யுணரும் வழியில் நிற்பீர்களானல், நீங்களும் அப்பரைப்போன்று, ' நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்; நடலையில்லோம்; ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோ மல்லோம்; (எமக்கு) இன்பமே

(யொழிய) எந்நாளுந் துன்பமில்லை,' எனக்கூறிப் பயமற்று நிற்கக்கூடிய பரமாநந்தக்கடலி லாழவல்லீராஞல், உலகத்தில்—இலௌகிக விஷயங்களில்—காரியசித்தி உங்களுக்குக் கிடைக்காமற் போகுமோ? ஆகையால், உண்மையை யறிந்து பயத்தை விடுங்கள்; பயன் பெறுவீர்கள்.

---

## அ. முச்சங்கம்

---

பூவுலகம் இன்று நமக்கு எங்ஙனங் காணப்படுகின்றதோ அங்ஙனமே பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு காணப்படாது. இன்று நிலமா யிருப்பது அன்று கடலாகவும் இன்று கடலா யிருப்பது அன்று நிலமாகவும் மாறி யிருக்கும். இங்ஙனமே பல்லாயிர வாண்டுகட்கு முன்பு இன்று நிலமாகக் காணப்படுவது அன்று கடலாகவும், இன்று கடலாகக் காணப்படுவது அன்று நிலமாகவு மிருந்தன. இந்தியா நாடு இன்று காணப்படுவது போல முன் னிருந்ததில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கே யிருக்கும் இந்துமகா சமுத்திரம் அன்று ஒரு பெரிய நாடா யிருந்தது. இப்பெரிய நிலப்பரப்புக்குக் குமரி கண்டம் என்று பெயரிட்டனர் பிற்காலத்தோர். இக் குமரி கண்டம் நான்கு பக்கத்திலும் நீராற் சூழப்பட்டிருந்தது. இது வடக்கே விந்தியமலை வரையிலும், கிழக்கே சாவகத் தீவு (Java) வரையிலும், தெற்கே தென் கடல் வரையிலும், மேற்கே மடகாஸ்கர் தீவு வரையிலும் விசாலித்திருந்தது. இக்கண்டத்தில் தான் முதன் முதல் மக்கள் தோன்றினர்க ளென்றும், பின்னர்ப் பல நாடுகளுக்கும் அவர்கள் குடியேறினர்க ளென்றும் ஜர்மன் தேசத்துப் பிரபல பிராண தத்துவ

சாஸ்திரியாகிய எர்னஸ்ட் ஹெக்கல் என்பவர் 'பிரபஞ்சோற்பத்தி' 'மனிதன் வரலாறு' என்னும் நூற்களில் கூறுகின்றார். குமரி கண்டத்தில் வசித்தவர்கள் செம்மை நிற முடையவர்களாயிருந்தார்க ளென்பர் 'மறைந்த குமரி கண்டம்' என்னும் நூலுடையார். அவர்கள் பேசிய பாஷை ஓரசைச் சொற்களால் ஆக்கப்பட்டிருந்த தென்ப. அப்பாஷையின் சிதைவே தற்காலத்துச் சீனர்களின் பாஷை யென்ப. இக்கண்டத்திலிருந்த சில எரி மலைகள் பொங்கவே பூமி பிளவுபட்டுக் கடலி லமிழ்ந்து விட்டது. குமரி கண்டம் ஒரு காலத்திலிருந்து அழிந்ததென்று பௌதிக சாஸ்திரிகள் பலருங் கூறுகின்றனர். எர்னஸ்ட் ஹெக்கல், வாலேஸ், ஹக்ஸ்லி, பார்கர், ஹாஸ்வெல், பிளான்ட் போர்ட், ஸ்காட் எலியட், சின்னட் முதலிய பிரபல பண்டிதர்கள் அஃதிருந்த தென்பதைப் பல தக்க காரணங்களால் நிலை நாட்டுகின்றனர். அக் குமரி கண்டம் அழிந்தது பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே யாகும்.

குமரி கண்டம் அழிவடைந்த பின்பு எஞ்சி நின்ற நிலப் பாகம் மூன்றில் குமரி நாடு தென்னிந்தியாவின் தொடர்ச்சியா யிருந்தது. இக் குமரி நாட்டுக்கு வடக்கே குமரி யாறும், தெற்கே பஃறுளி யாறும் ஓடிக்கொண்டிருந்தன. இக் குமரி நாடு நாற்பத்தொன்பது சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்த தென்ப. இங்கு வாழ்ந்து வந்தவர்களே தமிழராவர். அவர்கள் கல்வியில் தலை சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய அரசர்களுக்குப் பாண்டியர் என்று பெயர். அவர்களுக்குத் தலைப் பட்டணமாயிருந்தது தென்மதுரை. அவ்வரசர்கள் புலவர்களை யாதரித்து வந்தனர். அப்புலவர் பல நூல்களை இயற்றினர். அவை எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முது குருகும், களரியாவிரையும் இன்னும்

பலவு மென்ப. இப்புலவர் கூட்டத்தையே பிற்காலத்தோர் **தலைச் சங்கம்** என்றனர்.

இக்குமரி நாட்டுக்குக் கிழக்கே சுமார் கி. மு. 2387-ம் ஆண்டில் ஒரு குழப்ப முண்டாகிக் கடல் பொங்கி அந்நாட்டின் கீழ்ப் பகுதியை யழித்து விட்டது. தமிழகம் சிதையவே தமிழரில் ஒரு சிலர் கடல் கோளுக்கு அஞ்சி, வெவ்வேறு நாட்டிற்குக் குடி யேறினர். மற்றையோர் குமரி யாற்றுக்கு வடக்கே சென்று தென்னிந்தியாவில் தங்கினர். அக்காலத்து நேர்ந்த கடல் கோளினால் அப்போது வழங்கி வந்த நூல்கள் முதலிய யாவும் இறந்தனவாதலின், குமரி நாட்டை யாண்ட பாண்டியர்களின் எண்ணுவது பெயராவது, அவர்க ளாண்ட கால அளவாவது இன்று நமக்குத் தெரியவில்லை. குமரி யாற்றிற்கும் தாம்பிர பரணிக்கும் இடையில் தங்கிய தமிழர்களுக்குத் தலைப் பட்டணமா யிருந்தது கபாட புரம். அரசர்கள் முன் போலவே புலவர்களை யாதரித்து வந்தார்கள். இப்புலவர் கூட்டமே **இடைச் சங்கம்** எனப்பட்டது. இக்காலத்தில் இந்தியாவின் வடநாட்டு ஆரியர்களுக்கும், தென்னாட்டுத் தமிழர்களுக்கும் தொடர் புண்டாயிற்று; அகத்தியர் தென்னாடு புகுந்து தமிழை வளம் படுத்தினர்; அகத்தியம் என்னும் இலக்கண நூலை அவர் இயற்றி யருளினர். மற்றைய புலவர்களால் இயற்றப்பட்டவை கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலை அகவலும், மா புராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும் என்பன. ஆசிரியர் தொல்காப்பியனர் இவ்விடைச் சங்கத் திறுதியிற் றோன்றித் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றினர். அக்காலத்தே ஒரு கடல் கோள் உண்டாகிக் குமரி நாட்டை யழித்து விட்டது. அஃதாவது, தொல்காப்பியர் கால மாகிய கி. மு. 13-ம் நூற்றாண்டில் அரசு புரிந்திருந்த முடத்திருமாறன் காலத்தே அது நிகழ்ந்தது.

அக் கடல் கோளினுல் தமிழ் நூல்கள் பல இறந்தன. தொல்காப்பியம் தவிர மற்றவை இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அவ்விடைச் சங்கக் காலத்தே விளங்கிய புலவர் எத்துணைய ரென்பதும், அரசர் எத்துணைய ரென்பதும் இப்போது தெரியவில்லை. புலவர் ஒரு சிலர் பெயரும் அரசர் சிற்சிலர் பெயருமே இன்று நமக்குப் புலப்படுகின்றன.

அக்கடல் கோளுக்குத் தப்பி உய்ந்த முடத்திருமாறனும், தொல்காப்பியர் பனம்பாரனுர் முதலிய புலவர்களும், மற்றவர்களும் சிறிது வடக்கே போய்த் தங்கினுர்கள். அக்காலத்தில் பாண்டியர்களுக்குத் தலைப் பட்டணமாயிருந்தது மணலூர். அக்காலத்தேதான், அஃதாவது சுமார் கி. மு. 12-ம் நூற்றுண்டில் பாரதப் போர் நடைபெற்றது. தமிழ் மன்னர் ஆரிய மக்களுக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். அதனுல், தமிழர்க்கும் ஆரியர்க்கும் பெரிதும் நட்பு உண்டாயிற்று. பாண்டிய அரசர் கொஞ்சக் காலம் மணலூரில் தங்கி யிருந்து பின்னர்க் கூடலில் போய்த் தங்கினர். இவ்வட மதுரையில்தான் புலவர்கள் ஒருங்கு கூடித் தமிழை வளம்படுத்தி வந்தனர். அப் புலவர் கூட்டமே பிற்காலத்தில் **கடைச் சங்கம்** எனப் பட்டது. அக்காலத்து விளங்கிய புலவர்களிற் சிறந்தோர் இறையனுர், திருவள்ளுவர், நக்கீரர் ஆவர். இறையனுர் அகப் பொருளையும், திருவள்ளுவர் திருக்குறளையும், நக்கீரர் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை முதலிய பாட்டுக்களையும் இயற்றி யருளினர். இவர்களே யன்றிக் கபிலர், பரணர், ஆசிரியர் நல்லந்துவனுர், சீத்தலைச் சாத்தனுர், மாமூலனுர் முதலிய புலவர்களும் விளங்கி இருந்தார்கள். அவர்களால் பாடப்பட்டன அக நானூறும், புறநானூறும், குறுந்தொகையும், நற்றிணையும், ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், கலித் தொகையும், பரிபாட

லும், பத்துப் பாட்டும், பதினெண் கீழ்க் கணக்கும், கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையு மென்று இத் தொடக்கத்தன. இச்சங்கம் முடத்திரு மாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீருக நாற்பத்தொன்பது தலை முறை நடை பெற்று வந்தது.

இச்சங்க காலத்து இடையிலே வேள் புலம் (Bhilmal) என்னும் வட நாட்டிலிருந்து வேளிரும், புரோசு (Broach) என்னும் நாட்டிலிருந்து புரோசரும், அருவளி மலை நாட்டிலிருந்து அருவாளரும் தமிழகத்தே குடி புகுந்தனர். வேளாண் மாந்தர் அவ்வாரிய மக்களை அன்புடன் வரவேற்று அவர்கள் தங்கி யிருக்க நாடுகளை யும், கோட்டங்களையும் கொடுத்தனர். மேனாட்டிலிருந்து யவனர், உரோமர் முதலியோரும், கீழ் நாட்டிலிருந்து சீனர், சாவகர் முதலியோரும் அக்காலத்தே தமிழகத் திற்கு வந்து தங்கி வியாபாரஞ் செய்து வந்தார்கள். தமிழர்களும் கப்பல் யாத்திரை செய்து அயல் நாடுக ளுடன் வர்த்தகஞ் செய்து வந்தார்கள். தமிழர் கைத் தொழிலிலும், கல்வியிலும், நாகரிகத்திலும் தலை சிறந்து விளங்கினர். இச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண் டின் இடைப் பகுதியில் உக்கிரப் பெருவழுதி அரசன் காலத்தில் பஞ்சத்தால் அழிந்தது.

# ௯. நன்றி மறவாமை

(சுருக்கம்)

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.'

என்னும் திருக்குறளில், தனக்கு ஒருவன் முன் செய்த நன்மையை மறந்து விடுவது அறமன்று; அவன் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது அறமாமென்று திருவள்ளுவ நாயனாராற் சொல்லப்பட்டமையால், தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலானவர்கள் செய்த நன்றியை எந்நாளும் மறவாமற் சிந்தித்து ஒழுகல் வேண்டும்.

## (1) தாய் செய்நன்றி

தாயானவள் பத்து மாதம் கர்ப்பத்திற் சுமந்து வருந்திப் பெற்று, கண் திறவாமல் இறகு முளையாமல் இருக்கிற சிறு குஞ்சுகளைப் பறவைகள் தமது சிறகின்கீழ்ச் சேர்த்து அணைப்பதுபோல, ஈ மொய்க்காமலும், எறும்பு கடியாமலும், குருகு பறவாமலும், வெயில் படாமலும், காற்று வீசாமலும், பனி பெய்யாமலும், மார்பிலும் தோளிலும் வயிற்றிலும் அணைத்து,

"முன்னநின் அன்னை யமுதூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாளல்ல காண் ; என்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளை நீ
இன்னமுஞ் சின்னவனே தீரனே செந் தூரி லிருப்பவனே.'

என்ற பாட்டிற் சொன்னபடி, பாலூட்டி, மூக்குச் சிந்தி, நாசியூதி, செவியுருவி, நீராட்டி, நெற்றிக்கு நிலக்காப்பிட்டு, விழிக்கு அஞ்சனந் தீட்டி, பல பணிகளும் பூட்டி, கன்னங்

7B
031(9)
N27



கிள்ளி, உச்சி மோந்து, கண்ணோடு கண் வாயோடு வாய் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி முத்தாடி, அருந் தனம் போலப் பாவித்துப் பொற்றொட்டி விட்டு,

'ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
சீரார்ப சுங்கிளியே! தெவிட்டாத செந்தேனே!
பேரார்கு லக்கொழுந்தே! பெருமானே! கண்வளராய்.
இருகண்ம ணியேஇ லஞ்சியமே! என்னுயிரே!
ஒருகுடைக்கீழ் நீயிவ்வு லகாள வந்தவனோ?
தெள்ளமுதக் கும்பமே! தித்திக்குஞ் செங்கரும்பே!
பிள்ளைக விதீர்த்த பெரியமதக் குஞ்சரமே!
மாணிக்கக் கால்நாட்டி, வஜ்ரவ டம்பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிட்டேன் அருமருந்தே! கண்வளராய்.
அத்தைம டிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்துமுத் தாடும்ம ரகதமே! கண்வளராய்.'

என்று தாலாட்டிச் சீராட்டி, நாடோறும் வாயது கையது கொடுத்துப் போஷித்து, தன் கன்றுக் கிரங்குங் கறவை போல் நெஞ்சிரங்கி, நோயணுகாது மருந்தளித்துப் பத்திய மிருந்து, கண்ணை இமை காப்பதுபோல் அபாயம் வராமற் காத்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துப் பெற்ற தாயென்று குறியாமல், தன்னை எவ்வளவு பழித்தாலும் செய்தற்கரிய குற்றத்தைச் செய் தாலும் அவற்றை அப்படி நினையாமல், பிறருடனுஞ் சொல்லாமல், தன் புருஷனுக்கும் தெரிய வொட்டாமல், தானுந் தண்டியாமல், 'ஐயோ! மகனுக்குப் பித்தம் தலை மண்டை கொண்டு விட்டதே!' என்று துக்கப்பட்டு, பித்த சாந்திக்கேற்ற சாதனங்களை அடுத்துச் செய்து, பின்பு அப்படிச் செய்தானே என்பதையும் கடுகளவாவது நினையாமல் அன்பாய்ப் பாலிப்பதையும்,

84979

## (2) தந்தை செய்ந்நன்றி

தந்தையானவன் பசியாமல் ஊணும் உடையுந் தந்து, துஷ்ட சகவாசஞ் செய்யவாவது, ஓடியொளித்துத் தூர்த்தனாய்த் திரியவாவது, சூதாடிப் பொய் பேசிப் புறங் கூறவாவது, துர்வியாச்சியந் தொடுக்கவாவது தன்னிச்சையாய் விடாமல் அடக்கி,

'அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே!'

என்று நினைத்து, பின்பு தான் வியசனப்படுதற்கு ஏதுவாகத் தன்னை மூடனாய்ப் போகவொட்டாமல், இதந்தெரிந்து ஐந்து வயதிலே கல்விக் கழகத்தில் விடுத்துப் பூரண பண்டிதனாகக் கல்வி பயிற்றுவித்து, சபையாரெல்லாம் பூஜயதை பண்ணத் தக்க யோக்கியனாம்படி செய்வதையும் மறவாமல், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதனாலும், 'தந்தை தாய்ப்பேண்' என்பதனாலும், அவர்களை இகழாமல் தெய்வமாக எண்ணி வணங்கி, அவர்களுக்குக் கீழமைந்து, அவர்கள் குற்றங்களைப் பிறரறியாது மறைத்து, 'தாய்சொலிற் சிறந்த வாசகமில்லை' என்றும், 'தந்தைசொன் மிக்க மந்திர மில்லை' என்றுஞ் சொல்வதனால், அவர்கள் சொல்லைக் கடவாமற் சிரசா வகித்து, மாதுரு பிதுரு வாக்கிய பரிபாலகனாய், தாய் தந்தையர் தன்னை அன்ன வஸ்திராதிகளில் குறைவில்லாமல் போஷித்ததுபோல, ஒரு விதத்திலும் குறைவில்லாமல் அன்புடனே தானும் அவர்களைப் போஷிக்கவேண்டும். பெற்றவர்களுக்குப் புத்திரனன்றிப் போஷகன் வேறே யார்?

குழந்தைப் பருவத்தில் தானிச்சைப்பட்டுக் கேட்ட பதார்த்தங்களை யெல்லாம் தனக்கு அவர்கள் பிரியத்

துடன் வழங்கியதுபோல, வார்த்திகத்தில் அவர்கள் ஆசைப்பட்ட பண்டங்களை யெல்லாம் தன்னைக் கேளாத தற்கு முன்னமே குறிப்பறிந்து தான் அவர்களுக்கு வழங்கவேண்டும். அன்றியும், தன்மேல் ஈப்பறவாமல் அவர்கள் தன்னைக் காத்ததுபோல, அவர்கள்மேல் தூசு பறவாமல் தானும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

மாதுரு பிதுரு கைங்கரியம் தனக்கு லபிக்கவேண்டு மென்று தான் கடவுளைப் பிரார்த்தித்து எதிர்பார்த் திருந்து, அவர்கள் தேகவியோக மானவுடனே அவர்களுக் குப் பிரேத சமுஸ்கார முதலாகிய கடன்க ளெல்லாம் லோப மில்லாமற் சிரத்தையுடனே நடத்தவேண்டும். தாய் கடன் கழிப்பதற்குச் சர்வ சங்க பரித்தியாகஞ் செய்த சந்நியாசிகளும் காத்திருக்கின்றார்களே! இதற் குத் திருஷ்டாந்தம், முற்றத் துறந்த பட்டினத்தார், தாய் இறக்குமளவும் காத்திருந்து அவள் மரித்த பின்பு, வாழை மரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதன்மேல் அவளைக் கிடத்தி வாய்க்கரிசி யிட்டு,

'முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே;
பின்னை யிட்டதீ தெனிலங் கையிலே;
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே;
யானு மிட்டதீ மூள்க மூள்கவே!'

என்று சொல்லிக் கொள்ளிவைத்துக் குடமுடைத்துப் பால் தெளித்து உத்தர கிரியைகளும் செய்து முடித்துச் சென்றார் என்பதே.

தனது கல்வி, அறிவு, ஆண்மை, பொறுமை, உண்மை, ஒழுக்க முதலியவைகளைப் பார்த்து, 'இந்த மகானுபாவன் வித்தையில் அகத்தியனோ! அறிவில் ஆதிசேஷனோ! ஆண்மையில் விக்கிரமாதித்தனோ! சாந்தத்தில் தரும ராஜனோ! வாய்மையில் அரிச்சந்திரனோ! நீதியில் மனுச் சக்கிரவர்த்தியோ!' என்று அதிசயித்து, 'அம்மம்ம!

இவனைப் பெறுவதற்கு இவன் பிதா என்ன தவத்தைச் செய்தானோ!' என்று சகலமானவர்களும் சொல்லும்படி, நல்ல கீர்த்தியைப் பிதாவுக்குச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் தாய் தந்தையர் பெயரை விளக்குகிறதற்குத்தானே பிள்ளை பிறக்கிறது?

மேலும் தன்னைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியிலும் அதிக மகிழ்ச்சியைப் பெற்ற தாய் அடைய, 'உன் மகன் சகல கலை வல்லவன்; சாதுரிய குண சம்பன்னன்,' என்று அறிவுடையோர் சொல்லும்படி அவள் செவியிற் கேள்விப்படச் செய்யவும் வேண்டும்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.'

இவ்வாறன்றித் தாய் தந்தையர் தன்னைப் பெற்று வளர்த்த அருமை பெருமைகளை எவ்வளவும் நினையாமல், 'அவர்க ளென்னைப் பெறுகிறதற்கு இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி உபவாசித்து, உடம்பை யொறுத்து, ஊசி முனையில் நின்று அருமையாகத் தவம் செய்தார்களோ?' என்று வாய் கூசாமற் பிதற்றுகின்ற வம்பன் இவனென்றும், தன் குற்றத்தைக் கண்ட பிற னொருவன் வெட்கப்பட்டு, 'நீ இப்படி அக்கிரமமாய் நடக்கலாமோ?' என்று தன்னைக் கேட்க, தான் நாணமல், 'அட போ! நீ என்ன கண்டாய்? இஃது அவசியம் பிதுராசாரம்,' என்று சொல்லி, தன் பிதா முதலானவர்கள் செய்த குற்றத்தையும் வெளிப்படுத்திய பேதை இவனென்றும், உட்சுவரிருக்கப் புறச் சுவர் பூசுவார்போலத் தன்னைப் பெற்ற மாதா பிதா முதலானவர்கள் தங்கள் உதர போஷணைக்கு ஓர் ஏதுவு மில்லாமல், கொழுகொம்பில்லாத கொடிபோல் அலைந்துகொண் டிருக்கையில், அவர்களை ஆதரியாமல், தனக்கு யாதொரு சம்பந்தமு மில்லாத அந்நியர்மேல் இரக்கங் கூர்ந்து, அவர்களைச் சம்ரட்சணை செய்கின்ற

டம்பன் இவனென்றும், பிதா புத்திரனைக் குறித்து, 'சிரஞ்சீவி தம்பி இன்ன முதலியாருக்குச் சுவாமி கிருபையால் சகல போக பாக்கியமும், சந்தான சமர்த்தியும், வாகன பிரதிஷ்டையும், அகண்ட சாம்பிராச்சியமும், லட்சுமி விலாசமும், ராஜ வசிகரமும், தீர்க்காயுளும், சதாகாலமும் வற்றாத சமுத்திரம்போலக் குறைவின்றி மேன்மேலும் பெருக வுண்டாகுக,' என்று, உபசாரமாகவும், பட்சமாகவும் எழுதி யனுப்பிய கடிதத்தை வாசித்துப் பார்த்து, 'ஓ! ஓ! இவ னென்ன சர்வ முட்டாளா யிருக்கிறான்! "ராஜ மாநிய ராஜ பூஜித மகா ராஜ ராஜ ஸ்ரீ முதலியா ரவர்கள் வடிவில் மன்மதனும் நாணத்தக்கவராய், கல்வியிற் சரசுவதிக்குக் குருபீடமாய், புஜ பலத்தில் வாயு குமாரனை ஜயிப்பவராய், தர்மத்தில் தரும புத்திரன் தலையை மிதிப்பவராய், ஒழுக்கத்தில் அணுவளவும் பிசகாதவராய், சத்துருக்கள் நடுங்குஞ் சங்கிராம சிங்கமாய், சற்சனர் மெய்ச்சும் சபா பூஷணமாய், ஒப்புயர்வில்லாத உத்தம சற்பாத்திரமாய் விளங்கா நின்ற மிட்டாதார ராகிய இன்ன முதலியாரவர்கள் திவ்ய சமுகத்திற்கு, அடியேன் தங்கள் ஊழியனாகிய இன்னான் சத்விநய பய பக்தியுடனே, தாங்க ளிருக்குந் திக்கு நோக்கிச் சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொண்ட விண்ணப்பம்,' என்று நமது உத்தியோக ஸ்திதிக்குத் தக்க மரியாதையா யெழுதாமல், நாட்டுப் புறத்தானுக்கு எழுதுவது போல இப்படி யெழுதினான்; பார்த்தாயா!' என்று தானும் கெட்ட பெயர் எடுக்கலாகாது; தாய் தகப்பன் பெயரையுங் கெடுக்க லாகாது.

## (3) குரு செய்ந்நன்றி

குருவானவர், ஆமை தானிட்ட முட்டைகளை இடைவிடாது நினைப்பதுபோல, சீஷனுக்குப் பரிபாக முண்டாக வேண்டுமென்று தமது திருவுளத்தில் நினைத்தும், மீன் தன் சினையை நோக்குவது போலச் சீஷனது அஞ்ஞானம் நீங்க அவனிடத்திற் கிருபா நோக்கம் வைத்தும், பறவை தானீன்ற அண்டத்தைச் சிறகினு லணைப்பது போலத் தேக பந்த மொழியக் கரத்தினுல் அவனைப் பரிசித்தும், தமது சந்நிதானத்தில் இருக்கச் செய்து, அவன் முகத்தை நோக்கி, 'பொறிகளாகிய மத யானைகளைப் புலன்களின் மேற் செல்லவொட்டாமல் அறிவென்னும் அங்குசத்தால் அடக்கி, நெஞ்சமாகிய குதிரையைப் பகிர்முகமாகிய செண்டு வெளியில் ஓட விடாது, பக்தியாகிய கடிவாளத்தை யிறுக்கி, வைராக்கிய மென்ற தளையைப் பூட்டி, அந்தர்முகத்தில் நிறுத்தி, பரமகாருணியராகிய கடவுளைத் தியானித்து, அவருக்கடிமை பூண்டு, 'அற்றது பற்றெனி னுற்றது வீடு,' என்றவண்ணம், அகங்கார மமகாரமாகிய பற்றுக்களைக் கை விட்டு, இனித் துஷ்கிர்த்தியங்களைச் செய்யாது, கடவுள் ஆணைக்கமைந்து, அவருடைய திருவடித் தொண்டு செய்து, உனக்கொன்று மில்லையென்னும் உபாய பரதந்திரனு யொழுகினுல், பந்தங் கெட்டு மோட்சங் காணி யாட்சி யாகும்,' என்று அநுக்கிரகிப்பர். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் காணப்படாத கடவுளைக் காட்டிக் கொடுத்த அவரது உபதேசத்தை மறவாது சிந்தித்து, சதாகாலமும் அவர் கிருபைக்குப் பாத்திரமா யிருக்கவேண்டும்.

## (4) கடவுள் செய்ந்நன்றி

கடவுளானவர் தமது நிர்ஹேதுகக் கிருபையினாலேயே, மூலப் பிரகிருதியில் அழுந்திக் கட்டுப்பட்ட ஆத்மாவுக்கு, கரசரணாதி அவயவங்களைக் கொடுத்துப் பூமியில் ஜெனிப்பித்துப் போஷித்துப் பரிபாலித்தும், பரமாத்மாவாகிய தமக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தாரதம்மியம் இவ்வகைப்பட்டன வென்று வேதாகமங்களின் மூலமாக விளக்கியும், பூனையானது தன்னைத் தழுவத் தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன் வாயினாற் கவ்விச் செல்வது போல தம்மை ஆஸ்ரயித்து வழிபாடு செய்ய அறியாத சக்தியற்ற ஆத்துமாவானது அறிந்து வழிபடச் செய்தும், குளவியானது அற்ப ஜெந்துவாகிய புழுவினைத் தன்னுரு வாக்குவதுபோலத் தமது திவ்விய சொரூபத்தை அவர் மருவப் பண்ணியும், உலகத்தார் மேகத்திற்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தும், அம்மேகம் அவர்களுக்கு க்ஷேமமுண்டாக மழையைச் சொரிவதுபோல ஆத்துமாவினிடத்திற் கைம்மாறு வேண்டாது, அடைதற்கரிய ஒப்பற்ற பெரிய வீட்டின்பத்தை அடையும் படியாகவும் செய்யும் மகோபகாரத்தை, 'வான்செய்த நன்றிக்கு வையகமென் செய்யுமதை மறந்திடாதே' என்றபடி எப்பொழுதும் மறவாது தியானிக்கவேண்டும்.

தெய்வ பக்தியே தீவினையாகிய உளையைக் கடந்து செல்லும் ஊன்று கோல்; தெய்வ தரிசனமே பிறவிக் கடலைக் கரை காணும் நாவாய்; தெய்வத் தியானமே முத்தியாகிய மேல் வீட்டி லேற்றும் நூலேணி; தெய்வத்தின் அருளுதயமே அஞ்ஞான இருளை யொழிக்கும் ஆதித்தியோதயம்; தெய்வ வணக்கமே நரக வாசலை அடைக்கும் தாழ்; தெய்வத்தை வாழ்த்தும் வாழ்த்தே பாச விலங்கைத் தறிக்கும் வெட்டிரும்பு. தெய்வ பக்தி உதிக்காமல்

உலக பாசம் ஒழியென்றாலும் ஒழியாது. தெய்வத்தைத் தொழாமற் பாவ நிவாரண மாகிறது பிரயாசம். தெய்வத்தை ஆராதிப்ப தல்லவோ தவஞ் செய்கை? அதற்கு அந்நியமாகச் செய்வனவெல்லாம் அவஞ் செய்கையே. ஒரு நொடிப் பொழுதாவாது தெய்வத்தைத் துதியாத நாவுக்குப் பரிசுத்த மேது? தெய்வ சிந்தனையின லன்றிச் சித்த சுத்தி சொப்பனத்திலும் வருமா?

சூரிய கிரணம் பாயாததும், காற்று வீசாததுமாகிய இடமு மிருக்கலாம். கடவுளின் வியாபகத்திற்கு அந்நியமோ, ஒன்று மில்லை. ஆதலால், அவருக்கு அகம் புறம் எங்கும் முகமாம்; சகலாண்ட சராசரமும் அவருடைய திருவுருவமாம். அதனல், அவர் காணாத காட்சியும் அவர் கேளாத கேள்வியும், அவர் பேசாத பேச்சும், அவர் அறியாத விஷயமு மில்லை. அது பற்றி எவர்களும் அவராணையை மீறிக் குற்றஞ் செய்யவும், செய்த குற்றத்தை மறைக்கவும், ஒரு விதத்திலாவது அவரை வஞ்சிக்கவுங் கூடாது.

சிலர் தங்களுக்கு வருத்தம் சம்பவித்த காலத்தில், தாம் செய்தவெல்லாம் குறையா யிருக்க, 'நானென்ன குறை செய்தேன்?' என்றும், தாம் செய்த சதியை நினையாமல், 'என்னளவில் தெய்வம் சதி செய்ததே!' என்றும், 'அதை வணங்குகிறதுதா னேதுக்கு? அதற்கென்ன கண்ணில்லையா?' என்றும், தெய்வத்தை நிந்திப்பார்கள்; அது நன்மையே யன்று.

'குருட்டுக் கண் தூங்கி யென்ன, விழித்தென்ன?' தெய்வ பக்தி யில்லாதவர்கள் கங்காஸ்நானஞ் செய்தாலும், வனவாசம் பண்ணினலும், மலைக்குகைக்குள்ளே கண்ணைத் திறவாமல் யோகத்தி லிருந்தாலும் முத்தி யடையமாட்டார்கள். ஆமை, மீன், தவளை முதலானவைகள் கங்கா நதியில் உற்பவித்து, அக்கங்கைக்குள்ளேதானே மூழ்கி

யிருந்தும், யானை, புலி, கரடி முதலியவைகள் காட்டில் உற்பத்தியாகி, அக்காட்டினிடத்திலேயே வாசஞ் செய்தும், பகற்குருடாகிய கோட்டான் மரப்பொந்துக்குள்ளே தானே கண்ணை மூடிக்கொண் டிருந்தும் என்ன பிரயோசனம்?

தத்துவ விசாரணை செய்து, தாடி சடை வளர்த்து, தலையை முண்டித்து, தண்ட கமண்டல மேந்தி, தவவேடம் பூண்டிருந்தும், தெய்வத்தியான மில்லாதவர்க்கு என்ன பயனுண்டு? அவர் கொண்ட கோலம் அலங்கோலமான பேய்க் கோலம், அல்லது பிணக் கோலமே!

தெய்வத்தை அஞ்சலியாத கை நெற்குற்றும் உலக்கை அல்லது வீட்டு உத்திரக் கை; தெய்வத்தைப் பணியாத முடி கழனியில் நடும் நாற்றுமுடி, அல்லது கம்பளநார்முடி; தெய்வத்தைத் தரிசியாத கண் நுங்குக் கண், அல்லது பாம்புப் புற்றுக் கண்; தெய்வத்தை வாழ்த்தாத வாய் மல ஜலமோடுங் கால்வாய், அல்லது சுண்ணும்புக் கால்வாய்; தெய்வ ஸ்தலத்தைத் தேடிச் செல்லாத கால் கொல்லைப் பரண் கால், அல்லது பந்தலுக்கு நாட்டுங் கால்; தெய்வ ஸ்துதியைக் கேளாத செவித் தொளை பருத்த நுகத் தொளை, அல்லது பாழான சாரத் தொளையாம்.

---

## (5) அரசன் செய்ந்நன்றி

அரசனானவன் உலகத்திற்கு அன்பிற் சிறந்த தாய் போலத் தோன்றி மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போலக் கருதி,

‘மாநிலங்கா வலனென்பான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ.’

என்ற வண்ணம், தன்னாலாவது, தன் பரிசனத்தாலாவது,

பகைவர்களாலாவது, திருடர்களாலாவது, மற்ற உயிர்களாலாவது, சிறிதுங் கொலை களவு முதலாகிய உபத்திரவம் அணுகாமல், குடிகளுக்கு க்ஷேம முண்டாகும்படி முறை தவறாது செங்கோல் செலுத்தி, பிரஜைகளிடத்திற் கடுஞ் சொற் சொல்லாமலும், கடுந்தண்டம் விதியாமலும், அவரவர் தாரதம்மிய மறிந்து பட்சபாத மில்லாமல், தயையாய்ப் பரிபாலனஞ் செய்கின்றதை மறக்க லாகாது.

யாரைப் பகைத்தாலும் அரசனை மாத்திரம் பகைக்கலாகாது; அரசவையிலிருந்து வறிதே அடிக்கடி நகைப்பதும், பரிகாசஞ் செய்வதும், ஒருவர் செவியி லொருவர் இரகசிய சமாசாரஞ் சொல்வதும், அரசனுக் கெதிரே அடக்க மில்லா திருப்பதும், அரசனோ டெதிர்த்து அவனை அலட்சியமாகப் பேசுவதும், வீண்போகாமல் திரவிய நஷ்டத்தையும், மான பங்கத்தையும், பிராண சேதத்தையும் வருவிக்கும். செங்கோலுக்கு முன்னே சங்கீதமா?

> ‘ செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகல்
> ஆன்ற பெரியா ரகத்து.’

என்று பெரியோர் சொல்லுகின்றனர்.

அரசனது தயையைப் பெற்று, அவனை அந்நியோந்நியமாகச் சிநேகித்து, அவனுக்கு அநுகூலப்படாத விரோதிகளை யெல்லாம் ஜெயித்து, அவன் மனமகிழும்படி அநேக திரவியங்களைச் சம்பாதித்துக் கொடுத்து, அவனால் நன்கு மதிக்கப்பட்டவர்க ளானாலும், அவன் விஷயத்தில் நெறி தவறி, இலேசமாத்திரம் பிழை செய்தாலும் குடி முழுகிப் போம். வேங்கைப் புலியும் ராஜாவும் சரி யென்கிறார்களே! ஆதலால், அவனை விஷசர்ப்பம் போலவும், கடு நெருப்புப் போலவும் நினைத்து அவனுக்குப் பயந்து நடக்கவேண்டும்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கிற அரசனில்லாத நாடு, தன்னரசு நாடாய் உபத்திரவத்திற்கே உறைவிட மாகும்.

'அரச னுடைமைக்கு ஆகாச வாணி சாட்சி' என்பதனால், அவனை வஞ்சித்து அவனுக்குச் செலுத்தத் தகும் இறைப்பொருளை அபகரிக்கலாகாது; மாதுரு துரோகம், பிதுரு துரோகம், குரு துரோகம், சுவாமி துரோகம், சிநேக துரோகங்கள் மறுமையில் துன்பத்தை விளைக்கும்; இஃது இம்மையிற்றானே துன்பத்தைச் செய்யு மாதலால், அவைகளிலும் இது மிகக் கொடியதாம்; ராஜ தரிசனமும் ராஜ தயையும் ராஜாபிமானமும் ஒருவர்க்கு எளியவல்ல.

---

## (6) பெரியோர் செய்ந்நன்றி

பெரியோர்கள் ஜீவகாருணியத்தால் "யாம் பெற்ற பேறு வையகம் பெறுக,' என்று எண்ணி, சகலரும் விதி விலக்குகளை அறிந்து நெறிவழா தொழுகி, இம்மை யின்பத்தையும் மறுமை யின்பத்தையும் அடையும்பொருட்டு லோகோபகாரமாகச் சகல தர்மங்களையும் ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என மூன்று வகையாகச் சாஸ்திர முகத்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கி அநுக்கிரகித்ததனால், அந்த ஆப்தவசனத்தை மறவாது சிந்திக்க வேண்டும்.

மேற் கூறிய ஆசார தர்மமாவது, யாவரும் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நிலைகளிலே நின்று, அவைகளைக் குறித்துச் சொல்லிய தர்மங்களில் வழுவாது நடத்தல்; விவகார தர்மமாவது, ஒரு பொருளையே ஒருவன் எனதென்றும் மற்றொருவன் தனதென்றும் சுதந்தரித்து அந்தப் பொருளின்மேல் வழக்குத் தொடுத்தல்; பிராயச்சித்த தர்மமாவது, மேற் குறித்துச் சொல்லிய ஆசாரவழியிலும் விவகார வழியிலும் பிசகி நடந்தவர்களை அவ்வழியிலே தவறாது நிலைக்கச் செய்யும்படி பகைவர், சிநேகர்,

அயலார் என்று பட்சபாத மில்லாமல், பொதுப்பட ஆராய்ந்து, அதற்கேற்கத் தண்டித்தலாம்.

'பெரியாரைத் துணைக்கொள்' என்றதனால், என்றும் பெரியோரையே நேசிக்க வேண்டும். அவர்கள் நேசத்தை ஒரு பொழுதுங் கைவிட லாகாது. அநேகரது பகையைத் தேடிக் கொள்வதனால் வருந் தீமையிலும், ஒரு பெரியோரது நேசத்தை இழந்துவிடுவதனால் வருந் தீமை பதின்மடங்கு அதிகமாகும்.

'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.'

என்று சாஸ்திரஞ் சொல்லுகின்றது.

ருத்திராட்சப் பூனை போலவும் கோமுக வியாக்கிரம் போலவும் வேஷதாரிகளாய்ப் பிரபஞ்சத்தாரை மயக்கும்படி நடிப்பவர்களை யன்றி, 'சேரிட மறிந்துசேர்' என்றதற்கு ஏற்கக் களங்க மில்லாத பொன்போலும் உண்மையாகிய பெரியோர்களை அறிந்து அவர்களிடத்திற் சேர்ந்து அவர்கள் சொற்படி நடக்க வல்லவர்களுக்கு, அறம் பொருள் இன்பம் வீடென்பவைகளில், எதுதான் அரிதாகும்? 'கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமுதமுண் ணும்' அல்லவோ?

'முருகுவிரி மலர்க்கொடிகள் மூங்கின்மிசைப் படர்ந்துபோய்
பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமாம்
மரமுழுதும் படர்ந்துலவும்; வளர்மதியின் மேலாய
பெரியவரை யடைந்தொழுகப் பெறில்துறக்கம் புகலரிதோ?'

என்றும் பெரியோர் சொல்லி யிருக்கின்றனர்.

தபோமகிமை, சபாநுக்கிரக சாமார்த்தியம், அஷ்டாங்க யோகம், அஷ்டமாசித்தி முதலாகச் சொல்லி முடியாத தமது வல்லமைகளை யெல்லாம் நீறு பூத்த நெருப்புப் போலவும், கரித் துணியில் முடிந்த மாணிக்கம் போலவும் புறத்தில் தோன்றாமல் அடக்கி, கோபமாகிய நெருப்பை

மூண்டு எழவொட்டாமல், கிருபையாகிய நீரினு லவித்துச் சாந்தத்தையே மேற்கொண்டு பரம சாதுக்களாய் இருப்பதனாலும், 'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே' என்பதனாலும், பெரியோர்களுக்குக் கோபம் வராதென்று எளிதாக நினைத்து, நெருப்பை முன்தானையில் முடிவதுபோலவும், விஷப் பரீட்சை பண்ணுவது போலவும் அவர்கள் விஷயத்தில் அபசாரப்பட்டுக் கோப மூட்ட லாகாது. மௌனம் மலையைச் சாதிக்கு மல்லவோ?

துறவு, மெய்யறிவு, ஆசை யில்லாமை முதலிய நற்குண மென்னும் அசைவற்ற பெரிய மேரு சிகரத்தில் ஏறியிருக்கின்ற சான்றோருடைய கடுங்கோபமாகிய நெடுங் கழியில் இறங்கினவர்கள், துக்கமாகிய முதலைவாயில் அகப்பட்டுக் கரை சேரமாட்டார்கள்.

மற்றச் சுற்றத்தார்கள், சிநேகர், அயலார் முதலானவர்கள் செய்த நன்றியையும், சத்திரம், சாவடி, தோப்பு, துரவு, ஏரி, வாவி, குளம், கோயில், சந்தி, சதுக்க முதலியவைகளை உண்டாக்கினவர்கள் செய்த நன்றியையும் மறக்கலாகாது; மேலும் பொருளினால் வாக்கினால் சரீரத்தினால் எவரெவர் எவ்வளவு சொற்பமான உதவியைச் செய்தாலும், இஃது எம்மாத்திர மென்று அற்பமா யெண்ணாமல், அவ்வுதவி செய்யப்பட்ட காலம் காரணம் முதலியவைகளைப்பற்றி மிகப் பெரிதாகவே கொள்ளவேண்டும்.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.'

என்று பெரியோர் வழங்கினர்.

'ஆண்டியைக் கண்டால் லிங்கன், தாதனைக் கண்டால் ரங்கன்,' என்பவரைப்போல அவரவர்களுக்கு ஏற்றபடி நடித்து, அவர்களால் தமக்கு வேண்டிய வுதவிகளை வேண்டியபடி பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பிரதி யுபகா

ரஞ் செய்யவேண்டு மென்கிற எண்ணம் சிறிது மின்றி, 'அறுந்த விரலுக்குச் சுண்ணும்பிடாமல்' லோப குணத்தையே பெரும்பான்மையாகக் கொண்டு, விசுவாச காதகர்களா யிராமல், யதார்த்தமாக ஒரு நன்றி செய்தார்க்கு ஆபத்து வந்த காலத்தில் பெறுதற்கரிய தமது உயிரையாவது கொடுத்து அக்கடனைக் கழிப்பது மன்றி, அவ்வொரு நன்றியி னிமித்தம் அவர் அநேகம் பிழைகளைச் செய்தாலும், அவைகளை யெல்லாம் பாராட்டாமற் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும்.

'ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே வைத்துப்
பிழை நூறுஞ் சான்ரோர் பொறுப்பர்.'

என்றும் அறிஞர் சொல்லுகின்றனர். அன்றியும்,

'எந்நன்றி கொன்ரூர்க்கு முய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

என்றபடி எந்த நன்றியை மறந்த பாவத்திற்கும் பிராயச்சித்த முண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்த பாவத்திற்கு மாத்திரம் பிராயச்சித்த மில்லை; நரகமே கதி.

'சாரத்தை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்துவிடுவது இயல்புதானே!' என்றெண்ணி, ஒருவர் செய்த நன்றியை மாத்திரம் ஏற்றுக்கொண்டு அந்நன்றி செய்தாரை அவமதிப்பது தர்ம மல்ல; பழத்தைக் குறித்து மரத்தைப் பாலிப்பது போலவும், பாலைக் குறித்துப் பசுவைப் போஷிப்பதுபோலவும், செய்த நன்றியைக் குறித்துச் செய்தாரையும் மறவாமல் நன்கு மதிக்கவேண்டும். 'உப்பிட்டவர்களை உள்ளளவும் நினைக்கவேண்டும்' அல்லவா?

# ய. பஞ்ச தந்திரம்

## க. மித்திர பேதம்

ஒரு தேசத்தில் தேவசன்மா வென்கிற ஒரு சந்நியாசி தான் பிச்சை யெடுத்துச் சம்பாதித்த திரவியத்தைக் கந்தைக்குள் வைத்து யார்க்குந் தெரியாமல் தைத்துப் போர்த்துக்கொண்டு பின்னும் பிச்சை யெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு திரிய, அச்சூதை யறிந்த ஆஷாடபூதி யென்னு மொரு திருட்டுப் பிராமணன், "இந்தக் கந்தையை மாத்திர மெப்படியாயினுந் திருடிக்கொண்டால், நாமெப்போதுந் திருட்டு வேலை செய்ய வேண்டுவதில்லை; நம்முடைய தாசிக்கு வெகு நாளைக்கு நடக்கும்," என்றாலோசித் தொரு பிரமசாரியைப்போல அந்தச் சந்நியாசியினிடத்திற்போய் அவன் காலில் விழுந்து, "அடியேனுக்கு ஞானோபதேசஞ் செய்து இந்த நிசாரமாகிய சமுசார சாகரத்தில் நானின்னும் அலையாமற் சிறிது கடைக்கண்ணாற் பார்த்து என்னைக் கடைத்தேறப் பண்ணும்; ஓ மகானுபாவரே! ஓ பரதுக்கஞ் சகியாத பரம புருஷரே!' என்றிப்படி அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாகக் கலங்கி நிற்க, அதைப் பாசாங்கென் றறியாத அந்தச் சந்நியாசி இவன் தலைமேற் கையை வைத்து, 'பயப்படாதே,' என்றான்.

அது முதலாக ஆஷாடபூதி வெகு பயபக்தியுடனே அவன் காலாலிட்ட வேலையைக் கையாற் செய்துகொண்டு, கந்தைக்குச் சமயம் பார்த்துக்கொண் டிருக்கு நாளில் ஒரு நாள், ஒரு பிராமணன் வீட்டி லிருவரும் விலாப்புறம் வீங்கப் பிட்சை பண்ணிக்கொண்டு வெகு தூரம் வந்த பிறகு ஆஷாடபூதி யொருவரு மறியாமல் ஒரு துரும்பை எடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொண்டு அந்தத் துரும்பைத் தன் குருவுக்கு எடுத்துக் காட்டி, 'ஐயா, நமக்குப்

பிட்சை கொடுத்த பிராமணன் வீட்டுத் துரும்பு என் தலையி லொட்டிக்கொண்டு வந்து விட்டதே! 'அன்ன மிட்ட வீட்டிற் கன்ன மிடலாமா? உப்பிட்டவரை யுள்ள ளவு நினை' என்று பழ மொழியு மிருக்கிறதன்றோ?" என வாய் பதற நடு நடுங்கி, 'இதை யந்த வன்ன தாதா வீட்டிற் போட்டுவிட் டிதோ நொடி யளவில் வருவேன்,' என்று குருக்கள் பார்க்கும்படி பரபரப்பாகச் சிறிது தூரங் காலடி பிட்டத்திற் படும்படி யோடி, ஒரு செடி மறைவி னுட்கார்ந் திருந்துவிட்டுப் பின்பு இரைக்க விரைக்க வோடி வந்து ஆசிரியன் காலில் விழுந்தெழுந்து, 'சுவாமி, உம்முடைய அநுக்கிரகத்தினால் இந்தப் பாவத் திற்குத் தப்பினேன்,' என்றான். இதைப் பார்த்தந்த வேழைச் சந்நியாசி யாச்சரியப்பட்டு, 'இவன் பர சொத் துக் காசைப்படாத பரமாத்துமா,' என்று நம்பித் தன் னுயிர்க்குச் சமானமாக நினைத்திருந்த கந்தையைச் சீஷன் கையிற் கொடுத்து ஒரு குளக் கரையி லிருக்கச் சொல்லித் தான் ஜலபாதைக்குப் போய்க் காலலம்பப் போன விடத் தில் இரண்டாட்டுக்கடாக்கள் ஒன்றோடொன்று முட்டிச் சண்டை செய்ய அவைகளின் மண்டையிலிருந் தொழுகு கிற வுதிரத்தை யுண்ணலாமென்று ஒரு நரி போய் இரண்டுக்கு நடுவி லகப்பட்டிறந்தது. அந்த வனர்த்தத் தைப் பார்த்துக்கொண்டு சந்நியாசி சிறிது நேர மிருந் தான். அப்போதந்தச் சீஷன், 'இதுதான் நல்ல சமயம்; இது விட்டா லினிக் கிட்டுமா? காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்,' என்று நினைத்துக் கந்தை யைச் சுருட்டிக்கொண் டோடிப் போனான். உடனே சந்நியாசி வந்து பார்த்துச் சீஷனைக் காணமல், 'ஓகோ! நம்மை ஆஷாடபூதி எய்த்தானே! நாம் மோசம் போனோமே!' என்று திகிற்பட்டு, உப்புக் கண்டம் பறி கொடுத்த பார்ப்பாத்தியைப்போல், ஒருவருடனுஞ் சொல்லாம லிருந்து விட்டான்.

## உ. சுகிர்ல் லாபம் அல்லது நட்புப் பேறு

கோதாவரி நதிக்கரையில் ஒரு பெரிய வன்னி மரத்தில் இலகு பதனன் என்னுங் காகம் வாசஞ் செய்து கொண்டிருக்கையில் ஒரு நாள் விடியற் காலத்தில் அங்கே யமனைப்போல மிகவும் பயங்கரமான ஒரு வேடன் வந்தான். இலகு பதனன் அவனைப் பார்த்துப் பயப்பட்டு, 'இந்தத் துராத்துமா என்ன பண்ணுவானோ தெரியவில்லை; ஆகையால், இதைச் சோதிக்க வேண்டும்,' என்று இரை தேடுகிற யத்தனத்தை விட்டிருக்க, இதற்குள்ளே அவ் வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியங்களை யும் தெளித்து, அங்கே ஒரு செடி மறைவிற் பதுங்கிக் கொண் டிருந்தான். அதன் பிறகு தன் பரிவாரத்தோடும் அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக் கிரீவன் என்னும் புறுவரசு அங்கே இறைந்திருக்குந் தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புறுக்களுடனே, 'இந்த நிர்மானுஷியமான காட்டில் தானிய மெப்படி வரும்? யாராகிலுங் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும். இது நமக்குத் தெரிந்தா லல்லாமல் இதைப் பக்ஷிக்க லாகாது. ஒரு பிராமணன் பொற் காப்புக்கு ஆசைப் பட்டுப் புலியினால் எப்படி மரண மடைந்தானோ, அப்படி இஃது ஏதோ ஒரு விபரீதமாகத் தோன்றுகின்றது.

* * * ஆகையால், மிகவும் ஆலோசனை பண்ணி யாதொன்று செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது,' என்று அப்படிச் சித்திரக் கிரீவன் சொன்ன வார்த்தையைக் கேட்டு, ஒரு புறு கர்வத்தோடு, 'இப்படி ஆலோசித்தால் ஓரிரையும் நமக் ககப்படாது; மேலும், வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோத முள்ளவன், தீராச் சந்தேக முள்ளவன், பிறர் பொருளால் ஜீவிக்கின்றவன் இந்த

ஆறு பேரும் துக்கத்தையே அநுபவிப்பார்கள்,' என, இதைக் கேட்டுப் புறுக்க ளெல்லாந் தானியத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்தி லிறங்கி வலையி லகப் பட்டன. புறுவரசு அதைப் பார்த்து, 'எல்லாரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள். இப்போது நான் ஒன்றியா யிருந்து பல னில்லை,' என்று சொல்லி, அதுவும் வலையில் வந்தகப்பட்டது.

வேடன் பக்ஷிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப் பார்த்து அதனிடத்திற்கு வரத்தொடங்கினான். அதைப் புறுக்கள் கண்டு, சித்திரக் கிரீவனைப் பார்த்து, 'நாங்கள் நீசன் புத்தியைக் கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம்; அதன் பலன் பிராப்தியாயிற்று,' என, அப்போது சித்திரக் கிரீவன், 'இப்போது இதைச் சொல்லிப் பய னென்னை? இதற்கோ ருபாய மிருக்கின்றது: எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப் பறந்து வேற்றிடத்துக்குப் போகவேண்டும். அப்படிச் செய்தாற் பிராணனைக் காப்பாற்றலாம்,' என, இதைக் கேட்ட வுடனே எல்லாப் பறவைகளும் வலையோடு கூடச் சடுதியிற் பறந்து போயின. அதை வேடன் தூரத்தி லிருந்து கண்டு ஆச்சரியப்பட்டு, 'இவைகள் ஒரே மனமாய் வலையைக் கொண்டு போயின. ஆயினும், இவைகளில் ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும்; அப்போது என் கையில் அகப்படும்,' என நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னே யோடும்போது புறுக்கள் கண்ணுக் கெட்டாமல் மறைந்து போய்விட்டன. பிறகு அவன் வருத்தப் பட்டுத் திரும்பி வந்துவிட்டான்.

இவ் வாச்சரியங்களை எல்லாம் பார்த்திருந்த இலகு பதனன் என்னும் காகம் அந்தப் புறுக்களின் பின்னே போயிற்று. கபோத ராஜன் தன் கூட்டத்தைப் பார்த்து, 'கண்டகி நதி தீரத்தி லிருக்குஞ் சித்திர வனத்தி லென்

சிநேகிதனான இரணியகன் என்னுமோர் எலி அரசனிருக்கின்றான். அவன் பல்லினாலே நம்முடைய வலையை யறுப்பான். அங்கே செல்வீர்கள்,' என, இதைக் கேட்டுப் புறாக்க ளெல்லாம் அப்படியே சென்று, எலியரசன் வளை யண்டை இறங்கின. அப்போது ஏதாவது ஆபத்து நேரிடும் என்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளே யிருந்த எலி யரசன் புறாக்க ளிறங்கின சப்தத்தைக் கேட்டுப் பயந்து அடங்கி இருக்கையிற் சித்திரக் கிரீவன், 'சிநேகிதா, இரணியகனே, எங்களோடே ஏன் பேச வில்லை?' என, இதைத் தன் சிநேகிதனுடைய தீங்குரலென் றறிந்து சந்தோஷத்தோடு கூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து, 'நான் புண்ணியவா னானதால் சித்திரக் கிரீவன் என்னும் மித்திரன் என் வீட்டுக்கு வந்தான். இவ் வுலகத்தில் மன மொத்த மித்திரனோடு சம்பாஷிப்பதிலும் வேறே ஆனந்த மேது?' என்று உபசாரஞ் சொல்லிப் பிறகு அதனுடைய அவஸ்தையைப் பார்த்து மிகவும் துக்கித்து, 'மித்திரா, நீ யாவரினும் மிக்க சமர்த்த னாயினையே; உனக்கு இப்படிப்பட்ட காரிய மெப்படி நேரிட்டது?' எனப் புறா, 'விதி வலிது; அதன் முன் யாருடைய உபாயம் நடக்கும்? கடல் பெருகி மேலிட்டால் அதற்குக் கரை யேது?' என, இரணியகன், 'இந்தப் பேச்சு மெய்யே; நூறு நாழிகை வழித் தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துகொண்டு போகின்ற நீ, இன்றைக்கு வேடன் வலையிற் பாராமல் சிக்கிக்கொண்டனையே பார். சந்திர சூரியர்களுக்கு இராகு கேதுக்களாற் பீடை வருதலும், யானையும், பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலும் தெய்வத்தின் மகிமையே யல்லாமல் வேறன்று,' என்று சொல்லிச் சித்திரக் கிரீவன் கட்டுண்டிருக்கின்ற வலைக் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது, சித்திரக் கிரீவன், 'மித்திரா, முன்னே என் பரிவாரத்தினுடைய் கயிற்றை யறு; பிறகு என் பாசத்தைத் துணி,' என்க் கேட்டு, எலி, 'என் பற்கள் மிகவும் மெதுவானவை; அவற்றிற்குப் பலமுங் கொஞ்சம். இத்தனை பெயருடைய பந்தனைகள் எனக்கெப்படி யறுபடும்? உன்றளையை யறுத்ததன் பின் என் சாமர்த்தியத்துக்குத் தக்கவாறு அவர்களுடைய தளைகளையும் அறுப்பேன்,' எனச் சித்திரக் கிரீவன், 'நல்லது; முன்னே இவர்களுடைய பாசத்தை யறு,' என இரணியகன், 'தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கிய சாதனமாகையால், அதைக் காப்பாற்றினுல் எல்லாவற்றையுங் காப்பாற்றினுற்போலாகின்றது,' எனச் சித்திரக் கிரீவன், 'இந்த நீதி சரிதான்; ஆயினும், இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம் பண்ணுவதற்காக வன்றோ என்னை இவர்கள் இராஜாவாக நினைக்கின்றார்கள்? ஆகையால், என் பிராணனிடத்து இச்சையை விட்டு இவர்களைப் பிழைப்பிப்பாய்,' என, அதைக் கேட்டு எலி, 'நீ பரம சாது; அடுத்தவர்களை யாதரிக்கின்றாய். எசமானனிடத்தில் விசுவாசமாய் இருக்கின்ற சேவகனும், சேவகனிடத்தில் பிரீதியா யிருக்கின்ற எசமானனும் சுக மடைவார்கள்,' என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துச் சித்திரக் கிரீவனுடைய கட்டையுஞ் சேதித்தது. பிறகு ஒன்றுக்கொன்று தழுவிக்கொண்டு பிரிய வார்த்தைகள் சொல்லின. சித்திரக் கிரீவன் பரிவாரத்தோடு கூடத் தன்னிடத்திற்குப் போயிற்று.

---

## ௩. சந்தி விக்கிரகம்

அல்லது

## அடுத்துக் கெடுத்தல்

காகம், "முன்னொரு முயலு மாந்தையுஞ் சண்டையிட்டுக் கூர்ம்பல்லனருகே போனவுடனே இரண்டையுமது கொன்ற தறியீரோ?" எனக் கேட்டுப் பறவைகள், காகத்தைப் பார்த்து, 'அஃதெப்படி?' எனக் காகஞ் சொல்லத் தொடங்கி, "முற்காலத்தில் நான் குடியிருந்த முதுமரப் பொந்தி லிருந்த கபிஞ்சலன் என்னுங் குருவியும் நானும் மாலைக் காலத்திற் பல பல பேச்சுக்கள் பேசிக்கொண்டு சுகித்திருக்கையி லொருநாள் அது வேறொரு பக்ஷியோடு கூடப்போய் மீண்டு வாராமையால் நான், 'ஐயோ! அவன் வலையிற் பட்டானோ, யாராவது கொன்றார்களோ தெரியவில்லையே! எப்போதும் வேறோரிடத்திற் றங்குகிறவனல்லவே!' என்றிப்படி விசனப்பட்டு வழி பார்த்துக் கொண் டிருக்கும்போது மூன்று நாள் அவன் பொந்திலொரு முயல் வந்து நான் பல பல விதமாய்த் தடுத்துச் சொல்லியும் கேளாமல் முரட்டுத் தனமாய்க் குடிபுகுந்தது. எங்கேயோ சில நாட் கபிஞ்சலன் மனதின்படியே நெற்களைத் தின்றுகொண் டிருந்து பிறகு தன்னிடத்துக்கு வந்து பார்க்கையில் தன் வீட்டில் முய லிருக்கக் கண்டு அதைப் பார்த்து, 'அடா சசமே, உனக்கென் வீட்டிலிருக்கை நன்றன்று; பொட்டெனப் புறப்பட்டுப் போ,' என, இதைக் கேட்டு முயல், 'அடா பேதாய், இஃது உன் வீடன்று; என் வீடே. வீணாகப் பொய் சொல்லிப் பயனில்லாமல் நட்பை யேனிழக்கின்றாய்? வாவி, கிணறு, குளம், கோயில், சத்திர மிவற்றின் சொத்துவம் அவற்றை விட்டு நீங்கின பிறகு அந்நீங்கினவனிடத்தி லிரா; மற்றுமொருவன் வீட்டைப் பிற னொருவன் பத்தாண்டளவு

மியாவரு மறிய வநுபவித்தால் அவ்வீடவனதே. இந்த விஷயத்திற் சாக்ஷியு மெழுத்தும் பிரமாண மாகா. இந் நியாயம் மனிதர்களிடத்தி லிருக்கின்றது. பறவைகளி லெது வலிதோ அது கைக் கொள்ளும், என்றிப்படித் தர்ம நியாய மிருக்கிறதனுல் வீடெனதே,' என, ஆந்தை, 'நீ தர்ம சாஸ்திரத்தைக் குறித்துப் பேசுகின்றமையால், நீயுநானுஞ் சாஸ்திரிகளிடத்திற் போய் இதைக் குறித்துக் கேட்டு அவர்கள் யாரை யிருக்கலா மென்கிறூர்களோ, அவர்களிருக்க வுடன் படுவோம்,' என்று சொல்லி நிச்சயித்து இரண்டும் விவாதம் பண்ணிக்கொண்டு போகையில், இவ்வழக்கெப்படி யாகிறதோ பார்க்கலா மென்று நானு மவர்களைத் தொடர்ந்து போனேன்.

"அங்கே கூர்ம்பல்லன் என்னும் பூனை இவற்றின் பேச்சைக் கேட்டு, 'இவர்கள் வழக்குத் தீர்ப்புக்குப் போகின்றூர்கள். இவர்களை மோசம் பண்ணவேண்டும்,' என்று நிச்சயித்து அந்த வழியிலாற்றங் கரையிற் கண்ணை மூடிக் கொண்டு சூரியனைப் பார்க்கிறது போல் அபிநயித்துக் கொண்டு, 'ஆ! ஆ!! இந்த நிசாரமான சமுசாரத்தி லுண்டாகிற வின்பம் கணத்தி லழிந்து கனுப்போற் பொய்யாகிறதினுற் றருமத்தை விட வேறே கதி யில்லை; அறத்தை விட்டெவன் நாட்களைக் கழிக்கின்றூனே அவன் மரப் பாவையை யொத்தவன். அவனை மூச்சு விட்டுக் கொண்டிருக்கையிற்றூனே பிணமென்றெண்ண வேண்டும். எப்படித் தயிரின் சாரம் நெய்யோ, எள்ளின் விசேஷ மெண்ணெயோ, அப்படியே பிழைத்திருக்கின்றதின் சாரம் தருமமாம். அதைத் துறந்து மிகவும் சோற்றைத் தின்றுகொண்டே காலங் கழிக்கின்றவர்கள் நிலச் சுமையா யிருக்கின்றூர்கள் என்று துக்கப்படுகின்றேன்.

'ஓ சனங்களே! தருமம் பல பல விடையூறுக ளோடுங் கூடிக்கொண்டிருக்கின்ற தாகையாற் சுருக்க

மாய்ச் சிறிது தருமஞ் சொல்லுகின்றேன்: பிறர்க்குதவி செய்வதற்கொத்த புண்ணியமும், பிறரை வருத்துவதை யொத்த பாவமு மில்லை. மேலும் தனக்குத் துன்பந் தருவது பிறனுக்குந் தரும் என்றிப்படித் தர்ம ரகசியங்களைக் கேட்டுள்ளத்தில் வைக்க வேண்டும்,' என, இப்படி அதன் வாக்கியத்தைக் கேட்டு முயல், 'கபிஞ்சலா, தருமஞ் சொல்லுகின்றவன் ஆற்றங்கரையி லுட்கார்ந்திருக்கின்றான் ; அவனைக் கேட்போம்,' என, கபிஞ்சலன், 'இவன் நமக்கியல்பான பகையாளி யாதலால் தூரத்திலிருந்தே சொல்ல வேண்டும்,' என்று நிருணயித்ததைப் பார்த்து, 'ஓ தபோ நிதியே! நீ அற முணர்ந்தவனாகையினா லெங்களிருவருடைய வழக்கைக் கேட்டுத் தருமநூற்படி நியாயஞ் சொல்லிப் பொய் சொல்லுகிறவனைக் கொல்லவேண்டும்,' என, இவ்வார்த்தையைக் கேட்டுப் பூனை காதின்மேற் கையை வைத்து, 'இப்படிப்பட்ட பேச்சு மறுபடி சொல்லாதேயுங்கள் ; நரகத்திற்குக் காரணமாகிய இதை விட்டு நான் அறத்தை யநுசரித்துக் கொண் டிருக்கிறேன். மேலும், கொலை செய்கிற புலி முதலானவற்றைக் கொல்லுகிறவர்களும் நரகத்திற்குப் போகிறார்க ளென்று சாதுக்கள் சொல்லுகிறார்கள். ஆனால், மற்றவர்களுக்குக் கொலையினால் நரகம் வரும் என்பதில் ஆச்சரிய மென்ன? யாக கருமத்தில் பசுவைக் கொல்லுகிறவர்கள் வேதத்தி லுள்ள பொருளை யறியாதவர்கள் ; அந்த விஷயத்தில் ஏழு வருடத்தின் நெல்லைக் கொண்டு வந்து ஓமம் பண்ண வேண்டு மென்று சொல்லியிருக்கின்றது. பசுக்களைக் கொன்றும் மரங்களை வெட்டியும் ஓமம் பண்ணிச் சுவர்க்கங் கிடைக்கிறதானால் நரகத்துக்கேன் போகின்றார்கள்? ஆதலால், இவை யெல்லாம் வஞ்சகர்களுடைய காரியம் என்றறிந்திருக்கின்றமையால், உங்களைச் சுத்தமாய்த் தின்னேன் ; உங்களுக்கு வழக்கு

மாத்திரம் தீர்ப்பேன். நான் கிழவ னானபடியினால் எனக்குத் தூரத்துச் சொற் கேளாது. நீங்கள் கிட்ட வந்து ஒருவர்க்கொருவர்க்கு இருக்கின்ற வழக்கென்னவோ அதைச் சொன்னாற் கேட்டு, இம்மைக்கு நலந்தருவதாகிய நடுவு நிலைமையாய்ச் சொல்லுவேன். ஆசையினா லாயினும், கோபத்தினாலாயினும், அநியாய தீர்ப்புச் சொல்லுகிறவன் நரகத்திற்போவான். ஆதலால், நீங்களென் காதினருகே வந்து உங்கள் வழக்கைத் தெரிவியுங்கள்,' என, அவை இப்பசப்பு வார்த்தையினால் அதனிடத்து நம்பிக்கை வைத்துக் கிட்டே வர அவற்றைக் கைகளினா லொருமிக்கச் சேர்த்துப் பிடித்து வழக்கற விரண்டையுந் தின்றது. ஆதலால், தீயோரைச் சேர்ந்தா லிப்படிக்கொத்த தீங்கு நேரிடுமென் றறிந்து செய்யத் தக்க தெதுவோ அதைச் செய்ய வேண்டும்,'' என்றது.

---

## ச. லப்தஹானி அல்லது பேறழிவு

கங்கைக் கரையில் நாவன் மரத்தின்மேற் சுமுகன் என்னு மொரு வானரஞ் சில காலம் வாசம் பண்ணிக் கொண்டிருக்கையில், அங்கே வந்த ஓரிளைத்த முதலையைப் பார்த்து, 'நீ என் கிருகத்துக்கு விருந்தாக வந்தமையா லுனக்கு நாவற்பழந் தருகின்றேன்,' என்று சில பழங் கொடுக்கத் தின்றத்தியந்த சந்தோஷத்துடனே தன் னிடத்திற்குப் போ யன்று தொடங்கித் தினந் தினம் வந்து நானா வார்த்தைகள் பேசிக்கொண் டிரண்டு மந்நி யோந்நியமா யிருக்கையில், ஒரு நாண் முதலை சில கனிகள் கொண்டு வந்து தன்னில்லாட்குக் கொடுக்க, அது தின்றக் கனி யமிர்தம்போ லிருக்கக் கண்டு தன் நாயகனைப் பார்த்து, 'பிராண நாதா, இந்தத் தித்திப்பான கனிக ளெங்கிருந்து கொண்டு வந்தாய்?' என, ஆண் முதலை,

'சுமுக னென்னு மென்னண்பன் எனக்கு நாடோறுங் கொடுக்க நானங்கேதானே அவற்றைப் புசித்துக் கொண்டு வந்தேன்; இன்றைக்குத் தின்று மிகுந்ததை யுனக்குக் கொணர்ந்தேன்,' என, இம்மொழிகளைக் கேட்டுப் பெண் முதலை, 'இத்தீங்கனி தின்பவனீரலமிர்தத்திற் கொப்பாயிருக்கும்; அதைக் கொணர்ந்தெனக்குக் கொடு; அதனால் நான் மூப்புச் சாக்கா டில்லாம லுன்னோடு நெடுங் காலஞ் சுகித்திருப்பேன்,' என, இதைக் கேட்டு முசலி, 'எனக்குயிர்க் குயிராயிருக்கின்ற நட்டோனாகிய வானரத் துக்கு நீயேனிந்தத் தீங்கு நினைக்கின்றாய்?' என, அது 'நானுனக் ககத்தியமா யிருந்தா லத னீரலைக் கொணர்ந்து கொடு; இல்லாவிட்டா னுனுயிர் வைத்துக்கொண் டிரேன்,' என, ஆண் முதலை, 'காதலியே, சகோதரனினும் மித்திர னதிகமாதலாலவனைக் குறித்துநீ அடம்பண்ணவேண்டா,' என்று மோவாய்க் கட்டையைப் பிடித்து வேண்டிக் கொள்ள, பெண் முதலை, 'நீ யென்றைக்கு மென் பேச் சுக்குக் குறுக்குச் சொன்ன தில்லை; இன்றைக்கு மாத் திர மெனக்குக் குறைச்சல் பண்ணுகின்றாய். ஆதலால், இதோ நான் சீவனை விடுகின்றேன்,' எனப் பிடிவாதஞ் செய்ய, கரா பெண்ணி னிச்சயத்தை யறிந்து, 'அச் சுமுகன் எனக்குக் கொல்லக் கூடாதவனா யிருக்கின்றான். நீயோ பிடித்ததை விடாம லிருக்கின்றாய்; ஆதலால், நானிரு தலைக் கொள்ளி எறும்புபோ லாயினேன்," என்று இங் ஙனஞ் சொல்லிச் சுமுகனிடத்திற்குப் போயிற்று. அப்போது சுமுகன், 'நண்பனே, இன்றைக்கேன் விசனமா யிருக்கின்றாய்?' என, முதலை, 'மற்றொன்று மில்லை; உன் மச்சினிச்சி யென்னைப் பார்த்து, 'துஷ்டா, நன்றி கெட்டவனே, நீ யாரேலே சீவனம் பண்ணு கின்றாயோ அவனை ஒரு நாளைக்காயினும் நமது வீட்டிற் கழைத்து வந்து விருந்திட வேண்டாவா? அவன் வீட்

டுக்கு மாத்திரம் வெட்கமில்லாமற் போய்ப் போய் நல்ல பழங்களைத் தின்னுகின்றாயே!' என்றிப்படித் திட்டிக் கோபித்தாள். ஆதலால், நீ என் வீட்டுக்கு வா. உன்னைக் குறித்துப் பல பல பதார்த்தங்க டேடி வைத்துக் கொண்டு வழிபார்த் துட்கார்ந்துகொண் டிருக்கின்றாள்,' என, வானரம், 'நண்பனே, எனக்குத் தண்ணீரில் வரக் கூடாது. நீ என் பிரிய முள்ள மச்சினியை இங்கே கூட்டிக்கொண்டு வா,' என, மகரம், 'சுமுகனே, நான் கங்கைக் கரையி லிருக்கின்றேன். நீ யென் முதுகின்மே லுட்கார்ந்துகொண்டுவா; நோவாமற் கொண்டு போவேன்,' என, அதில் நம்பிக்கை வைத்துக் குரங்கப்படியே யுட்கார்ந்துகொண்ட மாத்திரத்தில் முதலை தண்ணீரில் குதித்துப் போகையில் வானரம், 'எனக்கச்சமா யிருக்கின்றது; மெள்ள மெள்ள நட,' என்றது.

அதைக் கேட்டு முதலை, 'இப்போது சுமுகன் நம்முடைய சுவாதீனத்தி லிருக்கின்றான்; இனி இவனுக்கு நங்கருத்தை வெளி யிடுவதற்குக் குறை யென்ன விருக்கின்றது? உரலி லகப்பட்ட துலக்கைக்குத் தப்புமா?' என விங்ஙனந் தனக்குட் டீர்மானித்துக் கொண்டு, 'மித்திரா, உன்னிஷ்ட தேவதையை நினை; பெண்சாதியின் பிடிவாதத்தால் உன்னைக் கொல்லக் கொண்டுபோகின்றேன்,' எனக் குரங்கு, 'நானென்ன பிழை செய்தேன்?' என, முதலை, 'நீ நேற்றுக் கொடுத்த நறுங்கனியை யென் மனைவி தின்றதன்மேல், 'இத்தகைய தீங்கனியைத் தினந் தின்னுகின்ற பாக்கியவா னீரல் கேவலம் அமிழ்தத்தை யொத்திருக்கும். ஆதலால், நீ யவனீரலைக் கொணர்ந்து கொடாவிடில் நான் பிராணனை வைத்திரேன்,' என்றாள். அதைக் குறித்துத்தான் உன்னைக் கொண்டு போகின்றேன்,' என, அதைக் கேட்டு வானரம், 'ஓகோ! இப்படி யென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்

அந்த மரத்தின்மே லொளித்து வைத்திருக்கின்ற அந்த ஈரலை யுனக்கங்கேயே கொடுத்திருப்பேன்; வெறு மிருதயத்தோ டிருக்கையி லென்னை வீணாகக் கொண்டு வந்தாய்,' எனக் கிலேசப்பட, அப்போது மகரம், 'என் பிராண மித்திரா, அதைக் கொடுத்தாலவள் சந்தோஷ மாவாள்,' என்று சொல்லி வானரத்தை யதி சீக்கிரத்தில் முன்னிடத்திற் கொண்டு வந்து விட்டவுடனே வானரங் குதித்து மரத்தின்மே லேறிக்கொண்டு, 'இன்றைக்குக் காலன் கையிலிருந்து விடுபட்டேன்,' என்று எண்ணிக் கொண் டிருக்கையில், முதலை, 'மித்திரா, ஈரலைச் சுருக் காய்க் கொடு; உன்னண்ணியாருக்குக் கொடுத்துவிட்டு வருகின்றேன்,' எனக் கேட்டு வானரம் நகைத்து, 'மூடா, துஷ்டா, ஈரல் உடம்பைவிட் டிருக்குமா? அஃ திருக்கட்டும்; நீ விசுவாச காதக னாதலா லிங்கிருக்க வேண்டா; சீக்கிரத்திற் புறப்பட்டுப் போ. உன்னைப் பார்க்க வென் கண் நாணுகின்றது,' என்றது.

முற்றிற்று

84979

Printed by Penrose & Co., 19, Sunkurama Chetty Street, G. T., Madras.

ரற்கள்

பற்
ரு
ஞ்
ாக்
று
ங்
ருக்
ண
யில்

அணா 10

இது
ம்—
ரிய
யும்
பார
யது.

(அச்சில்)

பிள்ளை
ர்க்கும்
பொழு
பாருள்
கேற்ற
.
பில் வெளிவரும்

லிமிடெட்
சென்னை